




# தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com








CHENNAI | Volume- 3 | Issue:209 | 13-02-2026 | வெள்ளிக்கிழமை | Free E- Paper | ● சென்னை ● மதுரை ● கோவை ● திருச்சி


## இன்றைய பஞ்சாங்கம்

13.02.2026 மாசி 1
வெள்ளிக்கிழமை

---

சூரிய உதயம் 6.35

---

திதி:
இன்று மாலை 3.11 வரை ஏகாதசி பின்பு துவாதசி.

---

நட்சத்திரம்:
இன்று மாலை 5.00 வரை மூலம் பின்பு பூராடம்.

---

யோகம் :
இன்று அதிகாலை 4.01 வரை ஹர்ஷனம் பின்பு வஜ்ரம்

---

கரணம் :
இன்று அதிகாலை 2.15 வரை பவம் பின்பு மாலை 3.11 வரை பாலவம் பின்பு கௌலவம்.

---

அமிர்தாதி யோகம் :
இன்று காலை 6.34 வரை சித்த யோகம் பின்பு மாலை.5.00 வரை அமிர்த யோகம் பின்பு சித்த யோகம்.

---

சந்திராஷ்டமம்
இன்று மாலை 5.00 வரை கார்த்திகை பின்பு ரோகிணி.

---

நல்ல நேரம்
காலை 9.30 – 10.30.
மாலை 5.00 – 6.00
இராகு காலம்
காலை 10.30 – 12.00.
எமகண்டம்
பிற்பகல் 3.00 – 4.30.

---

குளிகை
காலை 7.30 – 9.00.

---

இன்று சுபமுகூர்த்த நாள்.

---

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
இராமமூர்த்தி
செல்: 8189908040

# ரூ.36,968 கோடி முதலீட்டில் 71 புதிய திட்டங்கள்

## முதலமைச்சர் அடிக்கல் நாட்டினார்

**சென்னை, பிப்.13:** முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் இன்று, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் சென்னையில் நடைபெற்ற புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செயலாக்க மாநாட்டில், 36,968 கோடி ரூபாய் முதலீட்டில் 60,823 நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கிடும் வகையில் 71 புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார். மேலும் 31,934 கோடி ரூபாய் முதலீட்டில் 82,664 நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கிடும் வகையில் 52 முடிவுற்ற திட்டங்களைத் தொடங்கி வைத்தார்.

மேலும், 5,000 கோடி ரூபாய் உறுதியளிக்கப்பட்ட முதலீடு மற்றும் 5000 நபர்களுக்கு உறுதியளிக்கப்பட்ட வேலை வாய்ப்பு என்ற வகையில், 2 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

தூத்துக்குடி காய்னீஸ் (Kaynes) டெக்னாலஜீஸ் நிறுவனத்துடன் பிரிண்டட் சர்க்யூட் போர்ட்ஸ் (PCB), HDI PCB, பிளக்சிபிள் PCB உற்பத்தி திட்டத்திற்கான (இதன்மூலம், தூத்துக்குடி ஒரு மிகப்பெரிய மின்னணு உற்பத்தி



மையமாக உருவாகும்.)

ஆஸ்ட்ரா ஜெனிகா (Astra Zeneca) நிறுவனத்தின் உலகளாவிய திறன் மைய விரிவாக்கத்தைத் துவக்கி வைத்தார்.

**ஜெர்மன் அரசுடன்...**

முதலமைச்சரின் ஜெர்மனி அரசுப் பயணத்தின்போது, Knorr Bremse நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.ரயில்வேத் துறையில், ஈர்க்கப்பட்டுள்ள மிகப்பெரிய திட்டமாகும் இது. ரயில்களுக்கான, கதவுகள் மற்றும் பிரேக்குகள் உற்பத்தி செய்வதற்கும், தொழில்நுட்ப உற்பத்தி மையம் மற்றும் செயற்கை நுண்ணறிவு மையம் என்று பல்வேறு திட்டங்களில், இந்நிறுவனம் முதலீடு மேற்கொள்ள உள்ளது. சிப்காட் மாம்பாக்கம் தொழிற்பூங்காவில் இதன் உற்பத்தி திட்டத்திற்கான அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டுள்ளது.

டாபர் நிறுவனம், திண்டிவனத்தில் நிறுவ உள்ளன. பல்வேறு பொருட்களை உற்பத்தி செய்யவும் இத்திட்டத்திற்கு அடிக்கல்.

மேம்பட்ட மின்னணுவியல் துறையில், முன்னணி நிறுவனமான VVDN நிறுவனம், பொள்ளாச்சியில் தன்னுடைய திட்டத்தை பெரிய அளவில் நிறுவியுள்ளது. இதில் சிறப்பம்சம் என்னவென்றால், பொள்ளாச்சி மற்றும் சுற்றுப்புறப் பகுதிகளைச் சேர்ந்த பெண்களுக்கு சிறப்பு பயிற்சிகள் அளிக்கப்பட்டு, இந்நிறுவனத்தில் பெருமளவில் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

டாடா குழுமத்தைச் சேர்ந்த டாடா சால்ட் நிறுவனம், ராமநாதபுரம் மாவட்டத்தில், சிப்காட் வாலிநோக்கத்தில், அமைக்கும்திட்டத்திற்கு அடிக்கல்.

உலகப் புகழ்பெற்ற நிறுவனமான ஜான்சன் எலக்ட்ரிக் நிறுவனம், மோட்டார்கள், மோட்டார் வாகன மின்னணுப் பொருட்கள், உயர்தர காந்தப் பொருட்கள் ஆகியவற்றின் உற்பத்திக்காக, ராணிப்பேட்டை சிப்காட் பனப்பாக்கம் வளாகத்தில், திட்டத்திற்கு அடிக்கல்.

இன்றையதினம், அடிக்கல் நாட்டப்பட்ட மற்றும் தொடங்கப்பட்ட திட்டங்கள், ராமநாதபுரம், தூத்துக்குடி, திருச்சி, விழுப்புரம், தர்மபுரி, ராணிப்பேட்டை, திருப்பத்தூர், கோயம்புத்தூர், நாமக்கல், ஈரோடு உள்ளிட்ட மாநிலத்தின் பல்வேறு மாவட்டங்களில் பரவலாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**7 ஆயிரம் மாணவர்களுக்கு திறன் பயிற்சி**

முதலமைச்சர் முன்னிலையில் பாரத் பயோடெக் நிறுவனம், 5000 கோடி ரூபாய் முதலீடு மற்றும் 5000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு என்ற வகையில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் அமைக்க உள்ள உயிரியல் மற்றும் மருந்துகள் உற்பத்தி திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மற்றும் ஹுண்டாய் மோட்டார் இந்தியா ஃபவுண்டேஷன் நிறுவனம், 7000 மாணவர்களுக்கு திறன்பயிற்சி மேற்கொள்ளும் திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஆகிய 2 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

இந்நிகழ்ச்சியில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், மாநில திட்டக் குழுவின் செயல் துணைத் தலைவர் ஜெ. ஜெயரஞ்சன், வர்த்தகத் துறை செயலாளர் வி.அருண்ராய், தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் தாரேஸ் அகமது, ஓம்ரான் ஹெல்த்கேர் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் டாகுடோ ஐவானகா, B.I.G. டெக் நிறுவனத்தின் முதன்மை செயல் அலுவலர் ராஜு பாண்டியன், நார் பிரெம்ஸ் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மார்கஸ் பெர், பாரத் பயோ டெக் நிறுவனத்தின் செயல் தலைவர் கிருஷ்ணா எல்லா, டாபர் நிறுவனத்தின் முதன்மை செயல் அலுவலர் மோகித் மல்கோத்ரா உள்ளிட்ட தொழில் நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

# புதிய பிரதமர் அலுவலகம் "சேவா தீர்த்": இன்று திறந்து வைக்கிறார் பிரதமர் மோடி!

**புதுடில்லி, பிப். 13:** தலைநகர் புது தில்லியில் பிரதமர் அலுவலகத்தின் புதிய கட்டடமான சேவா தீர்த் மற்றும் கர்த்தவ்ய பவன் 1 மற்றும் 2ஐ பிரதமர் நரேந்திர மோடி பிப்ரவரி 13 ஆம் தேதி (இன்று) திறந்துவைப்பார் என பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக பிரதமர் அலுவலகம் வெளியிட்ட அறிக்கையில், தலைநகர் தில்லியில் அரசுக் கட்டடங்களை மறுநிர்மாணம் செய்யும் பணி நடைபெற்று வந்தது. அதன் ஒரு பகுதியாகப் பிரதமர் அலுவலகத்துக்கு புதிய கட்டடம் கட்டப்பட்டுள்ளது. தற்போது கட்டுமானப் பணி நிறைவடைந்துள்ளது.

இதற்கு முன்னதாக பல ஆண்டுகளாக இருந்த அரசு அலுவலகங்கள் சிதிலமடைந்த நிலையில், மிகப் பழமையான உள்கட்டமைப்பில்




செயல்பட்டன. இதனால் செயல்பாட்டுத்திறமையின்மை, ஒருங்கிணைப்பு சவால்கள், அதிகரிக்கும் பராமரிப்பு செலவுகள் என பணிச் சூழல்களுக்கு உகந்ததாக இல்லாமல் இருந்தது.

அதனடிப்படையில், புதிய கட்டட வளாகங்கள் நவீன, எதிர்காலத்திற்கு உகந்த வசதிகளுடன் நிர்வாக செயல்பாடுகளை ஒருங்கிணைக்கும் வகையில் கட்டப்பட்டுள்ளது.

இந்தக் கட்டடத்தில் பிரதமர் அலுவலகம் மட்டுமின்றி மத்திய அமைச்சரவை செயலகம், தேசியப் பாதுகாப்பு கவுன்சில் செயலகம் மற்றும் வெளிநாட்டுத் தலைவர்களுடன்பேச்சுவார்த்தை நடத்துவதற்கான இந்தியா ஹவுஸ் ஆகியவை இடம்பெறும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன. முன்னதாக இது வெவ்வேறு இடங்களில் அமைந்திருந்தன.

இந்த நிலையில், பிரதமர் அலுவலகத்தின் புதிய கட்டடத்தின் பெயர் "சேவா தீர்த்" (சேவைத் தலம்) என்றும், கர்த்தவ்ய பவன் (மத்திய அரசின் தலைமைச் செயலகம்) என்றும் அழைக்கப்படுகிறது.

மேலும், கர்த்தவ்ய பவன் 1 மற்றும் 2ல் சட்டம், பாதுகாப்பு, நிதி, சுகாதாரம், விவசாயம் மற்றும் பல முக்கிய அமைச்சகங்களை உள்ளடக்கியுள்ளன.

இரண்டு கட்டட வளாகங்களும் டிஜிட்டல் முறையில் ஒருங்கிணைக்கப்பட்ட அலுவலகங்கள், கட்டமைக்கப்பட்ட பொது இடைமுக மண்டலங்கள் மற்றும் வரவேற்பு வசதிகளைக் கொண்டுள்ளன. இவ்வாறு பிரதமர் அலுவலக அறிக்கை வெளியிட்டுள்ளது.

# சேலத்தில் த.வெ.க. நிர்வாகிகள் சந்திப்பு கூட்டம்: 4998 பேர் மட்டும் அனுமதி

**சென்னை, பிப். 13:** சேலத்தில் நடைபெறும் த.வெ.க. நிர்வாகிகள் சந்திப்பு நிகழ்ச்சிக்கு நுழைவுச்சீட்டு வழங்கப்பட்டுள்ள 4998 பேர் மட்டும் அனுமதிக்கப்படுவார்கள் என்று புஸ்ஸி ஆனந்த் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக த.வெ.க. பொதுச்செயலாளர் புஸ்ஸி ஆனந்த் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவத:

தமிழக வெற்றிக் கழகத் தலைவர் கலந்துகொள்ளும் கழக நிர்வாகிகள் சந்திப்பு மற்றும் தேர்தல் பரப்புரை நிகழ்ச்சி, (பிப்ரவரி 13ம் தேதி) வெள்ளிக்கிழமை அன்று, சேலம் சீலநாயக்கன்பட்டி, கேவிபி கார்டன் உள்வளாகத்தில், மதியம் 12.00 மணி முதல் 3.00 மணிக்குள் நடைபெற உள்ளது. காவல் துறை அனுமதிக்கான வழிகாட்டு நெறிமுறைகளின்படி இந்த நிகழ்ச்சியானது முழுக்க முழுக்க அனுமதி பெற்றவர்களுக்கான சந்திப்பு நிகழ்ச்சியாக மாவட்ட நிர்வாகிகளால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.






## நாடு முழுவதும் தொழிற்சங்கங்கள் போராட்டம்

**சென்னை, பிப்.13:** மத்திய அரசின் விவசாயம், தொழிலாளர் மற்றும் பொருளாதாரக்கொள்கைகளை எதிர்த்து நாடு முழுவதும் தொழிற் சங்கங்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். கேரளாவில் போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டது. தமிழகத்தின் பல்வேறுபகுதிகளில்ரெயில் மறியல் போராட்டம் நடத்தியவர்கள் கைது செய்யப்பட்டனர்.

பழைய தொழிலாளர் சட்டங்களை நீக்கிவிட்டு நவம்பர் 2025-இல் அறிவிக்கப்பட்ட நான்கு புதிய தொழிலாளர் சட்டத் தொகுப்புகளை ரத்து செய்ய வேண்டும், அணுசக்தி துறையை தனியாருக்கு திறந்து விடும் ஷாந்தி சட்டம், மின்சாரத் திருத்த சட்டம், விவசாயிகளை பாதிக்கும் வரைவு விதை மசோதா ஆகியவற்றை திரும்பப் பெற வேண்டும். வி.பி.ஜி ராம் ஜி சட்டத்தை ரத்து செய்து, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தை மீண்டும் பழையபடி அமல்படுத்த வேண்டும். அமெரிக்காவுடனான இடைக்கால வர்த்தக ஒப்பந்தத்தை கைவிட வேண்டும் மற்றும் விவசாய விளை பொருட்களுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலையை உறுதி செய்ய வேண்டும், விக்சித் பாரத் - கிராமின் மிஷன் 2025 சட்டத்தை ரத்து செய்து, இளைஞர்களுக்கு முறையான வேலைவாய்ப்புகளை உருவாக்க வேண்டும்,

# ரூ. 3.25 லட்சம் கோடியில் 114 ரஃபேல் விமானங்களை வாங்கும் இந்தியா

**புதுடில்லி, பிப். 13:** மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் 114 ரஃபேல் விமானங்களை வாங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த மாத இறுதியில் பிரான்ஸ் அதிபர் இமானுவேல் மேக்ரான் இந்தியாவுக்கு வருகை தரும்போது ஒப்பந்தம் கையெழுத்தாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த டசால்ட் ஏவியேஷன் நிறுவனம் ரஃபேல் போர் விமானங்களை தயாரித்து வருகின்றது. அந்நிறுவனத்திடம் இருந்து வாங்கப்பட்ட 36 ரஃபேல் விமானங்களை இந்திய விமானப் படை பயன்படுத்தி




வருகின்றது.இதனிடையே, கடந்தாண்டு ஏப்ரல் மாதம் இந்திய கடற்படையின் பயன்பாட்டுக்காக 26 ரஃபேல் விமானங்களை வாங்க ஒப்பந்தம் கையெழுத்தானது.

இந்த நிலையில், நாட்டின் மேற்கு மற்றும் வடக்கு எல்லைகளில் அதிகரித்து வரும் அச்சுறுத்தல் காரணமாக கூடுதல் போர் விமானங்களை வாங்குவதற்கான பணிகளை மத்திய பாதுகாப்புத் துறை தொடங்கியது.இதுதொடர்பாக டசால்ட் ஏவியேஷன் நிறுவனத்திடம்பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வந்த நிலையில், ரூ. 3.25 லட்சம் கோடியில் 114 ரஃபேல் விமானங்களை கொள்முதல் செய்வதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த ஒப்பந்தத்தின் கீழ் 18 ரஃபேல் விமானங்கள் பறக்கும் நிலையில் வழங்கப்படும் என்றும், மீதமுள்ள 96 விமானங்கள் மேக் இன் இந்தியா திட்டத்தின் கீழ் உள்நாட்டில் பொருத்தப்படும் என்றும் கூறப்படுகிறது.

இதில், 88 ஒற்றை இருக்கை விமானங்களும், 26 இரட்டை இருக்கை விமானங்களும் கொள்முதல் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

# திருக்குறள் குறள்-529

**தமராகித் தற்றுறந்தார் சுற்றம் அமராமைக்
காரண மின்றி வரும்**



முன் சுற்றத்தாராக இருந்து பின் ஒருக் காரணத்தால் பிரிந்தவரின் உறவு, அவ்வாறு அவர் பொருந்தாமலிருந்த காரணம் நீங்கியபின் தானே வந்து சேரும்.

## சிந்திக்க ஒரு நொடி



தன்னைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முடியாத எந்த மனிதனும்..

உயர்ந்ததாக சரித்திரம் இல்லை

**ஆர்.சுந்தரராஜன்**
சிதம்பரம்-608001.

## போளூர் தேசம் தழுவிய வேலை நிறுத்தத்தை ஆதரித்து மறியல் போராட்டம்



போளூரில் அனைத்து தொழிற்சங்கங்கள் சார்பில் தேசம் தழுவிய வேலை நிறுத்தத்தை ஆதரித்து எல்ஐசி அலுவலகம் எதிரில்காலை10.30மணிக்கு பேரணி புறப்பட்டது. அஞ்சல் அலுவலகம் முன்பு மறியல் போராட்டம் நடைபெற்றது. மறியல் போராட்டம் தலைமை வெங்கடேசன் பி கிருஷ்ணமூர்த்தி பன்னீர்செல்வம். முன்னிலை ரவி தாசன், தாமோதரன். கண்டன உரை மாதேஸ்வரன். நாகராஜ் பி கிருஷ்ணமூர்த்தி செல்வம் ரவி ராஜன் மஞ்சுளா மற்றும் கிளை நிர்வாகிகள்அனைத்து தொழிற்சங்க நிர்வாகிகள் மறியல் போராட்டத்தில் கலந்து கொண்டார்கள். மறியலில் ஈடுபட்ட அனைவரும் காவல்துறையால் கைது செய்யப்பட்டு தனியார் மண்டபத்தில் வைக்கப்பட்டார்கள்.

## செங்கரைப்பாளையம் அறிவு திருக்கோவிலில் அகத்தாய்வு சான்றிதழ்



ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி வட்டம், துய்யம்பூந்துறைக் கிராமம், செங்கரைப்பாளையம் மனவளக்கலை மன்ற அறிவித்திருக்கோவிலில் கடந்த ஒருவார காலமாக முதல்நிலை அகத்தாய்வு வகுப்புகள் பேராசிரியர் ஆர்.பாலமுருகன் அவர்கள் நடத்தி வந்தார். 12.02.2026 வியாழக்கிழமை அகத்தாய்வு வகுப்பு நிறைவுற்றது.

## வாடிப்பட்டியில் தி.மு.க.வினர் ஆர்ப்பாட்டம்




**வாடிப்பட்டி, பிப்.13:**
மதுரை மாவட்டம் வாடிப்பட்டியில் சோழவந்தான் தொகுதி தி.மு.க. சார்பாக மத்திய பட்ஜெட்டில் தமிழ்நாட்டை வஞ்சித்த மத்திய அரசை கண்டித்து ஸ்டேட் பேங்க் முன்பாக ஆர்ப்பாட்டம் நடந்தது. இந்த ஆர்ப்பாட்டத்திற்கு வெங்கடேசன் எம்.எல். ஏ தலைமை தாங்கி தொடங்கி வைத்தார். மாநில பொதுக்குழு உறுப்பினர் சேகர், பேரூர் செயலாளர்கள் பால்பாண்டி, சத்திய பிரகாஷ், ஒன்றிய செயலாளர்கள் பால ராஜேந்திரன், பசும்பொன்மாறன், வழக்கறிஞர் கோகுல்நாத், அவைத் தலைவர் திரவியம், சோழவந்தான் பேரூராட்சித் தலைவர் ஜெயராமன், பேரூராட்சி துணைத் தலைவர் கார்த்திக், கவுன்சிலர் ஜெயகாந் தன், மருதுபாண்டி, முருகன், எல்.எல்.அய்யாவு, முரளி, மகேஷ், இ.காங்கிரஸ் கமிட்டி நகர தலைவர் முருகானந்தம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## திசையன்விளை மனோ கல்லூரியில் “உண்மைச் சரிபார்ப்பு விழிப்புணர்வு பயிற்சி”



**திசையன்விளை, பிப்.13:**
திசையன்விளை மனோன் மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக கல்லூரி நாட்டு நலப்பணி திட்டம் *(NSS)* சார்பில் “உண்மைச் சரிபார்ப்பு விழிப்புணர்வு பயிற்சி” நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது. கல்லூரி முதல்வர் முனைவர் லில்லி அவர்களின் ஆலோசனைப்படி இந்நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டது.

தமிழ்நாடு தகவல் சரிபார்ப்பகத்தின் *(Tamil Nadu Fact Check Unit)* வழிமுறைகளை பின்பற்றி மாணவர்களுக்கு விரிவான விளக்கங்கள் வழங்கப்பட்டன. தகவல் அறிதிறன் *(Information Literacy)*, தவறான தகவல்களின் வகைகள் திட்டமிட்ட பிறழ்தகவல் *(Disinformation)*, உள்நோக்கமற்ற பிறழ்தகவல் *(Misinformation)*, திரிக்கப்பட்ட தகவல் *(Misleading Information)* ஆகியவை தெளிவாக எடுத்துரைக்கப்பட்டன.

மேலும் போலிச் செய்திகளை *(Fake News)* எவ்வாறு கண்டறிவது, அதன் சமூக விளைவுகள், வெறுப்பு பேச்சின் *(Hate Speech)* தாக்கங்கள், அறிவியல் மனப்பாங்கின் அவசியம் மற்றும் இணைய பாதுகாப்பு *(Cyber Safety)* குறித்த விழிப்புணர்வு அம்சங்களும் விளக்கமாக கூறப்பட்டன.

நிகழ்ச்சியில் வணிகவியல் துறை தலைவர் முனைவர் ஒயிட்டன் சகாயராஜ், பேராசிரியர்கள் முனைவர் ஜெயஸ்ரீ, யமுனா, முனைவர் இந்துமதி, முனைவர் ஆனந்தவேணி, முனைவர் முருகன், சுப்ரமணியன், பட்டு, சூர்யா மற்றும் மேனிஷா ஆகியோர் கலந்துகொண்டு தகவல் சரிபார்ப்பதின் அவசியத்தையும், சமூக ஊடகங்களில் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டிய முக்கியத்துவத்தையும் வலியுறுத்தினர்.

நிகழ்ச்சியின் முக்கிய சாராம்சத்தை நாட்டு நலப்பணி திட்ட அலுவலர் முனைவர் பலவேசகிருஷ்ணன் அவர்கள் எடுத்துரைத்து, “நம்புவதற்கு முன் சிந்திக்கவும்; பகிர்வதற்கு முன் சரிபார்க்கவும்” என்ற கருத்தை மாணவர்களுக்கு வலியுறுத்தினார். மாணவர்கள் சமூகத்தில் பொறுப்பான டிஜிட்டல் குடிமக்களாக உருவாக வேண்டியதன் அவசியத்தையும் அவர் எடுத்துரைத்தார்.

மாணவர்களுக்கு பயனுள்ள வகையில் அமைந்த இந்த நிகழ்ச்சி, தகவல் சரிபார்ப்பின் முக்கியத்துவத்தை உணர்த்தியதோடு, மாணவர் மத்தியில் மிகுந்த உற்சாகத்தையும் விழிப்புணர்வையும் ஏற்படுத்தியது.

## இராஜா நந்திவர்மன் கல்லூரியில் நாட்டு நலப்பணி திட்டம் தொடக்க விழா..!



**வந்தவாசி, பிப். 13:**
திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி அடுத்த தெள்ளார் இராஜா நந்திவர்மன் கலை, அறிவியல் கல்லூரியில் திருவள்ளுவர் பல்கலைக்கழகமும், இராஜா நந்திவர்மன் கலை அறிவியல் கல்லூரி நாட்டு நலப்பணித் திட்டமும் இணைந்து நடத்திய சிறப்பு முகாம் தொடக்க விழா வளாகத்தில் நடைபெற்றது.

இவ்விழாவில் கல்லூரித் தலைவர் கலைமாமணி முனைவர் வி.முத்து பங்கேற்று குத்து விளக்கு ஏற்றி, முகாமைத் தொடங்கி வைத்தார். இவ்விழாவில் ஓய்வு பெற்ற காவல்துறை ஏடிஜிபி ஜம்புகுமார் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்.

மேலும் கல்லூரி பொருளாளர் எஸ். பழனிச்சாமி முன்னிலை வகித்தார். கல்லூரி முதல்வர் முனைவர் இரா.ஏழுமலை வரவேற்புரை ஆற்றினார். இத்தொடக்க விழாவில் கல்லூரி இயக்குனர்கள் எஸ். அப்பாண்டைராஜன், ஆனந்தன், ராதா, மணி, சிவசங்கரன் மற்றும் ஸ்ரீகிருஷ்ணா கல்வி மைய முதல்வர் சீனிவாசன், குறும்பட துணை இயக்குநர் முகமது ஜியா ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியை என்எஸ்எஸ் திட்ட ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் ஜெயப்பிரகாஷ் ஏற்பாடு செய்திருந்தார். விழாவில் அலகு-1, அலகு -2 என இரண்டு குழுக்களாக 100 மாணவர்கள் பங்கேற்றனர். விழாவின் ஒரு பகுதியாக கல்லூரி வளாகத்தில் மரக்கன்று நட்டு நலப்பணித்திட்ட செயல்பாட்டை தொடங்கி வைத்தனர்.

**பா.சீனிவாசன்,வந்தவாசி.**

## போட்டியிட விரும்பும் தொகுதிகளின் உத்தேச பட்டியல்



தி.மு.க. கூட்டணியில் மதிமுக போட்டியிட விரும்பும் தொகுதிகளின் உத்தேச பட்டியலைத் முதல்வர் ஸ்டாலினிடம் பொதுச் செயலாளர் வைகோ, துரைவைகோ வழங்கினர். உடன் துணை முதல்வர் உதயநிதி.

## 25வது அறிவியல் ஆலோசனை குழு கூட்டம்



திருவண்ணாமலை மாவட்டம், வெம்பாக்கம் ஊராட்சி ஒன்றியம் கீழ் நெல்லியில் வேளாண் அறிவியல் மையம் செயல்பட்டு வருகின்றது. இங்கு நேற்று 25வது அறிவியல் ஆலோசனை குழு கூட்டம் நடைபெற்றது.

## பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவி



தொண்டாமுத்தூர் சட்டமன்றத் தொகுதி, ஆலாந்துறையில் நடந்த விழாவில் கலந்துகொண்டு,பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகளை முன்னாள் அமைச்சர் வேலுமணி வழங்கினார்.

## பல்நோக்கு சிறப்பு மருத்துவ முகாம்



சேலம் சோளம்பள்ளம் சின்மயா வித்யாலயா மேல்நிலைப் பள்ளியில் நலம் காக்கும் ஸ்டாலின் பல்நோக்கு சிறப்பு மருத்துவ முகாமினை அமைச்சர் ராஜேந்தரன் பார்வையிட்டு, நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

## மாணவர்களுக்கான செய்முறை தேர்வுகள்



மாநிலம் முழுவதும் நடப்பு கல்வியாண்டில் 12-ஆம் வகுப்பு பொதுத்தேர்வு எழுதவுள்ள மாணவர்களுக்கான செய்முறை தேர்வுகள் நடந்து வருகின்றன. திருவல்லிக்கேணி லேடி வெலிங்டன் அரசு மாதிரி பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் நேற்று மாணவர்களை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி சந்தித்து வாழ்த்துகள் தெரிவித்தார்.

## கேப்டன் ஆலயத்தில் பிரேமலதா சிறப்பு பூஜை



தேமுதிகவின் 26 ம் ஆண்டு கொடி நாள் முன்னிட்டு கேப்டன் ஆலயத்தில் நேற்று பொதுச்செயலாளர் பிரேமலதா சிறப்பு பூஜை நடத்தினார்.

## சீர்காழி சபாநாயக முதலியார் இந்து மெட்ரிக் பள்ளியில் தாத்தா பாட்டிகள் தின விழா



**சீர்காழி , பிப், 13:**
மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி கடைவீதியில் உள்ள சபாநாயக முதலியார் இந்து மெட்ரிக் பள்ளியில் தாத்தா பாட்டிகள் தின விழா நடைபெற்றது.

இவ்விழாவினையொட்டி தாத்தாக்களுக்கு ஒரு விளையாட்டுப் போட்டியும் பாட்டிகளுக்கு கோலப் போட்டியும் நடைபெற்றது. இரு போட்டிகளிலும் பங்கெடுத்துக் கொண்ட அனைவருக்கும் ஆறுதல் பரிசுகள் வழங்கப்பட்டன. மாலையில் நடைபெற்ற விழாவிற்கு பள்ளி செயலர் சொக்கலிங்கம் தலைமை தாங்கினார்.

பேராசிரியர் வீழிநாதன், பள்ளிக்குழு தலைவர் சின்னையா, நிர்வாக குழு உறுப்பினர் டாக்டர் சதாசிவன், பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர் கபாலி ஆகியோர் உரையாற்றினார்கள். பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

பள்ளியின் நிர்வாக அலுவலர் தங்கவேலு வரவேற்புரை நிகழ்த்தினார். முதல்வர் தங்கதுரை நன்றி கூறினார்.

உதவி முதல்வர்கள் கிரிஜாபாய், மாதவன், தமிழரசன், உஷா மற்றும் ஆசிரியர்கள் விழா நிகழ்ச்சிகளை நடத்தினர். இறுதியாக மாணவ, மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

இதில் ஒரு சிறப்பு அம்சம். பள்ளி மாணவிகளின் பாட்டிகளும் அம்மாக்களும் இணைந்து கோலாட்ட நிகழ்ச்சியை நடத்தினார்கள். திரளான பெற்றோர்களும், தாத்தா பாட்டிகளும் இந்த விழாவில் பங்கு கொண்டனர்.

## ஜமுனாமரத்தூர் - அமிர்தி செல்லும் வழி சாலை அமைக்கும் பணி ரூ. 103 கோடி மதிப்பீட்டில் பூமி பூஜை





**திருவண்ணாமலை, பிப்.13:**
திருவண்ணாமலை மாவட்டம் கலசபாக்கம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஜமுனாமரத்தூர் - அமிர்திக்கு செல்லும் சாலை அமைக்க (ரூ.103 கோடி )மதிப்பீட்டில் 39 கிலோ மீட்டர் சாலை அமைக்கும் பணி மாண்புமிகு தமிழ்நாடு பொதுப்பணித்துறை மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் எ. வ. வேலு அவர்கள் சாலை அமைக்கும் பணியினை குத்து விளக்கு ஏற்றி, பூமி பூஜை செய்து துவக்கி வைத்தார்.

உடன் சட்டமன்ற உறுப்பினர் பெ. சு. தி. சரவணன் அவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர் உயர்திரு.சி. என். அண்ணாதுரை அவர்கள் மற்றும் உயர்திரு மாவட்ட ஆட்சித் தலைவர் க. தர்ப்பகராஜ் இ. ஆ.ப. அவர்கள் அரசு அலுவலர்கள், மற்றும் கழகத் தோழர்கள், பொதுமக்கள் அனைவரும் சாலை அமைக்க பூமி பூஜை விழாவில் அனைவரும் கலந்து கொண்டார்கள்.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## குன்னம் தொகுதியில் திமுக பரப்புரை பொதுக் கூட்டம்

**பெரம்பலூர், பிப்.13:**

பெரம்பலூர் மாவட்டம், குன்னம் சட்டமன்றத் தொகுதி சார்பில் "தமிழ் நாடு தலைகுனியாது" குன்னம் சட்டமன்றத் தொகுதி பரப்புரை பொதுக் கூட்டம், புதுவேட்டக்குடி கிராமத்தில் ஆலத்தூர் கிழக்கு ஒன்றிய கழகச் செயலாளர் என்.கிருஷ்ண மூர்த்தி தலைமையில் செவ்வாய்க்கிழமை நடை பெற்றது. வேப்பூர் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் தி.மதியழகன் வரவேற் புரை யாற்றினார். நிகழ்வில் போக்குவரத்து மற்றும் மின்சார துறை அமைச்சர் சிவசங்கர், பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் பிரபாகரன், கட்சி நிர்வாகிகள், ஆயி ரத்திற்கும் மேற்பட்ட தொண டர்கள் கலந்து கொண்ட னர்.

## வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி

**தஞ்சாவூர், பிப்.13:**

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி அருகே உள்ள சோழகனார்வயல் கிராமத்தில் கடந்த பிப்.7 ஆம் தேதி வெறிநாய் ஒன்று பொதுமக்கள் மற்றும் 10-க்கும் மேற்பட்ட கால்நடைகளை கடித்தது. இதில் வெறி நாய்க்கடி யால் பாதிக்கப்பட்ட 5 பொது மக்கள் பேராவூரணி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வீடு திரும்பி உள்ளனர். அவர் களுக்கு தொடர்ந்து தடுப்பூசி தவணை முறையில் செலுத்தப்படுகிறது. இந்நிலையில், கால் நடை பராமரிப்பு துறை உதவி இயக்குநர் மரு. இ.விஜயராகவன் வழிகாட் டுதலின்படி, உடனடியாக சோழகனார்வயல் கிரா மத்தில் 25 வளர்ப்பு நாய் களுக்கு முன்னெச்ச ரிக்கை நடவடிக்கையாக தடுப்பூசி செலுத்தப்பட்டது. செவ்வாய்க்கிழமை நாய்க் கடியால் பாதிக்கப்பட்ட மாடு கள், ஆடுகள் மற்றும் நாய்களுக்கு இரண்டாம் தவணை வெறிநோய் தடுப்பூசி செலுத்தப்பட்டது. கால்நடைத் துறை மருத்துவர்கள் சுரேஷ், விவேக், பிரகாஷ் தலை மையிலான குழுவினர் தடுப்பூசி செலுத்தும் பணியை மேற்கொண்ட னர்.

## திமுக - காங்கிரஸ் கூட்டணி வலுவாக உள்ளது: திருநாவுக்கரசர்

**புதுக்கோட்டை, பிப்.13:**

திமுக-காங்கிரஸ் கூட்டணி வலுவாக உள்ளது என காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் சு.திருநாவுக்கரசர் தெரிவித்துள்ளார். புதுக்கோட்டையில் புதன்கிழமை அவர் செய்தியா ளர்களுக்கு அளித்த பேட்டியில், சட்டமன்ற, நாடாளு மன்றத் தேர்தல்களில் திமுக, காங்கிரஸ் கூட்டணி வலுவாக தேர்தலை சந்தித்துள்ளது. தற்பொழுதும் அதே கூட்டணி தொடர்ந்து கொண்டிருக்கிறது. திமுக, காங்கிரஸ் இரண்டு கட்சிகளுக்கும் இடையே பேச்சு வார்த்தை நடந்து கொண்டு இருக்கிறது. கூட்டணி பேச்சுவார்த்தை முடியும் வரை யாரும் தனித் தனியாக பேட்டி கொடுக்க வேண்டாம் என காங்கிரஸ் தலைமை தெரிவித்துள்ளது. இரண்டு கட்சிகளின் தலைமை பேசி தொகுதிகளை இறுதி செய்வார்கள்" என்றார்.

## காரில் கடத்தப்பட்ட சிலைகள் மீட்பு: 4 பேர் கைது

**தஞ்சாவூர், பிப்.13:**

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் அருகே காரில் கடத்தப்பட்ட தொன்மையான இரு சிலைகளைச் சிலை திருட்டு தடுப்பு காவல் பிரிவினர் மீட்டு, 4 பேரை கைது செய்தனர். இது குறித்து சிலைத் திருட்டு தடுப்பு காவல் பிரிவினர் செவ்வாய்க்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பில், "கும்பகோணம் அருகே வளையப்பேட்டையில் சிலை திருட்டு தடுப்பு காவல் பிரிவினர் பிப்.6 ஆம் தேதி இரவு வாகன தணிக்கை மேற்கொண்டனர். அப்போது, அப்பகு தியில் சாலையோரம் நிறுத்தப்பட்டிருந்த காரை சோதனை யிட்ட சிலை திருட்டு தடுப்பு காவல் பிரிவினர், சாக்குப் பையில் சுற்றப்பட்டிருந்த இரு சிலைகளை மீட்டனர். இவை 14 - 15 ஆம் நூற்றாண்டில் ஆட்சி செய்த விஜய நகரப் பேரரசு காலத்தைச் சார்ந்த சுதர்சனர் என்ற விஷ்ணு சிலை, பெண் தெய்வமான தேவி சிலை என்பது தெரிய வந்தது. இதில், சுதர்சனர் என்ற விஷ்ணு சிலை 77.30 கிலோ எடையும், 90 செ.மீ. உயரமும், 48 செ.மீ. அகலமும், தேவி சிலை 35.45 கிலோ எடையும், 73 செ.மீ. உயரமும், 31 செ.மீ. அகலமும் கொண்டவை. இரு சிலைகளும் தமிழ்நாட்டின் ஏதோ ஒரு கோவிலி லிருந்து திருடப்பட்டிருப்பதும், இவற்றை வெளிநாடுகளுக்கு கடத்தி பெருந்தொகைக்கு விற்க முயற்சி செய்திருப்ப தும் தெரிய வந்தது. இதுகுறித்து சிலை கடத்தல் தடுப்பு பிரிவின் தஞ்சாவூர் சரக காவல் ஆய்வாளர் ஏ.காவேரியம்மாள், உதவி ஆய்வாளர் கே. தண்டாயுதபாணி வழக்குப் பதிந்து, திரு வாரூர் மாவட்டம், முத்துப்பேட்டை தம்பிக்கோட்டை வடகாடு கிராமத்தைச் சேர்ந்த ச.மணிகண்டன் உள்ளிட்ட 4 பேரை கைது செய்தனர். நான்கு பேரும் கும்பகோணம் கிளை சிறையில் அடைக்கப்பட்ட னர். மேலும் சிலரை காவல் துறையினர் தேடி வருகின்றனர்.

## பூந்தமல்லி - வடபழனி மெட்ரோ ரயில் வழித்தடத்தில் பாதுகாப்பு ஆணையர் ஆய்வு



**சென்னை, பிப்.13:**

பூந்தமல்லி - வடபழனி மெட்ரோ ரயில் வழித்தடத்தில் ரயில்வே பாதுகாப்பு ஆணையர் ஏ.எம். சவுத்ரி மற்றும் அவரது குழுவினர் முதல்கட்ட ஆய்வை நேற்று தொடங்கினர். கட்டு மானப் பணிகள், மின்சாரம், தண்டவாளம் உள்ளிட்டவை ஆய்வு செய்யப்பட்டன.

சென்னையில் 2-ம் கட்ட மாக, 3 வழித்தடங்களில், 116.1 கி.மீ. தொலைவுக்கு மெட்ரோ ரயில் பணிகள் நடைபெறுகின் றன. இதில், கலங்கரைவிளக் கம் - பூந்தமல்லி வரை 26.1 கி.மீ. தொலைவிலான வழித் தடத்தின் ஒருபகுதியாக, பூந் தமல்லி - வடபழனி வரையி லான 14.64 கி.மீ. தொலைவு உயர்மட்ட தடத்தில் அனைத்து பணிகளும் முடிந்துவிட்டன.

இதைத்தொடர்ந்து,மெட்ரோ ரயில் நிர்வாகம் தரப்பில் பல் வேறு சோதனைகள், பாதுகாப்பு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட் டன. பின்னர் பெங்களூருவில் உள்ள மெட்ரோ ரயில் பாது காப்பு ஆணையருக்கு ஆய்வு மேற்கொள்ள அழைப்பு விடுக் கப்பட்டது.

இந்நிலையில், இத்தடத்தில் மெட்ரோ ரயில் பாதுகாப்பு ஆணை யர் அனந்த் மதுகர் சவுத்ரி மற்றும் அவருடைய குழு வினர் முதல் கட்ட ஆய்வை நேற்று தொடங்கினர்.

முதல்நாள் ஆய்வின் தொடக் கமாக, 4-வது வழித்தடத்தில் பூந் தமல்லி புறவழிச்சாலை நிலை யம் முதல் ஐயப்பன்தாங்கல் மெட்ரோ நிலையம் வரையி லான 6.134 கி.மீ. தொலைவுக்கு ஆய்வு மேற்கொண்டனர்.

மெட்ரோ ரயில் பாது காப்பு ஆணையருடன் 3 பாது காப்பு துணை ஆணையர்கள், சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் இயக்குநர் கள் தி.அர்ச் சுனன் (திட்டங்கள்), மனோஜ் கோயல் (அமைப்பு கள் மற்றும் இயக்கம்) மற்றும் சென்னை மெட்ரோ ரயில் நிறு வனத்தின் உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

முதல்கட்ட ஆய்வின் போது, கட்டுமானப் பணிகள், மின்சா ரம், தண்டவாளக்கூறுகள் மற் றும் முக்கிய மேம்பாலக் கட் டமைப்புகள் ஆகியவை விரி வாக ஆய்வு செய்யப்பட்டன. 11 மெட்ரோ ரயில் நிலையங் கள் ஆய்வுக்கு உட்படுத்தப் படுகின்றன என்று சென்னை மெட்ரோ ரயில் நிறுவன அதி காரிகள் தெரிவித்தனர்.

## கூட்டணி ஆட்சியா? ஒரு கட்சி ஆட்சியா? மக்கள் முடிவு செய்வார்கள்: காங்கிரஸ் எம்.பி. மாணிக்கம் தாகூர்

**சென்னை, பிப்.13:**

கூட்டணி ஆட்சியா? ஒரு கட்சி ஆட்சியா? என்பதை மக்கள் முடிவு செய்வார்கள் என்று முதலமைச்சர் ஸ்டாலினுக்கு காங்கிரஸ் எம்.பி. மாணிக்கம் தாகூர் பதில் அளித்துள்ளார்.

முதலமைச்சர் ஸ்டாலின் 'இந்தியாடுடே' சார்பில் ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்.

அப்போது கூட்டணி ஆட்சி பற்றி கேட்ட கேள்விக்கு அவர் பதில் அளிக்கையில் கூட்டணி ஆட்சி என்பது தமிழகத்துக்கு ஒத்துவராது என்று திட்டவட்டமாக கூறிவிட்டார்.

ஆட்சியில் பங்கு வேண்டும் என்று காங்கிரஸ் கட்சியில் சிலர் வலுவாக கோரிக்கை வைத்தனர். காங்கிரஸ் மேலிடத்தில் இந்த கோரிக்கையையும் வலியுறுத்தி வந்தார்கள்.

காங்கிரஸ் எம். பி. மாணிக்கம் தாகூர் தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்த போதெல்லாம் இந்த கோரிக்கையை வெளிப்படையாகவே அழுத்தமாக கூறி வந்தார். இந்த நிலையில் இன்று முதலமைச்சர் ஸ்டாலின் ஆட்சியில் பங்கு இல்லை என்று அறிவித்துள்ள நிலையில் இது காங்கிரசார் மத்தியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

இதனையடுத்து கூட்டணி ஆட்சியா? அல்லது ஒரு கட்சி ஆட்சியா என்பதை மக்கள் முடிவு செய்வார்கள் என காங்கிரஸ் எம்.பி.மாணிக்கம் தாகூர் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் கூறப்பட்டுள்ளதாவது:- மக்கள் முடிவு செய்வார்கள். கூட்டணி ஆட்சியா? அல்லது ஒரு கட்சி ஆட்சியா என்பதை 2006ல் மக்கள் தீர்ப்பை செயல்படுத்தாதது நம் தமிழ்நாடு காங்கிரசின் தவறு என தெரிவித்துள்ளார்.

## கால்பந்து விளையாட்டிற்கான அவசர சிகிச்சை மருத்துவம்; ஊக்கமருந்து தடுப்பு பயிற்சி: 13 நாட்டு பிரதிநிதிகள், 50 மருத்துவர்கள் பங்கேற்பு

**சென்னை, பிப்.13:**

ஆசிய கால்பந்து கூட்டமைப்பும், அனைத்திந்திய கால்பந்து கூட்டமைப்பும் இணைந்த கால்பந்து விளையாட்டு மருத்துவத்தை மேம்படுத்துவதற்காக அவசர சிகிச்சை மருத்துவம் மற்றும் ஊக்கமருந்து தடுப்பு சார்ந்த நான்கு நாள் பயிற்சி ஸ்ரீ ராமச்சந்திரா விளையாட்டு அறிவியல் மையத்தில் துவங்கியது. இப்பயிற்சி (12ந்தேதி) வரை நடைபெறும்.

பயிற்சி வகுப்பை ஆசிய கால்பந்து கூட்டமைப்பின் மருத்துவக்குழு தலைவர் டாக்டர். குர்சரண்சிங் தொடக்கி வைத்து பேசினார். விளையாட்டு, தொழிற்நுட்பம் சார்ந்த மைதான பயிற்சி மட்டுமல்லாமல் விளையாட்டு அறிவியல்சார் மருத்துவமும் இந்த இலக்கை அடைவதற்கு முக்கிய பங்காற்ற வேண்டும் என்றார்.

ஐரோப்பாவின் முன்னணி கால்பந்து அணிகளின் வெற்றியைப் மேற்கோள் காட்டிய அவர், வீரர்களின் நலன் மற்றும் மருத்துவ ஆதரவுக்கான அதிக முதலீட்டின் காரணமாக 90 சதவிகிதத்திற்கும் மேற்பட்ட வீரார்கள் தொடர்ந்து பயிற்சி மற்றும் போட்டிகளில் பங்கேற்பதாக குறிப்பிட்டார். இதே போன்று ஆசியா முழுவதும் கால்பந்து வளர்ச்சிக்கான முதலீடுகளை அதிகரிக்க கால்பந்து கூட்டமைப்பு திட்டமிட்டுள்ளதாகவும், நிர்வாகிகள் மற்றும் மருத்துவ நிபுணர்கள் ஒன்றிணைந்து செயல்பட்டால் ஆசிய நாடுகள் கால்பந்து விளையாட்டில் உலகளாவிய இலக்கை எட்ட முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்தப் பயிற்சி வகுப்பில் இந்தியா மட்டுமின்றி பிலிப்பைன்ஸ், மலேசியா, வங்கதேசம், ஆப்கானிஸ்தான், மாலத்தீவு, இலங்கை, ஈரான், கிர்கிஸ்தான், உஸ்பெகிஸ்தான், துர்க்மெனிஸ்தான்,தஜிகிஸ்தான், பூடான் மற்றும் நேபாளம் உள்ளிட்ட ஆசிய கால்பந்து கூட்டமைப்பு உறுப்பு நாடுகளைச் சேர்ந்த 50க்கும் மேற்பட்ட விளையாட்டு மருத்துவர்கள் மற்றும் இயன்முறை மருத்துவர்கள் பங்கேற்றார்கள்.

## 3 ஆண்டுகள் ஒரே இடத்தில் பணியாற்றும் அதிகாரிகளை இடமாற்றம் செய்ய தேர்தல் கமிஷன் உத்தரவு

**புதுடெல்லி, பிப்.13:**

3 ஆண்டுகள் பணியாற்றும் அதிகாரிகளை இடமாற்றம் செய்ய வேண்டும் என தேர்தல் கமிஷன் உத்தரவிட்டுள்ளது.

தமிழகம், புதுச்சேரி, கேரளா, மேற்கு வங்காளம், அசாம் ஆகிய 5 மாநிலங்களில் ஏப்ரல் மாதம் சட்டமன்ற தேர்தல் நடைபெற வுள்ளது. தேர்தல் பணிகளை இந்திய தேர்தல் கமிஷன் நீவிரப்படுத்தி உள்ளது. விரைவில் தேர்தல் தேதி அறிவிக்கப்பட உள்ளது.

இந்தநிலையில் தமிழ்நாடு, புதுச்சேரி உள்ளிட்ட மாநில தலைமைச் செயலாளர்கள், தலைமைதேர்தல் அதிகாரிகளுக்கு இந்திய தேர்தல் கமிஷன் கடிதம் அனுப்பி உள்ளது. அதில், அரசு அதிகாரிகள் சொந்த மாவட்டத்தில்




பணியாற்றி வந்தாலோ?, ஒரே மாவட்டத்தில் 3 ஆண்டுகளுக்குமே பணியாற்றி வந்தாலோ அவர்களை உடனடியாக பணியிடமாற்றம் செய்ய தலைமை தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

மாநில தலைமையகத்தில் பணியாற்று பவர்களை இந்த கணக்கில்எடுக்கத்தேவையில்லை. 3 ஆண்டுகள் பணியை நிறைவு செய்பவர்கள் என்ற பட்டியலில் வரும் அதிகாரிகளை, அதே வருவாய் மாவட்டம் என்றாலும் மாநில தலைமையகத்திற்கு பணியிட மாற்றம் செய்யலாம்.

இதுபோன்ற நடவடிக்கை களின் போது, சம்பந்தப்பட்ட அதிகாரி சொந்த மாவட்டத்துக்குப் பணியிட மாறுதலாகிச் செல்லாதவாறு அதிகாரிகள் பார்த்துக்கொள்ள வேண்டும். மாவட்ட தேர்தல் அதிகாரிகள், தேர்தல் நடத்தும் அதிகாரிகள், உதவி தேர்தல் நடத்தும் அதிகாரிகள், போலீஸ் இன்ஸ்பெக்டர்கள், சப்-இன்ஸ்பெக்டர் கள் போன்ற அதிகாரிகளை, கடந்த சட்டமன்ற தேர்தல் அல்லது இடைத்தேர்தலின் போது நியமிக்கப் பட்டிருந்த இடத்தில் கண்டிப்பாக நியமிக்கக்கூடாது.

இந்த உத்தரவு, தேர்தல் பணிக்காக நியமிக்கப்படும் மாவட்ட தேர்தல் அதிகாரிகள், தேர்தல் நடத்தும் அதிகாரிகள், உதவி தேர்தல் நடத்தும் அதிகாரிகள், வாக்குப்பதிவு அலுவலர்கள், உதவி வாக்குப்பதிவு அலுவலர்களுக்கு மட்டுமல்லாமல் துணை ஆட்சியர்கள், தாசில்தார், வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் அவர்களுக்கு இணையான பதவி நிலையில் உள்ள மாவட்ட அதிகாரிகளுக்கும், மாநகராட்சி, நகராட்சி ஆணையர், மாநகராட்சி மற்றும் மேம்பாட்டு ஆணையங்களின் அலுவலர்களுக்கும், காவல் துறையில் கூடுதல் டி.ஜி.பி. முதல் இன்ஸ்பெக்டர் வரையிலான அதிகாரிகளுக்கும், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை காவலர்களுக்கும் பொருந்தும். கணினி பணி, சிறப்புப் பிரிவு பணி, பயிற்சி ஆகியவற்றில் உள்ளவர்களுக்கு இது பொருந்தாது, காவல் துறை அதிகாரிகளையும் சொந்த மாவட்டத்தில் பணியமர்த்தக்கூடாது.

தலைமை தேர்தல் அதிகாரி தவிர வேறு எந்தவொரு மாநில அரசுப் பணியாளரும் பணி நீட்டிப்பு செய்யப்பட்டிருந்தாலோ, மறுபடியும் பணியில் சேர்க்கப்பட்டவர்களாக இருந்தாலோ அவர்களைத் தேர்தல் பணியில் ஈடுபடுத்தக்கூடாது. தேர்தல் ஆணையத்தின் இந்த உத்தரவுகள் அனைத்தும் அமல்படுத்தப்பட்டுள்ளதா? என்பது பற்றிய விரிவான அறிக்கையை வரும் பிப்ரவரி 28-ந் தேதிக்குள் தலைமைச் செயலாளர் மற்றும் டி.ஜி.பி. அளிக்க வேண்டும்" இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com

இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.

"welcome Tamilnadu" என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்

94452 65389



## நலம் தரும் மருத்துவம்

### இரவு நேரத்துல 'புரோட்டா' சாப்பிட ஆசையா? வேண்டாமே!




தமிழ்நாட்டில் பெரும்பாலான மக்கள் விரும்பி சாப்பிடும் உணவுகளில் ஒன்று பரோட்டா. குறிப்பாக பரோட்டாவை இரவு நேரங்களில் தான் அதிகம் பேர் உண்கின்றனர். முழுக்க முழுக்க மைதாவில் செய்யப்படும் இந்த உணவால் புற்றுநோய் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம் என சமீபத்திய ஆய்வுகள் கூறுகின்றன.

மைதாவால் செய்யப்படும் உணவுகள் அனைத்தும் செரிமானம் அடைவதற்கு அதிக நேரம் எடுத்துக் கொள்ளும். அதிலும் இரவு நேரங்களில் மைதா சார்ந்த உணவுகளை சாப்பிடும் போது செரிமானப் பிரச்னை ஏற்படுவது உறுதி.

இந்நிலையில் பரோட்டாவை சாப்பிடுவதால் செரிமான பிரச்னை ஏற்பட்டு, அது பெருங்குடலை கடுமையாக பாதிப்பதால் பெருங்குடல் புற்றுநோய் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம் என கூறப்படுகிறது.

கடந்த பிப்ரவரி 4-ம் தேதி உலக புற்றுநோய் தினம் அனுசரிக்கப்பட்டது. புற்றுநோய்க்கு இந்தியாவில் தரமான சிகிச்சைகள் வழங்கப்பட்டு வரும் நிலையில், சமீபத்தில் 14 வயதுக்குட்பட்ட பெண்களுக்கு கர்ப்பப்பை வாய் புற்றுநோய் ஏற்படாமல் இருக்க இலவச தடுப்பூசியை அறிமுகம் செய்தது தமிழக அரசு.

ஆண்டுதோறும் புற்றுநோயால் பாதிக்கப்படுபவர்கள் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வரும் நிலையில், கடந்த 2025 ஆம் ஆண்டில் மட்டும் 1,00,097 பேர் புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ளதாக நாடாளுமன்றத்தில் மத்திய அரசு தெரிவித்துள்ளது.

கடந்த 2012 ஆம் ஆண்டில் 53,022 ஆக இருந்த இந்த எண்ணிக்கை, தற்போது இரு மடங்காக உயர்ந்திருப்பது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. மாறிவரும் உணவுப் பழக்கமே இதற்கு மிக முக்கிய காரணமாக பார்க்கப்படுகிறது.

பெண்களிடையே மார்பகப் புற்றுநோய், கருப்பை வாய் புற்றுநோய், கர்ப்பப்பை புற்றுநோய் மற்றும் கருமுட்டைப் புற்றுநோய் ஆகியவை அதிக பாதிப்புகளை ஏற்படுத்துகின்றன. ஆண்களுக்கு நுரையீரல் புற்றுநோய், இரைப்பை புற்றுநோய், வாய்ப் புற்றுநோய் மற்றும் பெருங்குடல் புற்றுநோய் ஆகியவை அதிக பாதிப்புகளை ஏற்படுத்துகின்றன.

சமீப காலமாக பெருங்குடல் மற்றும் மலக்குடல் ஆகியவற்றில் புற்றுநோய் பாதிப்புகள் ஏற்படுவது அதிகரித்து வருகிறது. இதில் பெருங்குடல் புற்றுநோய் என்பது செரிமான பிரச்னைகளினால் ஏற்படுவதாக கூறப்படுகிறது.

எளிதில் செரிமானமடையும் உணவுகளை நாம் உட்கொள்ளும் போது, எவ்வித பிரச்சனையும் ஏற்படாது. ஆனால் செரிமானத்திற்கு அதிக நேரம் எடுத்துக் கொள்ளும் துரித உணவுகள் மற்றும் மைதா சார்ந்த உணவுகள் நமக்கு பிரச்னையை ஏற்படுத்தி விடும் என மருத்துவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்

மைதா மாவால் தயாரிக்கப்படும் பரோட்டா மற்றும் பீட்சா போன்ற உணவுகளை இளம் தலைமுறையினர் விரும்பி உண்பதால், பெருங்குடல் புற்றுநோய்க்கு ஆளாவதாக கூறப்படுகிறது. ஆகையால் மைதாவில் தயாரிக்கப்படும் உணவுகளை அதிகம் சாப்பிடுவதை பொதுமக்கள் கட்டுப்படுத்த வேண்டும் என மருத்துவர்கள் அறிவுறுத்தி உள்ளனர்.

ஏற்கனவே பரோட்டாவை இரவு நேரங்களில் சாப்பிடுவதால் தூக்கமின்மை, செரிமான கோளாறுகள், உடல் எடையில் மாற்றம் மற்றும் அசிடிட்டி போன்ற பல்வேறு பிரச்னைகள் ஏற்படும். இதில் தற்போது பெருங்குடல் புற்றுநோயும் அதிகரித்து வருவது பொதுமக்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

## ‘சென்னை ஒன்’ செயலியில் 50 லட்சம் டிக்கெட்டுகள் விற்பனை

**சென்னை, பிப்.13:**

சென்னையில் பொதுப் போக்குவரத்தை எளிமையாக்கவும், எண்ம மயமாக்கவும் அறிமுகம் செய்யப்பட்ட ‘சென்னை ஒன்’ செயலி, 50 லட்சம் டிக்கெட்டுகள் விற்பனை என்ற புதிய மைல்கல்லை எட்டியுள்ளது.

கடந்த ஜனவரி மாதம் வரை 30 லட்சமாக இருந்த விற்பனை, பிப்ரவரி இரண்டாம்வாரத்திலேயே50லட்சத்தைத் தொட்டுள்ளது. குறிப்பாக, கடந்த இரண்டு வாரங்களில் மட்டும் 10 லட்சம் டிக்கெட்டுகள் விற்பனையாகியுள்ளது குறிப்பிடத்தக்கது.

மாநகரப் பேருந்துகள், மெட்ரோ மற்றும் புறநகர் ரயில்களுக்கான பயணச் சீட்டுகளை இதன் மூலம் எளிதாகப் பெற முடியும். மேலும், பயணிகள் நீண்ட வரிசையில் காத்திருப்பதைத் தவிர்க்க, ரூ.1000 மற்றும் ரூ.2000 மதிப்பிலான மாதாந்திர பேருந்து அட்டைகளையும் இந்த செயலி மூலமே பெற்றுக்கொள்ளும் வசதி சமீபத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது.

பணமில்லா பரிவர்த்தனையை ஊக்குவிக்கும் இந்த முயற்சிக்குச் சென்னை மக்களிடையே அமோக வரவேற்பு கிடைத்துள்ளது.

## பிப்.17 சிறப்பு கிராம சபைக் கூட்டம் ஆட்சியர் மு.பிரதாப் தகவல்

**திருவள்ளூர், பிப்.13:**

திருவள்ளூர் மாவட்டத்தில் கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் 2025-26 ஆம் ஆண்டிற்கு கூடுதல் வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டது எனவும், உத்தேச ஒதுக்கீடு மற்றும் திட்ட செயலாக்கத்தின்படி ஊராட்சி அளவிலான குழுவின் மூலம் தகுதி வாய்ந்த பயனாளிகளை தேர்வு செய்து, தேர்வு செய்யப்பட்ட பயனாளிகள் பெயர் பட்டியலை ஒப்புதல் பெறும் பொருட்டு திருவள்ளூர் மாவட்ட அனைத்து ஊராட்சி ஒன்றியங்களுக்கு சம்மந்தப்பட்ட கிராம ஊராட்சிகளில் வருகிற செவ்வாயன்று பிப்.17 காலை 11 மணியளவில் சிறப்பு கிராம சபை கூட்டம் நடைபெறவுள்ளது. இந்த சிறப்பு கிராம சபைக் கூட்டத்தில் பொதுமக்கள் தவறாமல் பங்கேற்று சிறப்பிக்குமாறு மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் தெரிவித்துள்ளார்.

## அறுவை சிகிச்சை செய்த பெண்ணின் வயிற்றில் நூல்

**செங்கல்பட்டு, பிப்.13:**

செங்கல்பட்டில் தனியார் மருத்துவமனையில் 2023-ல் பிரசவ அறுவை சிகிச்சை செய்துகொண்ட பெண் ஒருவருக்கு, சமீபத்தில் அறுவை சிகிச்சை செய்த இடத்தில் சீழ் மற்றும் ரத்தம் கசிந்துள்ளது.

சோதனையில், அவர் வயிற்றில் ரத்தக்கட்டியுடன் இரண்டு வெள்ளை நிற நூல்கள் இருப்பது கண்ட றியப்பட்டது. இதனை அகற்ற மீண்டும் அறுவை சிகிச்சை தேவை என மருத்துவர்கள் கூறிய நிலையில், இது குறித்துப் புகார் அளித்த பாதிக்கப் பட்ட பெண்ணிடம் மருத்து வமனை நிர்வாகம் அலட்சிய மாகப் பதிலளித்துள்ளது.

இதையடுத்து உரிய நட வடிக்கை கோரி மருத்துவக் கல்லூரி முதல்வரிடம் புகார் அளிக்கப்பட்டுள்ளது.

# திருநள்ளாறு தர்பாரண்யேஸ்வரர் கோயிலில் மார்ச் 6-ம் தேதி சனிப்பெயர்ச்சி விழா

**காரைக்கால், பிப்.13:**



திருநள்ளாறில் சனி பகவானுக்கு தனி சந்நிதியுடன் கூடிய பிரணாம்பிகை சமேத தர்பாரண்யேஸ்வரர் கோயில் அமைந்துள்ளது. இங்கு வாக்கிய பஞ்சாங்கத்தின்படி மார்ச் 6-ம் தேதி சனிப்பெயர்ச்சி விழா நடைபெறவுள்ளது.

இக்கோயிலில் சனிப்பெயர்ச்சி விழா மிக விமரிசையாக நடத்தப்படுவது வழக்கம். இதில் பங்கேற்க நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் லட்சக்கணக்கான பக்தர்கள் கோயிலுக்கு வருவார்கள்.

மார்ச் 6-ம் தேதி காலை 8.24 மணிக்கு கும்ப ராசியில் இருந்து மீன ராசிக்கு சனிபகவான் பிரவேசிக்கிறார். இந்நிலையில், சனிப்பெயர்ச்சி விழாவுக்கான பந்தல்கால் முகூர்த்தம் நேற்று நடைபெற்றது.

இதையொட்டி, தர்பாரண்யேஸ்வரர் கோயிலில் கொடி மரத்து விநாயகர் மற்றும் பந்தல்கால்களுக்கு சிறப்பு அபிஷேகம், பூஜைகள் நடத்தப்பட்டு, மகா தீபாராதனை காட்டப்பட்டது.

பின்னர், மங்கல வாத்தியங்கள் முழங்க, பந்தல் கால்கள் பிரகார உலாவாகக் கொண்டு வரப்பட்டு கோயில் உள்பிரகாரத்தில் பைரவர் சந்நிதி மற்றும் ராஜகோபுரம் அருகில் நடப்பட்டன.

இதில், தருமபுரம் ஆதீன கட்டளை விசாரணை ஸ்ரீமத் சட்டநாத தம்பிரான் சுவாமிகள், புதுச்சேரி நியமன எம்எல்ஏ ஜி.என்.எஸ்.ராஜசேகரன், கோயில் நிர்வாக அதிகாரி ஆர்.சுப்பிரமணியன் மற்றும் தர்பாரண்யேஸ்வரர் தேவஸ்தானத்துக்குச் சொந்தமான 5 கிராமங்களைச் சேர்ந்த பொதுமக்கள், பக்தர்கள் பலர் கலந்துகொண்டனர்.

# திருச்செந்தூர் மாசி திருவிழா பிப். 21-ல் தொடக்கம்: மார்ச் 2-ம் தேதி தேரோட்டம்

**தூத்துக்குடி, பிப்.13:**



திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோயில் மாசித்திருவிழா வரும் 21-ம் தேதி கொடியேற்றதுடன் தொடங்குகிறது. முக்கிய நிகழ்வான தேரோட்டம் மார்ச் 2-ம் தேதி நடைபெறுகிறது.

திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோயிலில் ஆண்டுதோறும் ஆவணி மற்றும் மாசி மாதங்களில் தேர்த் திருவிழா நடைபெறுகிறது. இந்த ஆண்டுக்கான மாசித் திருவிழா வரும் 21-ம் தேதி தொடங்குகிறது.

அன்று அதிகாலை 5 மணிக்கு மேல் மகர லக்னத்தில், கோயில் செப்புக் கொடிமரத்தில் கொடியேற்றப்பட்டு, கொடிமரத்துக்கு அபிஷேகம், அலங்காரம், தீபாராதனை நடைபெறுகிறது.

வரும் 25-ம் தேதி மேலக் கோயிலில் இரவு 7.30 மணியளவில் குடைவரை வாயில் தீபாராதனை நடைபெறுகிறது. 27-ம் தேதி அதிகாலை சண்முகபெருமானின் உருகு சட்டசேவை நிகழ்ச்சி நடைபெறுகிறது.

அன்று காலை 9 மணியளவில் ஆறுமுகப்பெருமான் வெட்டிவேர் சப்பரத்தில் பக்தர் களுக்கு ஏற்ற தரிசனம் அருளி, பிள்ளையன்கட்டளை மண்டபத்தை சேருகிறார். அங்கு சுவாமிக்கு சிறப்பு அபிஷேகம், அலங்காரம், தீபாராதனை நடைபெறுகிறது. மாலை 4.30 மணிக்கு மேல் சுவாமி தங்கச் சப்பரத்தில் சிவப்பு சார்த்தி கோலத்தில் எழுந்தருளி, வீதியுலா வந்து பக்தர்களுக்கு காட்சியளிக்கிறார். வரும் 28-ம் தேதி அதிகாலை 5 மணியளவில் சுவாமி பெரிய வெள்ளிச் சப்பரத்தில் வெள்ளைச் சார்த்தி கோலத்தில் எழுந்தருளி திருவீதி வலம் வருகிறார்.

தொடர்ந்து மேலக் கோயிலில் சுவாமிக்கு சிறப்பு அபிஷேகம், அலங்காரம், தீபாராதனை நடைபெறுகிறது. காலை 10.30 மணிக்கு சுவாமி பச்சைக் கடைசல் சப்பரத்தில் பச்சை சார்த்தி கோலத்தில் எழுந்தருளி வீதியுலா வந்து கோயில் சேருகிறார்.

மார்ச் 2-ம் தேதி தேரோட்டம் நடைபெறுகிறது. அன்று காலை 7 மணிக்கு விநாயகர், சுவாமி, தெய்வானை அம்பாள் ஆகியோர் தனித்தனி தேர்களில் ரத வீதியில் வலம் வந்து அருள் பாலிகின்றனர்.

மார்ச் 3-ம் தேதி இரவு 10.30 மணிக்கு மேல் தெப்ப உற்சவம் நடைபெறுகிறது. மார்ச் 4-ம் தேதி திருவிழா நிறைவு பெறுகிறது. விழாவுக்கான ஏற்பாடுகளை கோயில் தக்கார் ரா.அருள்முருகன், இணை ஆணையர் க.ராமு மற்றும் பணியாளர்கள் செய்து வருகின்றனர்.

# மாசி மாத பூஜைக்காக சபரிமலை ஐயப்பன் கோயிலில் நடை திறப்பு

**குமுளி, பிப்.13:**



சபரிமலையில் மண்டல பூஜை மற்றும் பந்தள அரச வம்சப் பிரதிநிதிகளின் தரிசனத்துக்குப் பிறகு கடந்த மாதம் 20-ம் தேதி கோயில் நடைசாத்தப்பட்டது.

இந்நிலையில், கும்ப மாத (மாசி) வழிபாட்டுக்காக கோயில் நடை நாளை (வியாழன்) மாலை 5 மணிக்கு திறக்கப்பட உள்ளது. தந்திரி கண்டரரு மகேஷ் மோகனரு தலைமையில் மேல் சாந்தி பிரசாத் நம்பூதிரி மாதாந்திர வழிபாடுகளை மேற்கொள்ள உள்ளார்.

நடை திறக்கப்பட்ட அன்று எந்தப் பூஜையும் நடைபெறாது. தவக் கோலத்தில் இருக்கும் ஐயப்பன் மீது பூசப்பட்டுள்ள விபூதி அகற்றப்படும். பின்னர் இது பக்தர்களுக்குப் பிரசாதமாக வழங்கப்படும்.

தொடர்ந்து, ஆழிக் குண்டத்தில் நெய்தீபம் ஏற்றப்படும். மறுநாள் அதிகாலை 4 மணிக்கு நடை திறக்கப்பட்டு, அபிஷேகம் உள்ளிட்ட வழிபாடுகள் வரும் 17-ம் தேதி வரை நடைபெறும். தரிசனத்துக்கான ஆன்லைன் முன்பதிவு கடந்த வாரம் தொடங்கியது மாதாந்திர பூஜை என்பதால் கூட்டம் குறைவாகவே இருக்கும்.

இதனால், பலரும் ஆர்வமுடன் முன்பதிவு செய்து வருகின்றனர். தேவசம் போர்டு அதிகாரிகள் கூறும்போது, “மண்டல, மகரவிளக்கு பூஜை காலங்களில் கூட்டம் அதிகம் இருக்கும் என்பதால் இதுபோன்ற மாதாந்திர வழிபாடு தரிசனங்களைப் பக்தர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்” என்றனர்.




## இறைச்சிக் கடை தொழிலாளர்கள் போராட்டம்

**பொன்னமராவதி, பிப்.13:**

புதுக்கோட்டை மாவட்டம் பொன்னமராவதி பேரூராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற காத்திருப்பு போராட்டத்திற்கு சிஐடியு மாவட்டச் செயலாளர் ஸ்ரீதர் தலைமை வகித்தார். சிபிஎம் ஒன்றியச் செயலாளர் பக்ருதீன், சிஐடியு ஒருங்கிணைப்பாளர் குமார், சாலையோர வியாபாரி சங்க செயலாளர் தீன், தலைவர் சாத்தையா, அனைத்திந்திய ஜனநாயக மாதர் சங்கத்தின் ஒன்றியச் செயலாளர் மதியரசி, தலைவர் லதா, இறைச்சிக்கடை தொழிலாளர் சங்க நிர்வாகிகள் அக்பர், அப்பாஸ் ஆகியோர் பங்கேற்றனர். பொன்னமராவதி பேரூராட்சி மூலம் பல ஆண்டு களாக இறைச்சி கடை நடத்தி வரும் தொழிலாளர்களுக்கு புதிய கட்டிட வளாகம் அமைந்த பின்பு முன்னுரிமை அளித்து கடைகள் ஒதுக்கப்படும் என வாக்குறுதி அளிக்கப்பட்டது. தற்போது அந்த வாக்குறுதியை மீறும் பேரூ ராட்சி நிர்வாகத்தை கண்டித்தும், ஏற்கனவே இறைச்சி கடை நடத்தி வருபவர்களுக்கு கடை அளித்துவிட்டு மீத மிருக்கும் கடைகளை ஏலத்தில் விட வேண்டும் என வலியுறுத்தினர். போராட்டத்தை தொடர்ந்து சிஐடியு மாவட்டச் செயலாளரிடம் பேசிய பொன்னமராவதி வட்டாட்சியர், பிப்.16 ஆம் தேதி இது தொடர்பான பேச்சுவார்த்தை நடைபெறும் என தெரிவித்தார். இதையடுத்து போராட்டத்தை தற்காலிகமாக வாபஸ் பெற்றனர்.

## போதை பழக்கத்தால் ஏற்படும் பாதிப்புகள்: விழிப்புணர்வு கலை நிகழ்ச்சி



**மயிலாடுதுறை, பிப்.13:**

மயிலாடுதுறை மாவட்டம் முழுவதும் சொசைட்டி ஃபார் ரூரல் டெவலப்மெண்ட் தொண்டு நிறுவனம் மற்றும் மயிலாடுதுறை மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு சார்பில் மது மற்றும் போதை பழக்கங்களால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து விழிப்புணர்வு கலைநிகழ்ச்சி திங்கள் மற்றும் செவ்வாய்க்கிழமைகளில் நடைபெற்றது. சொசைட்டி ஃபார் ரூரல் டெவலப்மெண்ட் தொண்டு நிறுவனத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர் ராஜசேகர் தலைமையில் மங்கநல்லூர், மயிலாடுதுறை, குத்தாலம், செம்பனார்கோவில், ஆக்கூர், சீர்காழி ஆகிய பகுதிகளின் முக்கிய இடங்கள், கடைவீதிகள், மக்கள் கூடும் பொது இடங்கள், பள்ளி, கல்லூரிகள் உள்ள பகுதி, பேருந்து நிறுத்தங்கள் உள்ளிட்ட பகுதிகளில் கலைக் குழுக்களின் கிராமிய நடனம், நாடகங்கள், பாடல்கள் வாயிலாக பொதுமக்கள், மாணவர்கள், இளைஞர்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தி, துண்டு பிரசுரங்களை வழங்கினர்.

# முழுவதும் வைரத்தினாலேயே ஆன கிரகம்! கற்பனைக்கும் எட்டாத பிரபஞ்ச ரகசியம்!

அறிவியல் உலகம் நமக்குத் தரும் அதிசய உண்மைகள் பல. நாளுக்கு நாள் இது அதிகரித்துக் கொண்டே போகிறது. சில உண்மைகளைப் பார்த்து வியக்கலாமா?

அறிவியல் உண்மைகள்(SCIENCE FACTS)

1. உலகில் ஐஸ்லாந்தில் மட்டுமே கொசுக்கள் இல்லை என்று அனைவரும் நினைத்த நிலையில், இந்த நிலை 2025 அக்டோபர் மாதம் மாறி விட்டது. அங்கும் கொசுக்கள் வந்து விட்டன!

2. மனிதர்கள் பறவைகள் போலப் பறக்க வேண்டுமெனில் 20 அடி நீளமுள்ள இறக்கைகள் வேண்டுமாம்.

3. நீங்கள் தூங்கி எழுந்தவுடன் மூளை தன் இயல்பான இயக்கத்தைப் பெற 15 முதல் 30 நிமிடங்கள் ஆகுமாம். அதுவரை மூளை இருக்கும் நிலை ஸ்லீப் இனர்ஷியா (SLEEP INERTIA) எனப்படுகிறது.


4. உலகில் அறியப்படும் பெரிய ப்ரைம் நம்பர் (PRIME NUMBER) 41,024,320 இலக்கங்களைக் கொண்டிருக்கிறது.

5. தவளை தன் தோல் மூலமே சுவாசிக்கிறது, குடிக்கிறது.

6. ஆமையின் மேல் ஓடு 50 எலும்புகளால் ஆனது.

7. இங்கிலாந்தையும், பிரான்ஸ் நாட்டையும் இணைக்கும் குகை கடலுக்கடியில் அமைக்கப்பட்டுள்ளது. இதன் நீளம் 23.5 மைல். இதுவே நீருக்கு அடியில் அமைந்துள்ள உலகின் மிகப் பெரிய குகையாகும்,

8. 2025 மார்ச் நிலவரப்படி நாம் அறிந்த அளவில் சூரியனைச் சுற்றி வரும் சந்திரன்களின் எண்ணிக்கை 953.




9. சவப்பெட்டியில் வைக்கப்பட்ட ஒரு உடல் முற்றிலுமாக அழிந்து எலும்புக்கூடாக மாற ஆகும் காலம் ஐந்து முதல் பத்து ஆண்டுகள் ஆகும்.

10. பூமி மீது மோதி டைனோஸர்களை அழித்த குறுங்கோள் மணிக்கு 27000 மைல் வேகத்தில் வந்து மோதியது.

11. உலகில் அதிக உயரம் உள்ள மலைச் சிகரம் மவுண்ட் எவரெஸ்ட். இதன் உயரம் 29031.69 அடி. ‘மானாகிய’ என்ற செயலற்றுப் போன எரிமலை ஹவாயில் இருக்கிறது. இதன் அடி முதல் உச்சி வரை அளந்தால் அது 33497 அடி இருக்கிறது.

12. மொட்டைக் கத்தியை வைத்து வெங்காயத்தை உரித்தால் கூரிய கத்தியை வைத்து அதை உரிப்பதால் ஏற்படும் கண்ணீரை விட அதிகம் கண்ணீர் வரும்.

13. மனித இதயம் அதிக வலிமை உடையது. ஒரு லட்சம் தடவை துடித்து சராசரியாக 2500 காலன் ரத்தத்தை தினமும் அது வெளியேற்றுகிறது.

14. உடலில் அதிகம் குறிப்பிடப்படும் அங்கங்களின் எண்ணிக்கை 78. அதில் அதிக கனமானது தோல் தான்!

15. சுறாமீன்களைப் புரட்டித் தலைகீழாகப் போட்டால், அது செயலற்றுப் போய் விடும்.

16. நாம் காணும் பிரபஞ்சத்தில் சுமார் 10,000,000,000,000,000,000,000,000,000,000,000,000,000,000,000,000,000,000,000,000,000,000,000,000,000,000,000,000 அணுக்கள் உள்ளன!

17. 223 ரெமிங்டன் துப்பாக்கியிலிருந்து வெளிப்படும் குண்டு மணிக்கு 2727 மைல் வேகத்தில் சீறிப் பாய்கிறது. இது ஒரு விநாடியில் 11 கால்பந்து மைதானத்தைக் கடக்கும் தூரமாகும்.

18. ஒரே மாதிரியாகப் பிறக்கும் இரட்டைக் குழந்தைகளுக்கு கை ரேகைகள் வேறு மாதிரியாகவே இருக்கும்.

19. ஒருவர் டை (TIE) கட்டிக் கொள்வதால் மூளைக்குப் பாயும் அவரது இரத்த ஓட்டத்தின் வேகம் 7.5% குறைகிறது. அது தலைவலி, மயக்கம் உள்ளிட்டவற்றைத் தரும்.

20. உலகில் வாழ்ந்தவற்றுள் அதிக ஆயுள் கொண்ட நாய் வாழ்ந்த காலம் 29.5 வருடங்கள். பூனையை எடுத்துக் கொண்டால் அதிக ஆயுளுடன் இருந்த பூனை ஒன்று 38 வருடம் 3 நாட்கள் வாழ்ந்தது.

21. உலகில் சந்தோஷமான நாடு ஃபின்லாந்து தான். வேர்ல்ட் ஹாப்பினெஸ் ரிபோர்ட் தரும் தகவலின் படி ஆறு வருடங்கள் தொடர்ந்து ஃபின்லாந்து தனது இடத்தைத் தக்கவைத்துக் கொண்டிருக்கிறது.

22. முழுவதும் வைரத்தினாலேயே ஆன கிரகம் ஒன்று இருக்கிறது. அதன் பெயர் 55 CANCRI E. இது பூமியைப் போல இரு மடங்கு பெரியது. இது 40 ஒளி ஆண்டு தூரத்தில் கடக ராசியில் உள்ளது.

23. நீருக்கடியில் மூச்சைப் பிடித்து ஒருவர் இருந்த காலம் 24.5 நிமிடமாகும். சாதாரணமாக ஒருவர் 30 முதல் 90 விநாடிகளே நீருக்கடியில் மூச்சைப் பிடித்து இருக்க முடியும். ஆனால், க்ரோஷியன் புடிமிர் சபாட் (CROATIAN BUDIMIR SOBAT) என்பவர் 2021ம் ஆண்டு மார்ச் மாதம் 27ம் தேதி 24 நிமிடம் 37 விநாடிகள் நீருக்கடியில் மூச்சைப் பிடித்து உலக சாதனையை நிகழ்த்தினார்.

# "மண் விளக்கின் அழுகை"

ஊருக்கு வெளியே, ஒரு சின்னக் கோயில். கூரை உடைந்து, சுவரெல்லாம் வெடித்து, சாமி சிலையே மண்ணோடு மண்ணாய்க் கலந்து சிதிலமாகிப் போயிருந்தது. ஆனால், ஒவ்வொரு அமாவாசை தினத்திலும் அங்கே ஒரு மண் விளக்கு தானாக எரியும்.



அதை யாரும் ஏற்ற மாட்டார்கள். அதே போல், அதை யாராலும் அணைக்கவும் முடியாது.
ஊருக்குள்ளே அதை "அழற விளக்கு"னு சொல்லுவாங்க.
"அதை கண்ணீர் விடும் விளக்கு!"ன்னும் சொல்லுவாங்க.

நகரத்திலிருந்து அந்த ஊருக்குப் புதிதாக வந்திருக்கும் பள்ளி ஆசிரியர் செல்வம் அந்த விளக்கு குறித்த விபரங்களை நம்பவில்லை.
"எல்லாம் மனிதன் உருவாக்கி வைத்தூறு பயம்" என்று சொல்லி விட்டுச் சிரிப்பான்.
அன்று அமாவாசை.
"எப்படியாவது இன்னிக்கு ராத்திரி அந்த விளக்கை அணைச்சு ஊர் மக்களின் மூட நம்பிக்கையைத் துடைக்கணும்" என்று முடிவு செய்தான்.
இரவு, தனி ஆளாக அந்தக் கோயிலுக்குள் நுழையும் போது
காற்றே இல்லாத நிலையில் அந்த விளக்கு ஆடிக் கொண்டிருந்தது.
"ஹூம்... இந்தச் சின்ன விளக்குக்கா இத்தனை பயம்?" என்றபடியே வாயால் அதை ஊதினான்.
அது அணையவில்லை.

மறுபடியும்... பலமாக ஊதினான். அப்போது, எங்கோ தண்ணீர் சொட்டும் ஓசை.

மழையும் இல்லை, பனியும் இல்லை. மேலே கூரையும் இல்லை.
விளக்கின் வெளிச்சத்திலிருந்து அந்தச் சின்னச் சின்ன துளிகள் தெறித்து விழுந்தன.
செல்வம் கையை நீட்டி அதை உள்ளங்கையில் பிடித்தான்.
அதே நேரம் ஒரு பெண் குரல். உடைந்த குரல். "அணைத்து விடாதே" செல்வம் நாலாப்புறமும் திரும்பித் திரும்பிப் பார்த்தான்.
யாருமே இல்லை.
விளக்கின் ஒளிக்குள்ளே ஒரு முகம். கருகிப் போன கண்கள் இல்லாத முகம்.

"யார் நீ?" செல்வம் தைரியமாய்க் கேட்டான்.
"இந்த ஊர் பொய்க் குற்றம் சாட்டி... என்னை எரிச்சுது... நான் எரிஞ்சு போனதினால நான் நல்லவள் என்கிற உண்மை வெளிச்சத்துக்கு வரலை... நீயாவது அதை வெளிப்படுத்து"
அந்த நொடியில் செல்வத்துக்கு எல்லாமே புரிந்தது.

பல வருடங்களுக்கு முன்னாடி இந்தக் கோயில் வளாகத்துல ஒரு பெண் ஊராலே பொய்க் குற்றம் சாட்டப்பட்டு... அவமானப்படுத்தப்பட்டு உயிரோடே எரிக்கப்பட்டிருக்கா... அவளோட கண்ணீர்தான் இப்ப மண் விளக்கா மாறியிருக்கு...."
செல்வத்திற்கு அந்த உண்மை தெரிந்த நிமிடத்தில் விளக்கு அணைந்தது.

அடுத்த நாள் காலை ஊரெங்கும் ஒரே பேச்சு. "நேத்து ராத்திரி கோயிலுக்குள்ளார எரியும் விளக்கு அணைஞ்சிடுச்சாம்"

ஆனால், அந்த இரவு முதல் செல்வத்தின் வீட்டில் ஒவ்வொரு அமாவாசையிலும் ஒரு மண் விளக்குத் தானாக எரிந்தது.
அதை அணைக்க முயன்றால்...
அது அழும்.



**-முகில் தினகரன்**
கோயமுத்தூர்.

# சுற்றுலாப் பொருட்காட்சி திடல்!

கான்ஸ்டபிள் கன்னியப்பன ஐந்தாவது ஸ்டாலை நெருங்கும்போது கவனித்தார்.
குழந்தை ஒன்று அழுதுகொண்டிருந்தது.
நீல நிற அரைக்கை சட்டையும் கருப்பு நிற டிரவுசரும் அணிந்திருந்தது.
கால்களில் கருப்பு நிற ஷூ வும் வெள்ளை நிற சாக்ஸூம் காண ப்பட்டது. அதன் சிவந்த நிற உடலுக்கு எடுப்பாய் இருந்தது ! மூக்கும் முழியு மாய் துரு துருவென்ற தோற்றம் கண்டு மனம் விரிய அக்குழந்தை யின் அருகில் சென்றார் கன்னி யப்பன்.




" பாப்பா..
நீ யாருப்பா..ஏன் அழுது க்கிட்டிருக்கே. என்ன வேணும் ?"
கன்னினப்பனின் அன்பான வார்த் தைகளைக் கேட்டு அழுகையை நிறுத்திய குழந்தை அவரைஏற இறங்கப் பார்த்தது. பிறகு மீண்டும் அழுதபடி , " அப்பாவைக் காணோம். எனக்கு அப்பா வேணும் !" என்றது.
கன்னியப்பனுக்குப் புரிந்தது.
குழந்தை தன் அப்பாவைத் தவற விட்டுவிட்டது. இதை இப்படியே விட்டுச்செல்வது ஆபத்து ! யாரா வது குழந்தையைக் கடத்திச் சென்று விடுவர். அதனால் நாம் கூட்டிச் சென்று விசாரித்து குழந்தையை உரியவரிடம் சேர்ப்போம் என நினை த்தார். அங்கேயே சில நிமிடங்கள் காத்திருந்தார். யாரும் வரவில்லை. அதோடு குழந்தை நிறுத்தாமல் அழுதுகொண்டிருந்தது !குழந்தை யின் அருகே குனிந்தபடி, " தம்பி, என்னோட வர்றயா. உங்கப்பாவத் தேடி கண்டுபிடிக்கலாம்.." என்றதும், குழந்தை அழுகையை நிறுத்தி தன் கண்களைத் துடைத்துக் கொண்டது. பிறகு ஆமோதிப்பு முகமாக கன்னி யப்பனின் வலது கையை தன் இடது கையால் பற்றி நடக்கத் தொடங்கி யது !

குழந்தைப் பேறே இல்லாத கன்னி யப்பன் ஒரு அழகான குழந்தை தன் கரம் பற்றியதும் நெகிழ்ச்சியில் சிலிர்த்துக் கொண்டார். குழந்தைப் பேறு எவ்வளவு சுகமானது என்பதை உணர்ந்தகொண்டவர் கண்களில் நீர் கசிந்தது ! போலீஸ் பூத்தினுள் குழந் தையுடன் உள்ளே நுழைந்த கான்ஸ் டபிளை பார்த்த சப்இன்ஸ்பெக்டர் ,
" கன்னியப்பன்! யாருங்க இந்தக் குழந்தை ?"

" சார் ! குழந்தை யார்துன்னு தெரிய ல்ல.அஞ்சாம் நம்பர் ஸ்டால் வாசல்ல நின்னு அழுதுக்கிட்டிருந்தது. கேட்டுப் பார்த்தப்போ அப்பாவக் காணோம்னு சொன்னது. பேசாம இங்கக் கூட்டிக்கி ட்டு வந்தேன்."
" அப்படியா ! " என்றவர், குழந்தையை அப்படியே இருகைகளாலும் அள்ளி எடுத்து தனக்கு முன்னாலுள்ள மேஜையில் அமர வைத்தார். குழந்தை தன் கண்களை சுழலவிட்டது. பிறகு மீண்டும் அழத் தொடங்கியது " அப்பா " என்று முனகியபடி !

" தம்பி !
உன் பேர் என்னப்பா ?"
அழுகையை ஒருகணம் நிறுத்தி ,
" அபிமன்யு " என சொல்லிவிட்டு மீண்டும் அழத் தொடங்கியது.
" சரி. உங்கப்பாவ கண்டுபிடி ச்சிடலாம். அழாதே. உன் அப்பா பேர் என்ன ?"
" கணேசன் "
" அம்மா ?"
" அது யாரு ?"
இன்ஸ்பெக்டரும் கான்ஸ்டபிளும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.
' பாவம் அம்மா இல்லாத குழந்தை ! குழந்தையை ஜாக்கிரதையாக பார்த்துக் கொள்ளாமல் அப்படி என்ன ஜோலி இதன் அப்பனுக்கு !' மனத் தில் நினைத்துக் கொண்டார் இன்ஸ்பெக்டர். டிராயரைத் திறந்து பிஸ்கட் பாக்கெட்டைப் பிரித்து இரண்டு பிஸ்கட் பீஸை எடுத்து குழந்தையிடம் நீட்ட, அது அழகையை நிறுத்தி அவற்றை வாங்கிக் கொண் டது.

குழந்தையைப் பற்றிய விளக்க ங்களைஒலிபெருக்கியில் அறிவிக்கச் சொன்னார் இன்ஸ்பெக்டர். ஐந்து நிமிடங்களுக்கு ஒருதரம் அறிவிப்பு விட்டு விட்டுத் தொடர்ந்தது.
பூத்திற்கு வெளியே நடமாடியவர் களை கூர்ந்து கவனித்தார்.
இவர் களில் யார் இந்தக் குழந்தைக்குத் தந்தை... குழந்தையும் இப்போது அழுகையை நிறுத்தி வெளியே பராக்கு பார்த்துக்கொண்டிருந்தது.
அதனிடமும் எந்தவித ரியாக்ஷ னும் இல்லை.

அப்போது நல்ல சிவப்பு நிறத்தில் ஷர்ட் பேண்ட் அணிந்திருந்த டிப்டா ப்பான ஆசாமி பூத்தினுள் நுழைந் தான். மூக்கும்முழியுமாய் காணப்பட்ட இவன்தான் இந்தக் குழந்தைக்கு தந்தை என நினைத்தார் இன்ஸ் பெக்டர். ஆனால் குழந்தை அவனைப் பார்த்தும் எந்தவிதச் சலன மும்மின்றி இருந்தது.
வந்தவன் யாரோ தவறவிட்ட பர்ஸை பூத்தில் ஒப்படைத்துச் செல்ல சீ என்றானது இன்ஸ்பெக்டருக்கு.
சில நிமிடங்கள் கழிந்தன.
அப்போது உள்ளே நுழைந்தவனைப் பார்த்து" ஹை அப்பா ! " என்று ஒரே எட்டில் தாவி அவன் தோளில் ஏறிக் கொண் டது குழந்தை.
அவன் கன்னங்கரே லென்று தெற்றுப்பல்லுடன் சகிக்க முடியாத தோற்றத்துடன் இருக்க இன்ஸ்பெக்டரும் கான்ஸ்டபிளும் நம்ப முடியாமல் வாயடைத்துப் போய் நின்றிருந்தனர் !



**- வி.கே.லக்ஷ்மிநாராயணன்**
ராமகிருஷ்ணா நகர்
போரூர், சென்னை- 600 116

# ஆன்மிக களஞ்சியம்

# திருநீலகண்ட யாழ்ப்பாணர் வரலாறு

தொடர்-48



**-சிவ.முத்து லட்சுமணன்**
போச்சம்பள்ளி

திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார் என்பவர் சைவ சமயத்தவர்களால் பெரிதும் மதிக்கப்படும் அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவர் ஆவார். இவர் திருவெருக்கத்தம்புலியூரில் யாழின் மூலமாக இன்னிசை வளர்க்கும் பெரும்பாணர் குலத்தில் பிறந்தவர். இவர் சிவபெருமானுடைய திருப்புகழை யாழ்மூலம் இசைக்க, ஏழிசையிலும் வல்லவரான தம் மனைவியார் மதங்கசூளாமணியாருடன் சோழ நாட்டிலுள்ள திருத்தலங்களை வணங்கி பாண்டி நாட்டின் தலைநகராகிய




மதுரையை அடைந்தார். அங்கு திருவாலவாய்த் திருக்கோயிலின் வாயிலை அடைந்து முன்நின்று இறைவனது புகழ்சேர் புகழ்மாலைகளை யாழிலிட்டு இசைத்துப் போற்றினார்.
அவ்வின்னிசையைக் கேட்டு மகிழ்ந்த ஆலவாய் இறைவர், அன்றிரவு தம் தொண்டர்க்கெல்லாம் கனவில் தோன்றித் திருநீலகண்டப் பெரும்பாணரை தமது திருமுன் கொண்டு புகும்படி பணித்தருளினார்.
அவ்வாறே பாணனார்க்கும் உணர்த்தியருளினார்.
இறைவரது விருப்பப்படி பாணர் திருவாலவாய் திருக்கோயிலுள்ள இறைவன் திருமுன் புகுந்திருந்து அவரது மெய்ப்புகழை யாழிலிட்டு இசைத்துப் போற்றினார்.
தரையினிற் சீதம் தாக்கில் சந்த யாழ் நரம்பு தளர்ந்து நெகிழும் என்று பாணர்க்குப் பலகை இடும்படி இறைவர் அசரீரி வாக்கினால் அருள் செய்தார்.
அவ்வாறே தொண்டர்கள் பாணருக்குப் பொற்பலகை இட்டனர். பாணரும் பொற்பலகையில் ஏறியமர்ந்து உமையொருபாகர் வண்ணங்களை உலகெலாம் அறிய இசைத்துப் போற்றினார்.
ஆலாவாயிறைவரைப் போற்றி அருள் பெற்ற பெரும்பாணர் பல தலங்களையும் வழிபட்டுத் திருவாரூரரை அடைந்தார். அங்கு தமது குல மரபின்படி கோயில் வாயிலின் முன் நின்று இறைவர் புகழ்த் திறங்களை யாழில் இட்டு இசைத்தார். பாணரது இன்னிசைக்கு உவந்து ஆரூர் அண்ணலார், பாணர் உட்சென்று வழிபட, வடதிசையில் வேறொரு வாயிலை வகுத்தருளினார்.
பாணர் அவ்வழுயே புகுந்து ஆரூர்த் திருமூலட்டானத்து அமர்ந்த இறைவர் முன் சென்று துதித்துப் பாடி தொழுது மகிழ்ந்தார்.

ஆளுடைய பிள்ளையாரை வணங்கும் விருப்பினராய்க் காழிப்பதியை அடைந்தார். திருஞானசம்பந்தப் பிள்ளையாருடன் சிவபெருமான் உறையும் திருத்தலங்களை வணங்கி இன்னிசைத் திருத்தொண்டு புரிந்து வந்த யாழ்ப்பாணர், தமது மனைவி மதங்கசூளாமணியாருடன் திருநல்லூர்ப் பெருமணத்தில் ஆளுடைய பிள்ளையாரின் திருமணத்தைக் கண்டு அவருடனே கூட அடியார் திருக்கூட்டத்துடன் ஈறில் பெருஞ்சோதியினுட் புகுந்து ஈறிலாப் பேரின்ப வாழ்வு பெற்றார்.

தொடரும்...

# காலக்கணித அடிப்படையில் கட்டப்பட்ட 7 கோயில்களின் சிறப்பும் வரலாறும்!



காலக்கணித அடிப்படையில் கட்டப்பட்ட கோயில்கள் என்பது இந்திய பாரம்பரியத்தின் மிக முக்கியமான பகுதி. இந்தக் கோயில்கள் ஒரு ஆன்மிகக் கட்டடங்களாக இல்லாமல், சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், கால மாறுபாடுகள் ஆகியவற்றை கணக்கிடும் அறிவியல் மையங்களாகவும் அமைந்துள்ளன அது போன்ற சில கோயில்கள் குறித்து இப்பதிவில் காண்போம்.

1. பிரகதீஸ்வரர் கோயில், தஞ்சாவூர்: இக்கோயில் சூரிய ஒளியின் கோணத்தை வைத்து, தினசரி நேரம் மற்றும் கால மாற்றங்களைக் கணிப்பதற்கான நுண்ணறிவு கணக்கீடுகள் கொண்டது. இக்கோயில் மூலஸ்தானத்தில் சூரிய ஒளி ஒரு குறிப்பிட்ட நாளில் மட்டும் இறங்கி லிங்கத்தை அடையும். இக்கோயில் கோபுர நிழல் தரையில் விழாத பரிணாமக் கணிதம் பயன்படுத்தப்பட்டுள்ளது.

வரலாறு: ராஜராஜ சோழன் ஆட்சி (11ம் நூற்றாண்டு) சோழப் பெருமையின் திருவடிக்கல்லு.

2. சிற்றம்பலம் நடராஜர் கோயில், சிதம்பரம்: இந்தக் கோயில் நட்சத்திரக் கணிதம் (Sidereal Astronomy) அடிப்படையில் கட்டப்பட்டுள்ளது. கோயில் வடிவம் காசி - கதிரவன் - ஆகாயம் என்பவற்றுடன் இணைக்கப்பட்டுள்ள வடிவமைப்பு. கோயிலின் மீது கிரகங்கள் மற்றும் நட்சத்திரங்களின் நிலைகள் நேராகத் திட்டமிடப்பட்டுள்ளன. ஆண்டின் குறிப்பிட்ட நாட்களில் சூரியன், நடராஜரின் பாதங்களை நேராகத் தொடும். உத்திராயணம் தொடக்கக் கணிப்பு.

வரலாறு: சித்தர்கள், சைவ மறையோர் போற்றிய திருவரங்கம் - பல்லவர் / சோழர் காலம். வைணவத் தலங்கள் 108ஐ தரிசித்த பலனைத் தரும் ஒரே திருத்தலம்!

3. கோனார்க் சூரியன் கோயில், ஒடிஷா: சூரியன் இயக்கத்தின் அடிப்படையில் கட்டப்பட்ட கோயில். காலக்கணிதத்தில் இதுவே மிகத் துல்லியமான கட்டடமாக கருதப்படுகிறது. கோயில் சாரதியின் ரத வடிவத்துடன் 24 சக்கரங்கள், ஒவ்வொரு சக்கரமும் 1 மணி நேரத்தைக் குறிக்கிறது. சூரிய ஒளியின் கோணத்தை வைத்து நேரத்தை கணிக்கலாம்.

வரலாறு: 13ம் நூற்றாண்டில் கங்கா வம்ச அரசர் நரசிம்ம தேவரால் கட்டப்பட்டது.

4. ஸ்ரீவைகுண்ட பெருமாள் கோயில், காஞ்சி: இது ஒரு காலக்கணித ரீதியான பண்டைய விஞ்ஞானத் திட்டம். ஆண்டின் குறிப்பிட்ட நாட்களில் மட்டும், சூரிய ஒளி நிழல் மூலஸ்தானத்துக்குள் நுழையும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. இது அயனச்சுழற்சி அடிப்படையில் திட்டமிடப்பட்டுள்ளது.

வரலாறு: பல்லவர் காலக் கட்டடம் (நரசிம்ம வர்மன் காலம்)

5. அங்கோர் வாட், கம்போடியா: சூரியனின் உச்சியில் ஏற்படும் விஷுவல் சாய்வு (Solstice & Equinoxes) ஆகியவற்றின் அடிப்படையில் கட்டப்பட்டது. கோபுரத்தின் மூலப்புள்ளி, சூரியன் வரும் கோணங்களை வைத்து திட்டமிடப்பட்டது. கோயிலின் வடிவம் உயிர் வாழும் தத்துவமும், சூரிய இயக்கமும் இணைக்கப்பட்டுள்ளது.

வரலாறு: 12ம் நூற்றாண்டு சூரிய வம்சத்தைச் சார்ந்த இரண்டாம் சூர்ய வர்மனால் கட்டப்பட்டது. நினைத்ததை அடைந்த பிறகும் மனதில் தோன்றும் வெறுமைக்கு கீதை சொல்லும் விளக்கம்!

6. காயாரோகணேஸ்வரர் கோயில், காஞ்சிபுரம்: சந்திரன் மற்றும் சூரிய இயக்கத்தின் அடிப்படையில் வாயில்கள், சுழற்சி மற்றும் நிழல் இயக்கத்தில் அமைக்கப்பட்டுள்ளது. சூரிய ஒளியின் தாக்கம் ஒரு மெதுவான சுழற்சி இயக்கம் போல காட்டப்படுகிறது.

7. ஜந்தர் மந்தர், ஜெய்ப்பூர் மற்றும் டெல்லி: நிழல், சூரிய கோண, கிரக இயக்கங்கள், சோதனைகள் போன்ற பல பரிசோதனைக் கருவிகள். தினசரி நேரம், மாதங்கள், அயனங்கள், பஞ்சாங்கக் கணிப்பு போன்றவை மிகத் துல்லியமாக கணிக்கப்படுகிறது.

வரலாறு: 18ம் நூற்றாண்டில் சவாய் ஜெய் சிங் கட்டிய புவிசார் கணித ஆலயம். அதில் உள்ள சுந்தியான் (வளர்பிறை நிழல் அளவுகோல்) மூலம் நாளையும் நேரத்தையும் மிகத் துல்லியமாகக் கணக்கிடலாம்.

இக்கோயில்கள் ஆன்மிகம் மற்றும் அறிவியல் இரண்டும் ஒருங்கிணைந்த சான்றுகளாக அமைகின்றன. பண்டைய இந்தியர் அறிவியல், காலக்கணிதம் மற்றும் கட்டடக்கலை ஆகியவற்றில் மாஸ்டர் என்பதை இந்தக் கோயில்கள் காட்டுகின்றன.

ARUNACHALAM

## தினம் ஒரு தலைவர்கள்

# அஞ்சனா தேவி சவுத்ரி வரலாறு









அஞ்சனா தேவி சவுத்ரி (1897 - 27 ஏப்ரல் 1981) ராஜஸ்தானின் சிகாரைச் சேர்ந்த ஒரு இந்திய சுதந்திரப் போராட்ட வீரர் , எழுத்தாளர் மற்றும் சமூக ஆர்வலர் ஆவார். இந்திய சுதந்திர இயக்கத்தின் போது கைது செய்யப்பட்ட ராஜஸ்தானில் இருந்து வந்த முதல் பெண்மணியாக அவர் அங்கீகரிக்கப்படுகிறார் . சுதந்திர இயக்கம் மற்றும் பெண்கள் அதிகாரமளிப்புக்கு அவர் ஆற்றிய பங்களிப்புகள் இந்திய வரலாற்றில் குறிப்பிடத்தக்கவை.

தொழில்

தேவி 1897 ஆம் ஆண்டு ராஜஸ்தானின் சிகாரில் பிறந்தார் . அவர் ஒரு முக்கிய சமூக சீர்திருத்தவாதியும் காலனித்துவ எதிர்ப்பு தேசியவாதியுமான ராம் நாராயண் சவுத்ரியை மணந்தார் , அவர் அவரை அரசியல் மற்றும் தன்னார்வப் பணிகளுக்கு அறிமுகப்படுத்தினார். ராம் நாராயணுடனான அவரது கூட்டு அவரது செயல்பாட்டை வடிவமைப்பதில் முக்கிய பங்கு வகித்தது. அவர் பிஜோலியா இயக்கத்தில் தீவிரமாக பங்கேற்றார் , அங்கு அவர் 500 பெண்களின் ஊர்வலத்திற்கு தலைமை தாங்கினார். இந்த எதிர்ப்பின் விளைவாக அவர் கைது செய்யப்பட்டு பூண்டி மாநிலத்திலிருந்து நாடுகடத்தப்பட்டார்.

அவர் இந்திய தேசிய காங்கிரஸில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டிருந்தார் மற்றும் சட்டமறுப்பு இயக்கத்தில் ஒரு முக்கிய நபராக ஆனார் . 1921 மற்றும் 1924 க்கு இடையில், பெண்களிடையே அரசியல் விழிப்புணர்வை ஏற்படுத்த அவர் பாடுபட்டார். 1930 ஆம் ஆண்டில், இயக்கத்தில் பங்கேற்றதற்காக அவர் இரண்டு முறை சிறையில் அடைக்கப்பட்டார். அவர் ஏப்ரல் 27, 1981 அன்று ராஜஸ்தானின் சிகாரில் காலமானார் .

# Gen Z ரசிகர்களுக்காக மட்டுமே படமெடுக்க வேண்டிய அவசியமில்லை



குக்கூ, ஜோக்கர், ஜிப்சி உள்ளிட்ட படங்களை இயக்கியவர் இயக்குநர் ராஜுமுருகன்.

ராஜுமுருகன் இயக்கத்தில் உருவாகி இருக்கும் அடுத்த திரைப்படம் "மை லார்ட்".

செய்தியாளராக இருந்து இயக்குநராக உருவெடுத்தவர் ராஜுமுருகன். இவர் இயக்கத்தில் வெளியான குக்கூ, ஜோக்கர், ஜிப்சி, மாடர்ன் லவ் சென்னை (லாலகுண்டா பொம்மைகள்), ஜப்பான் திரைப்படங்கள் ரசிகர்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றுள்ளன. இந்த வரிசையில், இயக்குநர் ராஜுமுருகன் இயக்கத்தில் உருவாகி இருக்கும் திரைப்படம் "மை லார்ட்".

ஒலிம்பியா மூவிஸ் தயாரித்துள்ள மை லார்ட் படத்தில் நடிகர் சசிகுமார் மற்றும் சைத்ரா முதன்மை கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர். இந்தப் படத்திற்கு ஷான் ரோல்டன் இசையமைத்துள்ளார். இந்தப் படத்தின் ஃபர்ஸ்ட் லுக் போஸ்டர் முதல் அதன் டிரெய்லர் வரை ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றதோடு, படத்திற்கான எதிர்பார்ப்பையும் அதிகரித்துள்ளது.

இந்தத் திரைப்படம் வருகிற 13ஆம் தேதி வெளியாக உள்ளது. "மை லார்ட்" திரைப்படத்தை 2டி என்டர்டெயின்மென்ட்ஸ் நிறுவனம் வழங்குகிறது. இந்த நிலையில், இயக்குநர் ராஜு முருகன் அளித்த சமீபத்திய பேட்டியில், தான் இயக்கிய ஜப்பான் படம் குறித்து பேசியுள்ளார்.

அப்போது அவர், "ஜப்பான் படத்திற்கு பிறகு என் சூழல் மிகவும் மோசமாக இருந்தது. ஆரம்பத்தில் அதை ஒரு இணையத் தொடராக உருவாக்கவே திட்டமிட்டே. கதை வடிவில் வித்தியாசமான யோசனைகள் இருந்தன. நடிகர் கார்த்தி படத்திற்குள் வந்தபோது, அவருக்காக நான் நிறைய விஷயங்களை மாற்றினேன். ஆம், அது என் பொறுப்பு தான். அந்த மாற்றங்களையெல்லாம் நானே செய்தேன், யாரிடமிருந்தும் எந்த கட்டுப்பாடுகளும் இல்லை. ஆனால் செயல்படுத்தலில் நான் எதிர்பார்த்த அளவுக்கு சிறப்பாக நடக்கவில்லை.

இப்போதெல்லாம், ஜென் இசட் (Gen Z) சில வகையான படங்களை மட்டுமே ரசிப்பார்கள் என்று மக்கள் கூறுகிறார்கள். அது ஒரு கட்டுக்கதை தான். சமீபத்தில் வெளியான "சிறை" நன்றாக வேலை செய்தது, டூரிஸ்ட் ஃபேமிலி படமும் கூட வெற்றி பெற்றது. டூரிஸ்ட் ஃபேமிலி திரைப்படத்தின் இயக்குநரும் ஜென் இசட் தான். எந்த வகையான திரைப்படமும் எந்த நேரத்திலும் ஓடலாம். ஜென் இசட் தலைமுறையினருக்காக மட்டுமே நாம் படங்களை எடுக்க வேண்டும் என்ற அவசியமில்லை," என்று தெரிவித்தார்.




நடிகை ஐஸ்வர்யா மேனன் தமிழில் நான் சிரித்தால், தமிழ்ப்படம் 2 போன்ற சில படங்களில் நடித்திருப்பவர். அவர் கேரளாவை பூர்வீகமாக கொண்டவர் என்றாலும் வளர்ந்தது படித்தது எல்லாம் தமிழ்நாட்டில் தான்.
ஐஸ்வர்யா மேனன் இன்ஸ்டாவில் அடிக்கடி கிளாமராக வெளியிடும் புகைப்படங்கள் ரசிகர்களை கவர்ந்து வருகின்றன.
அந்த வரிசையில் தற்போது ஐஸ்வர்யா மேனன் சேலையில் அழகிய போஸ் கொடுத்து இருக்கும் லேட்டஸ்ட் ஸ்டில்கள் வைரல் ஆகி இருக்கிறது.

# சூர்யா ஜோதிகா காதல் திருமணத்திற்கு இந்த பிரபல நடிகை தான் காரணம்!

சூர்யா – ஜோதிகா 1999ம் ஆண்டு வெளியான 'பூவெல்லாம் கேட்டுப்பார்' திரைப்பத்தில் முதன் முதலாக இணைந்து நடித்தனர். அதை தொடர்ந்து இந்த ஜோடி உயிரிலே கலந்தது, பேரழகன், காக்க காக்க, சில்லுனு ஒரு காதல், மாயாவி உள்ளிட்ட திரைப்படங்களை ஒன்றாக இணைந்து நடித்தனர்.

இதனையடுத்து சூர்யா – ஜோதிகா இருவரும் 2006ம் ஆண்டு இருவீட்டாரின் சம்மதத்தோடு திருமணம் செய்து





கொண்டனர்.

இந்நிலையில், சூர்யா ஜோதிகாவை காதல் திருமணம் செய்து கொண்டதற்கு முக்கிய காரணம் ராதிகா தான் என்று சிவகுமார் பேசியுள்ளார்.

யூடியூப் சேனல் ஒன்றில் பேசிய சிவகுமார், "உயிரிலே கலந்தது' படப்பிடிப்பில் தனியாகவே இருந்த சூர்யாவை ஜோதிகாவிடம் 'பேசு பேசு' என சொன்னவர் ராதிகா தான். திரைப்படங்களில் 150 கதாநாயகிகளை லவ் பண்ணுவது போல நடித்துள்ளேன். என்னால் எப்படி மகனின் காதலுக்கு நோ சொல்ல முடியும்" என்று தெரிவித்தார்.

# "சைலப்பன் சைக்கிள் மார்ட்" படத்தின் ஃபர்ஸ்ட் லுக்!



லக்ஷ்மி கிரியேஷன்ஸ் சார்பில் இசக்கி கார்வண்ணன் தயாரிப்பில், சுகா இயக்கத்தில் கிராமத்து பின்னணியில் உருவாகியுள்ள ஃபேமிலி எண்டர்டெய்னர் திரைப்படமான "சைலப்பன் சைக்கிள் மார்ட்" படத்தின் ஃபர்ஸ்ட் லுக்கை, இயக்குநர் வெற்றிமாறன் இன்று வெளியிட்டார்.

தினசரி வாழ்க்கையில் எளிய மனிதர்கள் வாழும் உண்மையான உலகத்தை அசலாக திரையில் பிரதிபலிக்கும் படைப்பாக இந்த படம் உருவாகியுள்ளது. ஒரு சைக்கிள் சக்கரத்தை மையமாக வைத்து, கிராமத்தின் முகம், அதன் மக்கள், கோவில் உள்ளிட்ட அம்சங்களை புதுமையான காட்சியமைப்பில் வெளிப்படுத்தும் ஃபர்ஸ்ட் லுக், ரசிகர்கள் மற்றும் திரையுலக ஆர்வலர்களிடையே பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.

ஒரு தென் தமிழகத்தில் உள்ள கிராமத்தில் வாழும் மனிதர்கள் மற்றும் அவர்களது வாழ்வில் நிகழும் சம்பவங்களை மையமாகக் கொண்டு, நகைச்சுவை கலந்து, குடும்பத்துடன் அனைவரும் ரசித்து மகிழும் வகையில் குடும்ப சித்திரமாக இத்திரைப்படத்தை உருவாக்கியுள்ளார் இயக்குநர் சுகா.

இந்தப் படத்தில் இசக்கி கார்வண்ணன், எம். எஸ். பாஸ்கர், இளவரசு, மூணார் ரமேஷ், இயக்குநர் சுப்ரமணிய சிவா ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். இவர்களுடன் பூஜா மோகன்ராஜ், கதா நந்தி, சுர்ஜித் கோபிநாத், வித்யா விஜயகுமார், யஷ்வந்த், சந்தான லட்சுமி மற்றும் மீனாட்சி ஐயர் உள்ளிட்ட பலர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். இசைஞானி இளையராஜா இந்த படத்திற்கு இசையமைக்கிறார். இப்படத்தின் படப்பிடிப்பு பணிகள் நிறைவடைந்த நிலையில், தற்போது இறுதிக்கட்ட பணிகள் பரபரப்பாக நடைபெற்று வருகின்றன. விரைவில் இசை வெளியீடு மற்றும் டிரெய்லர் தொடர்பான அதிகாரப்பூர்வ அறிவிப்புகள் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.



சன் டிவியில் தற்போது விறுவிறுப்புக்கு பஞ்சமில்லாமல் ஓடிக்கொண்டிருக்கும் சீரியல் எதிர்நீச்சல் 2. இந்த சீரியலில் கதாநாயகியாக ஜனனி என்கிற கதாபாத்திரத்தில் நடித்து வருபவர் நடிகை பார்வதி. இவர் இன்ஸ்டாகிராமில் ஆக்டிவாக இருக்கும் நபர் ஆவார்.
இந்த நிலையில், சமீபத்தில் எடுத்துக்கொண்ட தன்னுடைய லேட்டஸ்ட் போட்டோஷூட் புகைப்படங்களை தற்போது அவர் இன்ஸ்டா பக்கத்தில் பதிவு செய்துள்ளார்.

# நடிகை Vs இயக்குநர்.. கவனம் ஈர்க்கும் வரலட்சுமி சரத்குமாரின் வீடியோ




சகோதரி பூஜாவுடன் இணைந்து 'தோசா டைரீஸ்' என்ற புதிய தயாரிப்பு நிறுவனத்தை தொடங்கியுள்ளார்.

நடிகர் சரத்குமாரின் மகள் என்ற அடையாளத்துடன் தமிழ் சினிமாவில் அடியெடுத்து வைத்து தனக்கென ரசிகர் பட்டாளத்தை உருவாக்கியவர் நடிகை வரலட்சுமி சரத்குமார்.

'போடா போடி' படத்தின் மூலம் அறிமுகமான இவரது நடிப்பில் தாரை தப்பட்டை, சர்கார், விக்ரம் வேதா, சத்யா, சண்டக்கோழி 2 ஆகிய படங்கள் ரசிகர்களிடையே வரவேற்பை பெற்றவை. தெலுங்கு மற்றும் கன்னட படங்களிலும் நடித்து உள்ளார். விஜய்யின் கடைசி படமான 'ஜனநாயகன்' படத்தில் நடித்துள்ளார்.

இதனிடையே, மும்பையை சேர்ந்த தொழிலதிபரான நிக்கோலஸ் சச்தேவ் என்பவரை காதலித்து பெற்றோர்கள் சம்மதத்துடன் கடந்த ஆண்டு திருமணம் செய்து கொண்டார். இவர்களின் திருமணம் தாய்லாந்தில் கோலாகலமாக நடைபெற்றது. இதன்பின் சினிமாவில் பெரிய அளவில் தலைகாட்டாமல் இருந்து வந்தார்.

இந்த நிலையில், நடிகை வரலட்சுமி, தன் சகோதரி பூஜாவுடன் இணைந்து 'தோசா டைரீஸ்' என்ற புதிய தயாரிப்பு நிறுவனத்தை தொடங்கியுள்ளார்.

இந்நிறுவனத்தின் முதற்படமான 'சரஸ்வதி' மூலம் இயக்குநராகவும் வரலட்சுமி அறிமுகமாகிறார்.

இப்படத்தில் பிரகாஷ் ராஜ், பிரியாமணி, நவீன் சந்திரா உள்பட பலர் நடிக்கின்றனர். தமன் இப்படத்திற்கு இசையமைக்கிறார். படத்தின் படப்பிடிப்பு கடந்த மாதம் நிறைவடைந்தது. இந்நிலையில், நடிகை Vs இயக்குநர் என்ற தலைப்பில் சரஸ்வதி படம் தொடர்பான சுவாரஸ்யமான விடியோ ஒன்று வெளியாகி கவனம் ஈர்த்து வருகிறது.

# பட்டப்படிப்பை முடித்து டாக்டர் ஆனார் நடிகை ஸ்ரீலீலா!




நடிகை ஸ்ரீலீலா மருத்துவருக்கான பட்டப்படிப்பை முடித்துள்ளார். ஸ்ரீலீலா டாக்டர் படிப்பை முடித்து பட்டம் பெற்ற புகைப்படம் இணையத்தில் வைரல்

தெலுங்கு சினிமாவின் முன்னணி நடிகையான ஸ்ரீலீலா, தமிழில் சிவகார்த்திகேயன் ஜோடியாக 'பராசக்தி' படத்தில் நடித்து கவனம் ஈர்த்தார். தற்போது ராஜ்குமார் பெரியசாமி இயக்கத்தில் தனுஷ் நடிக்கும் புதிய படத்தில் நடித்து வருகிறார்.

இந்நிலையில், நடிகை ஸ்ரீலீலா மருத்துவருக்கான பட்டப்படிப்பை முடித்துள்ளார். ஸ்ரீலீலா டாக்டர் படிப்பை முடித்து பட்டம் பெற்ற புகைப்படம் இணையத்தில் வைரலாகியுள்ளது.

நடிகை ஸ்ரீலீலா சினிமா துறையில் மட்டுமன்றி கல்வியிலும் கலக்குவதாக ரசிகர்கள் வாழ்த்து மழை பொழிந்து வருகின்றனர்.

# 'பூக்கி' படத்தின் டிரெய்லர் வெளியானது



விஜய் ஆண்டனி தற்போது 'பூக்கி' என்ற படத்தை தயாரித்துள்ளார். இதில் விஜய் ஆண்டனியின் அக்கா மகனும், சில படங்களில் உதவி இயக்குநராகவும் பணியாற்றிய அஜய் தீஷன் கதாநாயகனாக நடித்துள்ளார். சலீம் படத்தில் ஒளிப்பதிவாளராக பணியாற்றிய கணேஷ் சந்திரா 'பூக்கி' படத்தை இயக்கியுள்ளார்.

இந்தப் படத்தில் நடிகை தனுஷா கதாநாயகியாக நடித்துள்ளார். மேலும் பாண்டியராஜன், சுனில், இந்துமதி மணிகண்டன், விவேக் பிரசன்னா, பிளாக் பாண்டி, ஆதித்யா கதிர், பிரியங்கா ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். விஜய் ஆண்டனியும் இதில் நடித்துள்ளார்.

2K தலைமுறை காதலர்களின் ரிலேஷன்ஷிப் பிரச்சனைகளை மையமாக வைத்து கலக்கலான காமெடியுடன், பரபரப்பான திரைக்கதையில், இப்படம் உருவாகி உள்ளது. விஜய் ஆண்டனி இசையமைத்துள்ள இப்படம் தமிழ் மற்றும் தெலுங்கில் நாளை மறுநாள் வெளியாக உள்ளது. இதனிடையே, 'பூக்கி' படத்தின் தொலைக்காட்சி உரிமத்தை ஜீ தமிழ் மற்றும் டிஜிட்டல் உரிமத்தை ஜீ5 நிறுவனம் பெற்றுள்ளதாக படக்குழு தெரிவித்து உள்ளது.

இந்த நிலையில், 'பூக்கி' படம் வெளியாக இன்னும் இரண்டு நாட்களே உள்ள நிலையில் இப்படத்தின் டிரெய்லர் வெளியாகிறது. 2.21 நிமிடங்கள் டிரெய்லர் வீடியோ நடிகர் சிம்புவின் குரலுடன் தொடங்குகிறது. வீடியோவில் ஒரு ஜோடி காதலில் விழுந்து, பின்பு அவர்களுக்குள் ஏற்படும் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டு பிரிந்து அதன்பின் நடக்கும் சம்பவங்களை பொழுது போக்குடன் உருவாக்கப்பட்டுள்ளது. இப்படத்தில் நடிகர் விஜய் ஆண்டனி வில்லன் கதாபாத்திரத்தில் நடித்துள்ளார்.

# காதல் கதை சொல்லவா

## திரைவிமர்சனம்





பிரேமம் படத்தின் மூலம் ரசிகர்களின் மனதை கொள்ளைகொண்டவர் நடிகை மடோனா செபாஸ்டியன். இதன்பின் காதலும் கடந்து போகும் படத்தின் மூலம் தமிழில் அறிமுகமானார். இதை தொடர்ந்து கவண், பா. பாண்டி, வைரஸ், ஷ்யாம் சிங்கராய் போன்ற படங்களில் நடித்தார். மேலும் விஜய்க்கு தங்கையாக லியோ படத்தில் நடித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இன்ஸ்டாகிராமில் இவர் அவ்வப்போது வெளியிடும் போட்டோஷூட் உடனடியாக வைரலாகும். அந்த வகையில் தற்போது ஸ்டைலிஷ் லுக்கில் எடுத்துக்கொண்ட போட்டோஷூட் புகைப்படங்களை வெளியிட்டுள்ளார்.

படத்தில் நடிகராகவே வரும் விஜய்சேதுபதி தான் நடிக்கும் காதல் கதை செல்லவா என்கிற படத்தின் பர்ஸ்ட் லுக் ஒன்றை வெளியிடுகிறார். அந்த படத்தின் கதையை மக்களிடமே கேட்க நினைக்கும் விஜய் சேதுபதி, ரேடியோ எப்.எம் மூலம் பொது மக்களிடம் காதல் கதைகளை கேட்கிறார்.

அப்படி விஜய்சேதுபதிக்கு இரண்டு பெண்கள் போன் செய்கிறார்கள். அதில் ஒருவர் நிகிதா. வங்கியில் வேலை செய்கிறார். அதே வங்கியில் செக்யூரிட்டியாக வேலைசெய்கிறார் ஜெய்ராம். இவர்களுடைய காதல் கதையை சொல்கிறார்.

விஜய்சேதுபதியிடம் பேசும் மற்றொரு பெண், நகுலிடம் தனக்கு ஏற்பட்ட பழக்கத்தை பற்றி கூறுகிறார். இவர்களுக்கு சில ஆலோசனைகளையும் விஜய்சேதுபதி கூறுகிறார். கடைசியில், இருவர் வாழ்க்கையிலும் என்ன ஆனது? விஜய்சேதுபதி கதையை தேர்ந்தெடுத்தாரா? என்பது படத்தின் மீதிக்கதை..

**நடிகர்கள்**

விஜய் சேதுபதி வழக்கம் போல தனது எதார்த்தமான நடிப்பால் முத்திரை பதிக்கிறார். அதிக ஆர்ப்பாட்டம் இல்லாத வசன உச்சரிப்பும், கண்கள் வழியே கடத்தும் உணர்வுகளும் படத்திற்குப் பலம். ஜெயராம், தனது பரந்த அனுபவம் மற்றும் கலைஞரான திறமையால் இந்த காதல் கதையின் உணர்வுகளை நேர்த்தியாக வெளிப்படுத்தியுள்ளார்.

துடிப்பான இளைஞராகவும், அதே சமயம் காதலில் உருகும் காதலனாகவும் நகுல் சிறப்பான பங்களிப்பை வழங்கியுள்ளார். படத்தின் நாயகிகள் கதையின் காதல் கோணத்தை மிக நுட்பமாக வெளிப்படுத்துகின்றனர்.

**இயக்கம்**

ஒரு மென்மையான, அழகான காதல் கவிதையை இயக்க முயற்சியிருக்கிறார் இயக்குனர் சனில் களத்தில். கதைக்களம் நன்றாக இருந்தாலும், சில இடங்கள் நாம் ஏற்கனவே பார்த்த பழைய காதல் படங்களை நினைவுபடுத்துகின்றன. படத்தின் வேகம் சில இடங்களில் தொய்வடைகிறது. இரண்டாம் பாதியில் வரும் சில காட்சிகள் சற்று இழுவையாகத் தோன்றுகிறது.

**இசை**

படத்தின் பாடல்கள் மெலடி ரகமாக அமைந்துள்ளன. காதலைச் சொல்லும் காட்சிகளுக்குப் பின்னணி இசை கூடுதல் பலம்.

**ஒளிப்பதிவு**

காதலின் ஆழத்தைப் பிரதிபலிக்கும் வகையில் ஒளிப்பதிவு அமைந்துள்ளது.

ரேட்டிங்- 2.5/5

# திருமணத்தை ஆவணப்படமாக தயாரிக்க திட்டம்



விஜய் தேவரகொண்டா-ராஷ்மிகா திருமண நிச்சயதார்த்தம் ரகசியமாக முடிந்த நிலையில், இருவரது திருமணம் வருகிற 26-ந் தேதி ராஜஸ்தான் மாநிலத்தில் உள்ள உதய்பூர் அரண்மனையில் நடக்க இருப்பதாக கூறப்படுகிறது.

ஆனால் திருமணம் பற்றி இதுவரை இருவருமே அதிகாரப்பூர்வ அறிவிப்பை வெளியிடாமல் மவுனம் காத்து வருகிறார்கள்.

இதற்கிடையில் விஜய் தேவரகொண்டா- ராஷ்மிகா ஜோடி தங்களது திருமண நிகழ்வை ஆவணப்படமாக தயாரித்து ஓ.டி.டி. தளத்தில் வெளியிடவும், இதற்காக பெரிய தொகைக்கு ஒப்பந்தம் பேசியிருப்பதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஏற்கனவே நயன்தாரா-விக்னேஷ் சிவன் தம்பதியும் தங்கள் திருமணத்தை இதேபோல ஆவணப்படமாக தயாரித்து ஓ.டி.டி. தளத்தில் வெளியிட்டது குறிப்பிடத்தக்கது.




நடிகை மீனாட்சி சவுத்ரி சேலையில் அழகிய போஸ் கொடுத்திருக்கும் ஸ்டில்கள். கிளாமர், ஹோம்லி லுக் என இரண்டிலுமே ரசிகர்களை கவர்ந்து வருபவர் தான் மீனாட்சி சவுத்ரி.

அவர் தற்போது தெலுங்கில் தான் அதிகம் படங்கள் நடித்து வருகிறார். லக்கி பாஸ்கர் ஹிட் ஆன பிறகு தெலுங்கில் அதிகம் வாய்ப்புகள் குவிந்தது.

அவர் நடித்த Anaganaga Oka Raju என்ற படம் பொங்கலுக்கு ரிலீஸ் ஆகி இருந்தது. மீனாட்சியின் அழகிய சேலை போட்டோஷூட் புகைப்படங்களை பாருங்க.

# ஒரு ரூபாய் கூட சம்பளம் வாங்காமல் பாலிவுட் படத்தில் நடித்திருக்கும் தமன்னா




தமன்னா 1 பாடலுக்கு நடனமாட ரூ.6 கோடி சம்பளம் வாங்குவது குறிப்பிடத்தக்கது.

திரை உலகை பொருத்தவரை படம் எடுப்பதற்கு ஆகும் செலவை விட ஹீரோ, ஹீரோயின்களின் சம்பளம் அதிகம். படத்தில் சிறப்பு தோற்றத்தில் நடிப்பதற்கு கூட கோடிக்கணக்கில் சம்பளம் வாங்குகின்றனர். இந்நிலையில் காதலர் தினத்தையொட்டி வெளியாகும் 'ஓ ரோமியோ' என்ற இந்திப்படத்தில் நடிகர் விக்ராந்த் மாஸ்சியும், தமன்னாவும் ஒரு ரூபாய் கூட சம்பளம் வாங்காமல் நடித்துள்ளனர்.

விஷால் பரத்வாஜ் இயக்கத்தில் உருவாகி உள்ள இந்த படத்தில் ஷாகித் கபூர் மற்றும் திருப்திடிம்ரி நடித்துள்ளனர். மேலும் விக்ராந்த் மாஸ்ஸி, திஷாபதானி, தமன்னா மற்றும் நானே படேகர் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். படத்தில் நடித்துள்ள விக்ராந்த் மாஸ்சியும், தமன்னாவும் இயக்குநர் விஷால் பரத்வாஜிற்காக சம்பளம் வாங்காமல் நடித்துள்ளனர்.

தமன்னா சுமார் 12 நாட்கள் படப்பிடிப்பில் பங்கேற்றது மட்டுமின்றி முன்னதாக ஒத்திகைகளிலும் பங்கேற்றார். சமீபகாலமாக தமன்னா 1 பாடலுக்கு நடனமாட ரூ.6 கோடி சம்பளம் வாங்குவது குறிப்பிடத்தக்கது.



**ஒளிரும் விளக்கின் நாயகன் தாமஸ் ஆல்வா எடிசன்!**

ஒளிரும் விளக்கைக்கண்டவர்
ஒலியின் வரைவி கண்டவர்
களிப்பாய்த் தந்தி கண்டவர்
கண்டு பிடிப்பின் வேந்தரே!

மின்னில் இயங்கும் எந்திரம்
மேன்மை யாகக்கண்டவர்
மின்னில் குமிழி
தன்னையும்
மின்ன லாகக்கண்டவர்!

எடிசன் விளைவு என்றிட
ஏற்றம் தானும் சொல்லிட
எடிசன் இல்லை என்றாலே
ஒளிரும் விளக்கு இல்லையே!

**குறள்வெண் செந்துறை!**

வணக்கம்
இறையை நோக்கி
வணங்கிடுவோம்
இன்பந் தன்னில்
சூழ்ந்திடுவோம் சிறப்பாய்
நாளும் வணங்கிடுவோம்
செழுமை தன்னில்
சூழ்ந்திடுவோம்!

வணக்கம் நல்ல மரியாதை
வாழ்த்து கூறும் குணமாகும்
இணக்கத் தோடு
யாரையுமே இனிய பண்பாய்
வணங்கிடுவோம்!

**சிந்தனைச் சிற்பி சிங்கார வேலனார்!**




நேரிசை வெண்பா!

சிந்தனைச் சிற்பியாம்
சிங்கார வேலரே வந்தனை
செய்தே வணங்குவோம்..
சிந்தை குளிரவே சீர்திருத்தம்
கொண்டுவந்தார் நல்ல
களிப்புடனே வாழ்த்து
கனிந்து!

தேச விடுதலைப்
போராட்டம் தேர்ந்திட
பாசமாய்க் கண்டார்
பளிங்குடன்..நேசமாய்த்
தேசத்தை
எண்ணித்
தெளிந்தாரே
சிங்காரம்
ஆசையாய்
வாழ்த்தல்
அழகு!



**முனைவர் இராம.வேதநாயகம்**
திருவண்ணாமலை.



சிறிது நேரம் மாடியில் ஓய்வு
எடுக்கும் போது
கண் சிமிட்டும
நட்சத்திரங்கள் பால் போன்று
பௌணர்மி நிலா
எதையும் ரசிக்க முடியவில்லை
மனதில் சாண் வயிரை
கொடுத்து முழம் நீளத்துக்கு
கவலையை
கொடுத்த
இறைவனால்.



**ஜயந்தி சிவகுமார்.**
No.1 Tollgate
Trichy.

இன்ப துன்பம் நடக்கும்
"நடந்ததை" நினைத்து
கவலைப்படுவது துன்பமே !

"நடக்கிறதையாவது"
அதன்போக்கில் போய்
வாழ்ந்தால் இன்பமே !

"நடக்கும்" என்ற
நம்பிக்கையில்
நகருங்கள்
"இன்பமோ"
"துன்பமோ"
இரண்டில்
ஒன்று வந்தே
தீரும் !



**G.A.கோவிந்தராஜ் (எ)சுரேஷ்குமார்**
திருப்புவனம் புதூர்



**எதைத்தான் ரசிப்பது?**

காதோரம் கதை பேசும்
கம்மல்களையா? இல்லை
என்னை கண்டுகொள்ளாமல்
கனவில் தோன்றும்
புன்னகையா?
உன் கூந்தலில் குடியிருக்கும்
மலர்களையா? இல்லை
கூட்டத்தில் பார்த்தாலும்
அழகாக தெரிகின்ற
முகத்தினையா?
வட்ட நிலாவில் பிறை போன்ற
உன் ஒற்றைப் பொட்டினியா?
இல்லை என்னோடு வம்பு
இழுக்கும் உன் கண்ணாடி
வளையல்களையா?
கன்னத்தில் தவழும் சுருண்ட
முடியையா? இல்லை உன்
கால்களில் நடனமாடும்
பாத கொலுசுகளையா?
எதைத்தான் ரசிப்பது?
உன்னை காணும் அந்த
ஒற்றை நொடியில்?
என் மனதை
கொள்ளை
கொண்ட
கள்ளியே,
காத்திருக்கிறேன்
உன்
தரிசனத்திற்
காக....



**வே. சுபலட்சுமி**

**சந்தோஷம்**

உன் முன் எவ்வளவு பேர்
இருந்தாலும்
நிதானமாக பயமில்லாமல்
பேசக்கற்றுக்கொள்!

கீழே விழுந்து விட்டாயா நீயே
எழுந்து நிற்க கற்றுக்கொள்
யாரையும் எதிர்பார்க்காதே !

தெரியாமல் தவறு செய்து
விட்டாயா ஒத்துக்கொள்ளும்
தைரியத்தை
வளர்த்துக்கொள் !

அடுத்தவர்கள் உன்னை
விமர்சிக்கிறார்களா
அப்படியானால் நீ சாதித்துக்
கொண்டிருக்கறாய் என்று
அர்த்தம் !

யாரையும் ஏமாற்ற
முயற்சிக்காதே
உன் வேலையை மட்டும்
சிறப்பாய் செய்துவிடு!

உன்னை நம்பி யாரேனும்
வந்தார்களா அவர்களுக்கு
வழிகாட்டியாக இரு !

கடவுளால் கொடுக்கப்பட்ட
திறமையை பயன்படுத்திக்
கொள் மனிதரால்
கொடுக்கப்படும் புகழை
நன்றியுடன் ஏற்றுக்கொள்!

நம்பிக்கை துரோகத்தை ஒரு
போதும் செய்யாதே
நமக்கு நாமே கொடுக்கும்
அகம்பாவத்தை விட்டு விடு!

கோபுரத்தில் இருந்தாலும்
குடிசையில் இருந்தாலும் உன்
மனதை பொறுத்து தான்
உன் சந்தோஷம் அமையும்!



பிறரை வாழ
விடு
நீயும் வாழ்ந்து
விடு !

சந்தோஷம்
என்றுமே
உன்கையில்
வென்றுவிடு!

**ம.இந்திராணி,** திருச்சி

**தம்பிக்கு எந்த ஊரு?**

செருப்புகள் ஷோ ரூமில்..
சாப்பாடு தெருவோரம்
விற்கின்ற ஊரு.!

கருப்புப் பணத்தை..
உண்டியலில் போட்டால்..
பரிவட்டம் கட்டுகிற
கோவில்.!

லட்டிலே கலப்பு நெய்..
சபரிமலை தங்கச் சுரண்டல்..
தாங்குமா சாமி?

ஓசோனில் ஓட்டை..
பாக்கெட்டில் குடித்தண்ணீ
மாசிலே சுத்துதோ பூமி?

நதியெலாம் கழிவு நீர்..
நட்பெல்லாம் கானல் நீர்
இதுவெல்லாம் தொடர்தால்..
இருக்குமா நீதி!

கடந்தன கால்கள் மறந்தன
மனிதாபிமானம்.. ஏழைக்கு
கிடைக்குமோ மீதி.?


பறவைக் கூடுகள்..
பாதையில் சிதற.. பார்த்துப்
பார்த்து.. மனதோ பதற..
காடுகள் அழிகையில்
மழையோ?

ஏடுகள் விரிய.. எழுத்துகள்
எழுத.. மறுப்பது..ஏன்
யெனத் தெரியாது தலை
குனிகிறது என் தூவல்..

நாம் இருப்பது.. நமக்கென
இருப்பது..
நாடா..
இங்கே வாடா..
ஏன் என
கேட்காமல்
நடக்கிறாயே
சீ.. போடா.!



**வே.கல்யாண்குமார்.**



**ஹைக்கூ!**

நியாயமானது
சின்னத்தம்பி யானையின்
சினம்!

விரைவாக காதல்
விரைவாக திருமணம்
விரைவாக மணவிலக்கு!

காடுகளை அழித்தால்
கொண்டது கோபம்
சின்னத்தம்பி யானை!

ஒரே ராசிக்கு வேறு வேறு
பலன்கள் சோதிடர்கள்!
சிரிப்பு வந்தது
சுவரொட்டி பார்த்து
வருங்கால முதல்வரே!

நம்பவில்லை
கிரகங்களின்
ஆதிக்கத்தை கலாம்!

தைப்பது இல்லை அறுந்ததும்
மாற்றி விடுகின்றனர் செருப்பு!

உண்மை தான் வாயுள்ள
பிள்ளை பிழைக்கும் சோதிடர்!
வளர்ச்சிக்குத் தடை
எப்போதும் வேண்டாம்
எதிர்மறை எண்ணம்!

எங்கும் போகட்டும்
ராகும் கேதும்
நீ கவனமாக இரு!

நிராகரிக்கப்படுகிறார்
பணமற்ற நல்லவர்
வேட்பாளர் தேர்வில்!

ஏழரை சனி என்பது கற்பனை
வேண்டாஅம் கவலை!

காட்டை அழித்ததால் நாட்டை
அழிக்க வந்தது யானை!

கூட்டக் கூட்ட வந்தது குப்பை
அரசியல்!

தற்கொலைக்கு
காரணியாகின்றனர்
இரக்கமற்ற காவலர்கள்!



**கவிஞர் இரா. இரவி.**



**50 வயது உடைய நபரின் ஏக்கம்!**
(ஜல்லிக் கட்டை எண்ணி)

காந்தியின் அறப்போரை
காகிதத்தில் படித்தேன்
கண்ணால் காண அவா!

அவா அரங்கேற்றம்
அமைதி போராய் இன்றைய
இளைய சமுதாயத்தால்!

மன வலிமைக்கும்
மத ஒற்றுமைக்கும்
மார்க்கமாய் நின்று
மகத்தாய் நடந்ததே
மனவலிமை போராட்டம்!

தமிழனின் வீரத்திற்கு
தன்மானம் காக்க
தன்னிகரற்ற தமிழனின்
தன்னெழுச்சி
போராட்டம்!

கன்னிப் பெண்களோ
கலங்கமின்றி களத்தில்
சகதோழியாய்
தோழனோடு
சகஜமாய் அமர்ந்தாரே!

பழிச் சொல்லிற்கு இடமேது!
அரட்டைக்கு இடமேது!
பண்பாட்டிற்கு இலக்கணமாய்
பாரம்பரிய தமிழனின்
பழமை வீரவிளையாட்டிற்கு
போராட்டம்!

மனம் ஏங்குது!
எனது மனம் துடிக்குது!

நம் அகவை ஏனடா
நாற்பதை தாண்டியது!

நாம் இளைய சமுதாயமாய்
இல்லையே என!

வானாளாவிய புகழ்
வீரத் தமிழனின் எழுச்சியை
வாயாரச் சொல்லுமே
வரலாற்றையே படைக்குமே!



இன்றைய இளைஞர்
சமுதாயம்
இனிதே நடத்திய
ஜல்லிக்கட்டு போராட்டம்!

**பா. கலைமகள்,**
விழுப்புரம்.



**காதலித்துப் பார்**

கனவுகளே உணவாகும்
உடல் மெலியும்! தாரமாக
அவளை நினைப்பாய்!
பாரமாக பெற்றோரை
நினைப்பாய் அவளுக்கு
அட்சய பாத்திரமாவாய்
பெற்றோருக்குப் பிச்சை
பாத்திரமாவாய்! கலவி
எண்ணம் தோன்றும் கல்வி
எண்ணம் குன்றும்!
எப்போதும்
வெள்ளை நிற இரவும்
கருநிற பகலும் உருவாகும்
உன் எதிர்காலம் பாழாகும்!
கவிதை எழுதுவாய்!
கழுதையாய் அழுவாய்!
அவளுக்கு வேலியாவாய்
உன் தோட்டம் காலியாகும்!
பூப்பூக்கும் ஓசை கேட்கும் நீ
வாங்கும் வசவு கேட்காது!

காதலிக்காதவனை இதயம்
இல்லாதவன் என்பாய்
நீ மூளை இல்லாதவன்
என்பதை மறப்பாய்! அவள்
கைபேசிக்கு ரீ–சார்ஜ்
செய்வாய் உன் கைபேசிக்கு
உறை மாற்ற யோசிப்பாய்!
அவளைப் புத்திசாலி
என்பாய் உன்னைப்
பைத்தியக்காரன் என்பாய்!
அவளுக்காக கண்ணீர்
சிந்துவாய் உன் பெற்றோர்
ரத்தம்
சிந்துவதை
மறப்பாய்!
காதலித்துப்
பார்
இளைஞனே.
நீ மதி
இழப்பாய்
நிம்மதி இழப்பாய்!



**எஸ். சந்திரசேகரன்**
**அமுதா** செஞ்சி கோட்டை



முத்த யுத்தத்துக்கு
ஆயத்தமாய் இதயத்தை
ஊடுறுவும்
மலர்க் காதல்அம்பு.

விழி அம்பு ஆனதால்
வலிகளும்.. ஏக்கங்களும்.

பூஞ்சொற்கள் ஆனதால்
மலர்ச்சியுறும் முழுமை பெற்ற
சொல்லத் தெரியாத
ஆனந்தம்

காதல் வேதத்தின்
சின்னமாயொரு
ஆதிகால அரிச்சுவடி!

---

எண்ணச் சிதறல்கள்
தெறித்து விழ
வண்ண வானவில்
உள்ளங்கைகளில்..

பார்த்த கணம் உயிர் பிரிந்து
சென்றது.. பேச ஆரம்பித்த
நொடியில் உட்புகுந்து
நிரம்பித்தன்னை
சாஸ்வதமாக்கிக்
கொண்டது அன்று.

சிலிர்க்கவைக்கும்
பாடல்களுக்கும், உட்புகுந்து
உயிர்நிறப்பும் சுவாசக்
காற்றுக்கும்
உன் ஞாபகத்தின் சாயல்!

ஆயுள் ரேகையாய்
நீண்டு படுத்திருக்கிறாய்
என் உள்ளங்கைக்குள்..
சுருட்டி
வைக்கப்பட்ட
காதல் நீ !



**கீதா கண்ணன்**
ஸ்ரீரங்கம்

**நல்ல எண்ணம் நல்ல வாழ்க்கை**

நேர்மறை எண்ணங்களே
மகிழ்ச்சியான வாழ்விற்கு
அடிப்படை!
எண்ணங்கள் செயல்களாகவும்
செயல்கள் பழக்கங்களாகவும்
மாறும்!

வெற்றி என்பது விழுவதல்ல
விழுந்த போதெல்லாம்
மீண்டும் எழுவது!

காலத்தை வீணாக்காதே
காலம் தான் வாழ்க்கையை
உருவாக்குகிறது!

உங்கள் ஆழ்மனதில் என்ன
விதைக்கிறீர்களோ அதுவே
நிஜமாக மாறும்!

நல்ல எண்ணத்தோடு
உழைக்கும் போது வெற்றி
தானாக தேடி வரும்!

உன்னால் முடியும் என்று
நம்புவதே பாதி வெற்றி!

மகிழ்ச்சி என்பது
தேடி வருவதல்ல நீயே
உருவாக்குவது!

நேற்றைய தோல்வி
இன்றைய முயற்சிக்கு
உரம்!

எண்ணம் எதுவோ
அதுவாகவே நீ ஆகிறாய்!

நல்லதை நினைத்தால்
நன்மைகள் தேடி வரும்!

பல வண்ணங்கள்
மலர்களுக்கு அழகு, நல்ல
எண்ணங்கள் மனிதர்களுக்கு
அழகு!

உன் மதிப்பை முடிவு செய்ய
வேண்டியது நீதான் உன்னை
சுற்றி இருப்பவர்கள் அல்ல !

எண்ணம் போல் வாழு பிறரை
போல் வாழ எண்ணாதே !

எண்ணங்கள் பெரும் கற்பனை
அல்ல எண்ணங்கள் நிஜமான
பொருள்கள்!

உன் மேல் நம்பிக்கை
வந்தால் வெற்றி !

அடுப்பில் விறகை போட்டால்
தான் வெப்பம் வரும் ,
சேவை செய்கிறது விறகை
போடுவது, வெகுமதி என்பது
அந்த வெப்பம் !

நதி போல் இலக்கை நோக்கி
செல்ல வேண்டும் !

தெளிவான இலக்கு
உள்ளவர்களுக்கு வெற்றி
நிச்சயம்!



**பெ.திருமுகம்**
மணமேல்குடி

# நூல் விமர்சனம்

நூலின் பெயர்: தாமிரவருணி கேள்வி பதில்
ஆசிரியர்: கீழாம்பூர் சங்கர சுப்பிரமணியன்
விலை:₹100
வெளியீடு : கலைமகள் பப்ளிகேஷன்ஸ்
தொடர்புக்கு: 044– 2498 1699

தாமிரபரணி ஆற்றிலே வெள்ளம் வந்தால் உபரி நீர் வெளியேற்றப்படும்.

தாமிருவருணியிடம் கேள்வி கேட்டால் பதிலுடன் உபரித்தகவலும் வெளிப்படும்.

ஆர்.ராஜசேகர் மும்பை, தனிமை விரும்பியா நீங்கள்? நன்றாக கேட்டீர்கள் போங்கள். காபி குடிக்க ஹோட்டலுக்கு போக வேண்டுமானாலும் கூட எனக்குத் துணை ஒருவர் வேண்டும். என் கூட எப்போதும் மனிதர்கள் இருப்பதையே விரும்புகிறேன்.

உபரித் தகவல்: இரவு நேரத்தில் வெளியூர் ஹோட்டல்களில் தனிமையில் தங்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது என்று வையுங்கள் இருக்கிற எல்லா லைட்டையும் போட்டுக் கொண்டு படுத்துத் தூங்குவேன். வீட்டில் யாரும் இல்லை என்றாலும்(பாத்ரூம் லைட் உள்பட) போட்டுவிட்டு எரிகிறதா என்று பார்த்துவிட்டுத்தான் தூங்குவேன்.

பிரின்ஸ் ஜெயபால் - வண்ணாரப்பேட்டை அசோக மரங்கள் உங்களுக்குப் பிடிக்குமா?

சோகம் என்றால் புரியும். சோகத்திற்கு எதிர்ப்பதம் அசோகம். அசோகமரங்கள் நீண்டு வளர்வதுடன் சுகமான காற்றைத் தருவன.

**உபரித் தகவல்:**

இராமாயணத்தில் சீதையை அசோகவனத்தில் வைத்திருந்தான் இராவணன். ஏதாவது சோகம் வந்தால் மீள, இராவணன் தயாரித்து வைத்திருந்த இடம் அசோகவனம். இதில் ஆச்சரியப்பட வேண்டிய விஷயம் என்னவென்றால், ஒரு நாள் கூட அசோகவனத்தை இராவணன் எட்டிப் பார்த்தது கிடையாது. சீதை வந்த பின்புதான் அசோகவனம் வந்தான். இராவணனுக்கு சோகம் வந்த பின்புதான் அசோகவனம் வந்தான் என்று பண்டிதர்கள் சொல்லக் கேட்டுள்ளேன்.

*(2000 ம் ஆண்டிலிருந்து திரு. கீழாம்பூர் சங்கர் சுப்பிரமணியன் அளிக்கும் பதில்கள், இதில் தேர்ந்தெடுக்கப்பட்டு ஏழு பகுதிகளாக தொகுக்கப்பட்டு வாசகர்கள் முன்னிலையில் நேரடியாக இந்திரன் நீலன் சுரேஷ் அவர்கள் வினா எழுப்ப விடை அளிக்கப்பட்டது உலக சாதனையாம்)*

வாழ்த்துகள்

**கீழாம்பூர் ஜி ஸ்ரீகாந்த் திருச்சி**









குளத்தில் விழுந்திருந்த
மரத்தின் நிழல்,
ஆழத்தில் அமிழ்ந்திருந்த
கூழாங்கல்லிடம்
அரற்றிக்கொண்டிருந்தது,



அடிக்கிற
வெயில்
தாங்க
முடியவில்லை
என்று.

**கே. பி. ஜனார்த்தனன்**



என்னதான் சாதிகள்
இல்லையடி பாப்பாவென
பாரதி எழுதினாலும்
பள்ளியில் சேரும் போதே
விண்ணப்பத்தில் உன் சாதி
என்ன? என்ற கேள்வியும்
தவறாது இடம் பெற்றது .

**ஸ்ரீகாந்த்** திருச்சி




காதலுக்கான உச்சவரம்பை
நீ நிர்ணயிக்கிறாய்..
உதடுகளுக்கோ எல்லை
தாண்டிய பயன் தரும்
வாதத்தில் இச்சை.

காதல் படிக்கட்டுகளைத்



தேடிப்
போனேன்..
எஸ்கலேட்டராய்
மாறி விட்டது
உன்னைப்
பார்த்ததும் !

**ரிஷபன்**



## சோலையில் வேலை தேடுகிறாயோ?.....

வண்ணத்துப்பூச்சி நடமாடும்
சோலையில் மலர்கள்
ஆசனமாக காத்திருக்க
அதில் அமர்ந்து பணி
நோக்க ரீங்காரமிடும்
பட்டாம்பூச்சி தேன் என்ற
கூலி பெற சிறகுகள் விரித்து
உழைக்கவும் பிழைக்கவும்
தெரிந்தது மகிழ்வே... தான்
பெற்ற தேனை தன்
சகாவும் பெற உதவு
துடிக்கிறதோ சின்ன பெரிய
வண்ணத்துப் பூச்சிகளின்
ஒற்றுமை உணர்வை போற்றி
மகிழ்வோம்.



உழைத்தால்
கிடைப்பது
கூலி
மட்டுமல்ல மன
நிறைவும்தான்

**உஷா முத்து ராமன்**



கற்றல் ஒரு தவமே
கற்றல் ஒரு தாகமே
நாளும் கற்பேன்



நானும் தாகம்
தணிய
என் தவமும்
பலிக்க

**ஓம் குமார் P N**
மதுரை

1. இயற்கை எல்லாவற்றையும்
அழித்த மனித இனம்
தன் இறப்பை மட்டும்
இயற்கை மரணம் என
அறிவித்துக் கொள்கிறான்

2.நம்மால் காக்க முடியாத
ரகசியத்தை
இன்னொருவர் காப்பார்
என எப்படி நம்புகிறோம்

3.கஷ்டம் வரும்போது
கண்ணை மூடாதே
அது உன்னை கொன்று
விடும் கண்ணை திறந்து பார்
அதை நீ வென்று விடலாம்

4.ஆண்களில் இரண்டு ரகம்
ஒருவர் மனைவியை டீ
போட்டு கூப்பிடுவார்
மற்றவர் டீ போட்டுவிட்டு
மனைவியை கூப்பிடுவார்

5. ஆசைகளுக்கு தான்
எதிர்காலம் தேவைப்படும்
ஆனந்தமாக வாழ்வதற்கு



நிகழ்காலம்
போதும்
காலங்கள்
மாறுவதில்லை
மாறுவது
மனித மனம்
மட்டுமே

**நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி



## உயிர் கொடுத்து விடுமா

வெள்ளி தட்டிலே
வெண்ணிலவு வெளிச்சம்
பட்டதுபோல.. ஒரே
இரவில் என் உள்ளத்தை
நீ சுட்டதுபோல....
மங்காத வெளிச்சம்
கார்மேகத்துக்குள்..நீ
மறைஞ்சது போல...
கண்ணுக்கு தெரியாமல்
காதல் நெஞ்சுக்குள்
துடித்ததுபோல...
கண்ணே உன் கண்
கலங்காமல் நான்
காப்பது போல....
இத்தனையும் நான் கண்டது
கனவுகள் போல...



இதெல்லாம்
நிறைவேருமா...
என் காதல்
நிலையா
நிலைத்திருமா...
என் உயிருக்கு
உறவு
கிடைத்துடுமா.....!!

**பொன்.கருணா**
நவி மும்பை



## காதல் - மோதல்

காணும் போதெல்லாம்
கண்களால் பேசி
துவங்கிய காதல்....
கைகளை குலுக்கிய போது
காதலை உறுதியாக்கியது !

காதலர்களாக
இருந்த போது கைகோர்த்து



நடந்தவர்கள்
இப்போது
எதிரெதிர்
திசையில்.....
கணவன்
மனைவியாய் !

**எம்.பி. தினேஷ்.** கோவை



## வாழ்க்கை நிலையற்றது

குத்திக் கிழித்தால்
இரத்தம் வரும் என்பதற்காக
வெட்டாமல் கொடுக்குமா
மூங்கில் மரம்
புல்லாக்குழலை,,,

யாரையும் அவன்போறான்
குப்பையென கேவலாமய்
திட்டாதீர்கள் குப்பைதான்
எருவாகி உணவே நமக்கு
மருந்தாகிறது,,,

வேஸ்ட் என்று இங்கு
எதுவுமில்லை அசுத்தமான
இயந்திரங்களை சுத்தம்
செய்யவே
அவசியப்படுகிறது,,,

ஆகாதுயென்று நம்மால்
ஒதுக்கப்படுவதுதான்
மறுசுழற்சி முறையில்
நம்ம மனையை
அலங்கரிக்கிறது,,,

மனிதர்களை நேசிப்போம்
பிடிக்கவில்லையென்றால்
ஒதுங்கிப்போவோம்
தூற்ற வேண்டாமே
வாழ்க்கை நிலையற்றது,,,!

**நாகை ஆசைத்தம்பி**
கோவை

## அறிவாய் மனிதா அறிவாய்

ஒரு ரூபாய் சுண்ணாம்பு
கட்டி கரும்பலகையில்
அறிவொளி ஏற்றி வைத்து
தன்னை கரைத்து
உன்னை உயர்த்தும்.!!!

ஒரு சில ஆயிரங்களின்
கைபேசியின் தொடர்
பயன்பாடு! பல கோடி பேரின்
கண் பார்வையை இழக்கச்
செய்யும்! கதிர் வீச்சால்
தூக்கம் போகும் மன
அழுத்தம் நோயாய் மாறும்!


வண்ண வண்ண நிறத்தால்
கண்ணை கவரும்குணத்தில்
தன்னை கொடுத்து உன்னை
மயக்கும்! மண்ணில்
விண்ணில் தோன்றும்
நிகழ்வை காட்ட உதவும்!
என்னில் உன்னில் இன்று
உடல் உறுப்பாய் அதுவும்
மாறும்! ஆறாம் அறிவின்
உச்சம் காணும்.

நெல்லிக்கனியின் சுவையை
அதுவும் கண்ணில் காட்டும்!
அந்தரங்க எட்டிக்காய்கள்
உன்னை மயக்கும்.!
உள்ளம் மட்டும் தெளிவாக
இருந்தால் உன்னை
உயர்த்தும்.! இன்பம் துன்பம்
இரண்டும் இங்கே வாழ்வின்
அங்கம்.!உணர்ந்து நீயும்
ஏற்றுக் கொண்டால் நீதான்
தங்கம்.! அறிவாய் மனிதா



அறிவாய்...
அறிவால்
நாளும்
தெளிவாய்.!!!.

**கவிஞர் பொன்.பனகல் பொன்னையா.**



## காதல் கண்கள் உறங்கிடுமோ!

அறுசீர் மண்டிலம்.


காதல் கண்கள் உறங்கிடுமோ
கருத்தாய்க் கனவு
கொண்டிடுமோ!
ஓதும் காதல் சிறப்பன்றோ
ஒண்மை வாய்ந்தே
கண்டிடுமோ!
மோத லில்லாக்காதல்தான்
மேன்மையாக விளங்கிடுமே!
ஏத மில்லாக்காதல்தான்
ஏற்ற மாகத்திகழ்ந்திடுமே!

தென்றல் உறங்கும்
போதுகூட திங்கள் உறங்கும்
போதுகூட மன்றம் விளங்கும்
காதல்தான் மாண்பா யுறங்க
மாட்டாதே! அன்பின்
மிகுதியாலேதான் ஆகும்
காதல் எல்லாமே!



பண்பாய்க்
காதல்
செய்திட்டால்
பாரில் உயர்ந்து
பேர்பெறலாம்!

**முனைவர் இராம. வேதநாயகம்**
திருவண்ணாமலை.



## அடிப்படை

குதூகலமும் மனநிறைவும்
தற்போதிருப்பவை கூடுதல்
என்றெண்ணுவோர் குறைவு

அத்தகையோர் இல்வாழ்வில்
வெற்றி பெறுவது திண்ணம்
எந்தச் சூழலையும்
சமாளிப்பர்

சவாலே சர்க்கரைப்பொங்கல்
இன்னலே இருட்டுக்கடை
அல்வா தோல்வியே உன்னத
படிப்பினை எனும் ரீதியில்
முன்னேறுவர்

**பி. பழனி,** சென்னை.

## என்றும் தமிழன்

" புலியின் வாலைப்
பிடிக்கும் வீரமும் தைரியமும்
தமிழனுக்கு உண்டு ..."

தாய்ப்பால் குடித்து
தமிழ்ப்பாலில் கலந்த உடல்
அஞ்சாது ஆடாது
அசையாது .... "

தாய் மண்ணிற்கு
உயிர் கொடுக்கும்
பரம்பரை தமிழினம் ..."

அறிவோ ஆக்கமோ
ஆன்மீகமோ தியாகமோ
விருந்தோம்பலோ
வித்தையோ வீரமோ..."

அறியாத தமிழன் யாரும்
இல்லை அன்பால் கட்டிப்
போட்டால் காலடியில்
தவமாய் கடப்போம் ..."

அடக்கி ஆண்டு ஆவணம்
கொண்டு அடிமைப்
படுத்தினால் புயலையும்
தாண்டி பூகம்பமாய்
வெடிப்போம் ...."

கண் பார்வைக்கும்
விரல் ஜாலத்திற்கும்
இதழ் விரிப்புக்கும்
கலைநயம் கண்ட
கலைஞன் தமிழன் ..."

விதியை மதியால்
வென்று சரித்திரம்



படைத்தவன்
தமிழன்
பார்வையில்
எளியவன்
போர் என்றால்
வலியவன்
தமிழன் ...."

**ஆர். சீதாராமன்,** சீர்காழி


## உண்மை

தோல்விதான் முயற்சிக்கு
உந்துதலைத் தருகிறது

வறுமைதான் வளர்ச்சிக்கு
வழி வகுக்கிறது

மாற்றத்தை நம்பினால்தான்
ஏற்றம்பெற முடியும் .

**நாகை ஆசைத்தம்பி**
கோவை



நீ ஆணா?
பெண்ணா தெரியாது .
கருப்பா?சிவப்பா தெரியாது...
உன் முகம் காண
முப்பொழுதும் உன்
நினைவுகள் நீ வரும்
முன்னே எத்தனை,எத்தனை
கோடி கனவுகள்
என்னை உன்னில் காண
நினைத்தேனடா .. நீ வர
போகும் நாட்களுக்கு முன்பே
உனக்கு வேண்டியவற்றை
என் பழைய பெட்டியில்
புதியதாய் புதைத்து
வைத்தேனடா ... வாழ்க்கை
ஆறில் தொடங்கி அறுபதில்
முடியும் என்றேனா
முட்டாள் முன்னோர்கள் ...
விதிவிலக்காய் நீயோ
ஆறே மாதத்தில்
என் கண் காணாமல்
சிதைந்து போனாயடா .....
உன்னை சுமந்த வயிற்றின்
வலி சில மாதத்தில்
ஆறிவிடும் ... என் மன வலி
எப்போது மாறுமோ ??
என் வாழ்வின்
அடையாளமாய் நீ இருப்பாய்
எண்ணிருந்தேன்....
மிஞ்சி இருப்பது நான்
எழுதிய வெற்று காகிதங்கள்
வெறுமையாய் சிரித்தன
என்னை போலவே !!!!!



கொஞ்சம் கண்
பாரடி
இமைக்கும்
நொடிகளில்
எல்லாம் காதல்
செய்கிறேன்!

**நௌஷாத் கான்.லி**



## காதலர் தினம்

அந்தக் கால குறிக்கோளாய்
கண்ணகி சாவித்திரி மாதிரி
வாழ பெண்கள் விரும்பினர்

பாழாய்ப்போன காதலர்
தினம் முட்டுக் கட்டையாக
திகழ்ந்தது புதுப் பாணியாய்
உருவெடுத்தது

காதலிப்பது அதி நூதனமான
நேரம் கடத்தும் சூட்சுமமாம்

மனதில் சலனம் ஏற்பட்டால்
கற்பில் களங்கம் உண்டாகும்
முக்காலும் மூன்று முடிச்சில்
முடியாத இணைப்பு
தேவையா?

தழுவி முத்தமிட்டுக்
குதூகலிக்க பரிசைப்



பரிமாறிட
இத்தகைய
போக்கு
இந்தியாவில்
அவசியமா?

**பி. பழனி,**
சென்னை.

## சூரிய புத்திரன் தன்வீர்

நிராகரிப்பால் நிறைந்து
இருந்த நதியில்
சூத்திரதாரியின் சொல்லில்
வந்து விழுந்தது
அன்பின் கல்!

கவசம் தரித்த கொடையாளன்
பொருள் அல்லாமல்
வாக்காய் கொடுத்தான்
அறுவர் அல்லாமல் ஐவர்
நிச்சயம் உண்டு என!

தாயின் மடியை பார்க்காதவன்
தந்தையின் வெப்பத்தை
கிரகிக்காதவன் கொடுத்தே
சிவந்த கைகளுக்கு
சொந்தக்காரன்
அங்க தேசத்தின் அரசன்!

அன்பை மதிப்பை பெற
ஏங்கியவன் பார்வைக்கு
கிட்டியது நிராகரிப்பு
நிராகரிப்பால் நிறைந்த
அவன் வாழ்க்கை
நிராகரிப்பால் நின்றது!

கர்ணன் சக்கரம் மீட்டும்
வேளையில் பொறு என!
சூத்திரதாரியின்
சொல் கேட்டு பார்த்தன்
பதித்தான் கணைகள்!

கவசம் இல்லா அவன்
மார்பையும் துளைக்காமல்
தோல்வியுற்றது கணைகள்!

தன்னை
வந்தடைந்தவர்களுக்கு
கொடுத்தே வாழ்ந்த கரங்கள்
கணைகளுக்கு தன்
உயிரையும் தானம்கொடுக்க!



சுதபுத்திரன் சூரிய
புத்திரன் தந்தையின்
ஒளியில் கலந்து
காலத்தோடு
இணைத்து
புகழ் ஆனான்!

**நா. சதீஸ்குமார்**
தேவகோட்டை



பள்ளிக்கூடம்
செல்லாமலே
பார்வைகளினாலே
வில் போன்ற
புருவத்தில்
அம்பின்
ஏவுகணைகளாக
மொழிகளை
வீசினாலும்
உன்
கருவிழிகளில்
காணும் என்னை
இமைகள்
படபடக்க
சாமரம் வீசி
கொணடு தான்
இருக்கிறது.

**ஜயந்தி சிவக்குமார்,**
திருச்சி.



## பெண்ணிலா ஐஸ்கிரீம்

என் மனதில் அன்பு விட்ட
நிலா நீ! ஒவ்வொரு முறையும்
உன் புன்னகைகளை எடுத்து
தான் கவிதைகள் செய்கிறேன்
நான்!
நீ சொல்வதெற்கெல்லாம்
என்னைத்தலையாட்ட
வைக்கும் நீ
என்ன தஞ்சாவூரில் பிறந்த
தேவதையா? இந்தப்
புவனத்தில் நான்
பிறந்ததன் பலனாக
எனக்குக்கிடைத்த
பெண்ணிலா ஐஸ்க்ரீம் நீ!
வாட்ஸ்ஆப்பில் அன்பை
ஆரம்பித்தாலும் என்
வாசல் தாண்டி வந்து எனக்கு
மாலையிட்ட மங்கை நீ!
என் வாழ்க்கையில் நீ
பூசிய வசந்த வண்ணம்
என்றுமே வெளுக்கா(து)து!

## மாது கவ்வும்

உன் வேட்டையிலிருந்து தப்ப
முயன்று தோற்ற பின் தான்
எனக்கும் தெரிந்தது!
சூது மட்டுமல்ல *மாது(ம்)
கூடக் கவ்வும் என்று!
உன்னைப் போல்
ஒரு காபூல் திராட்சை
பன்னீர் திராட்சை
கொண்டு வந்தால் படிக்கத்
தெரியாதவன் கூடக்கவிதை
எழுதுவான்! நானோ
நடிக்கத் தெரியாதவன்
என்னால் அமைதியிடம்
அடைக்கலம் புக இயலுமா
என்ன?! உனக்கெனவே
பிறவியெடுத்திருக்கிறேன்
நான் இல்லையெனில்
உன்னைப்போலொரு
கா த ல் த ரு என்
இ த ய த் தி ல்
வளர்ந்திருக்குமா என்ன?!
இடி மின்னல் இல்லாத
ஓர் அன்பு மழை
நம் இருவருக்குள்
எப்பொழுதும்!

## ஃபில்டர் காதல்

முந்திரி கேக்கால்
செய்ததைப் போல் ஓர்
அழகுப் பெண்ணரசி நீ!
உன் வனப்பான
ஆட்டத்தை ரசித்தால் மயிலும்
மானும் கூட
உன் இல்லத்திற்கு அடிக்கடி
வருகை தரும்!
பால்கனியில் நீ அமர்ந்து
மிடறு மிடறாய் ருசிக்கையில்
அந்தக் காஃபியும் கூட
எனக்குள் *ஃபில்டர் காதலாய்
இறங்குகிறது!
உன் முகத்தில் எப்பொழுதும்
ஒரு தீபச்சுடர் போல்
அற்புதமான பிரகாசம்!
வில் புருவ வேல் விழியாளான
உன் பார்வையிலிருந்து தான்
தினமும் கற்பனை செய்து
கொள்கிறேன் எனக்கான
கா த ல் ஒத்திகைகளை!

## மௌன தாகம்

என் மௌன
தாகத்திற்கும்கூட
மிகத் துல்லியமாகக்கா த ல்
நீர் ஊற்றுபவள் நீ!
புரிதலில் எப்பொழுதும்
அழகான எனக்குப்
பிடித்த தினத்தந்தியின்
குடும்ப மலர்க் கவிதை நீ!
நம் அதரங்களின் கொடுப்பல்
வாங்கல்களை ரசிக்க
என்னமாய் நழுவி நழுவிப்
பார்வையைப் போடுகிறது
உன் கா த ல் வண்ணச்
சுடிதாரின் துப்பட்டா!
புலன வழியாக நீ
அனுப்பும் குறும்புகளைச்
சுட்டாலே போதும்!
நான் ஒரு குட்டிக் கவிஞனாகி
விடுவேன்!
என் தேவைகளைப் பூர்த்தி
செய்யும் தேவதை நீ போதும்!
நம் கா த லி ன்
பிரம்மாண்ட வளர்ச்சிக்கு!

## தேன் ராணி

அமைதியான பெண்கள்
ஆயிரம் பேரிருக்க நீயோ
அடங்காப் பிடாரி!
நீ ராங்கு சுந்தரி
ராக்கிங் தேவி என்றாலும்கூட
நம் கா த ல் நேரங்களில்
அகங்காரத்தை அடித்துத்
துரத்தும் தேன் ராணி நீ!
என் விக்கலைக்கூட
நக்கலடிக்கும் நீ என்
புறம் நெருங்குகையில்
ஓர் ஒப்பந்தம் தயாராகக்
காத்திருக்கிறது!
பேதை நீ ஏற்றிய போதையின்
சக்தி வாரக் கணக்கில்
என்னைக்குத்தகைக்கு
எடுத்து விடுகிறது!
உன் முதல் முத்தமே



ஓடு பாதையில் நகரும்
விமானத்தைப் போல்
வேகமெடுக்க–இதற்கு
மேல்நான்சொல்லவா
இயலும்!?

**முத்து ஆனந்த்**
வேலூர்


Happy Birthday
NIRMALA


Follow our WhatsApp Channel
Scan this QR code using the CAMERA to view or follow our Channel
PADMA DIGITAL BROADCAST
Tamilnadu Epaper
WhatsApp channel


இந்து சமய அறநிலையத்துறை
திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு வட்டம், முனுகப்பட்டு கிராமம்
அருள்மிகு பச்சையம்மன் உடனுறை மன்னார்சாமி திருக்கோயில்
ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன நவகுண்டயாகம்
மஹா கும்பாபிஷேக பெருவிழா
அழைப்பிதழ்
அன்புடையீர், வணக்கம் !
நிகழும் சுபஸ்ரீ விசுவாவசு வருஷம் உத்தராயண புண்ணியகாலம் மாசி மாதம் 10-ஆம் நாள் (22-02-2026) ஞாயிற்றுக்கிழமை பஞ்சமி திதி, அஸ்வினி நட்சத்திரம் சித்தயோகம் கூடிய சுபயோக சுபதினத்தில் காலை 10.30 மணிக்குமேல் 11.30 மணிக்குள்ளாக ரிஷப லக்னத்தில் அருள்மிகு பச்சையம்மன் உடனுறை மன்னார்சாமி திருக்கோயில் மஹா கும்பாபிஷேகம் நடைபெற இருப்பதால் அனைத்து பக்தகோடிகளும், ஆன்றோர்களும், சான்றோர்களும் கலந்துகொண்டு எல்லாம் வல்ல அகிலாண்டகோடி பிரம்மாண்ட நாயகி அருள்மிகு பச்சையம்மன் மன்னார்சாமி அருளை பெற அன்புடன் வேண்டிக்கொள்கிறோம்.
நிகழ்ச்சி நிரல்
தமிழ் தேதி | ஆங்கில தேதி | நேரம் | நிகழ்ச்சி
19-02-2026 வியாழக்கிழமை
காலை 8.00 மணிக்கு மங்கள இசை அனுக்ஞை விக்னேஸ்வர பூஜை, கோபூஜை, மஹா கணபதி ஹோமம், நவக்கிரக ஹோமம், மகாலஷ்மி ஹோமம், நட்சத்திர ஹோமம், பூர்ணாஹுதி உபசாரம், தீபாராதனை, பிரசாதம் வழங்குதல்.
மாலை 5.00 மணிக்கு வாஸ்து சாந்தி, ரக்ஷோக்ன ஹோமம், பிரவேசபலி பூஜைகள்
மாசி மாதம் 8-ஆம் நாள் 20-02-2026 வெள்ளிக்கிழமை
காலை 8.00 மணிக்கு தீர்த்த சங்கிரணம், அக்னி சங்கிரணம், திசா ஹோமம், மூர்த்தி ஹோமம், அஸ்திர ஹோமம், மந்திர ஜபம், சம்கிதா ஹோமம், யாகசாலை அலங்காரம்
மாலை 5.00 மணிக்கு மங்கள இசை, கணபதி பிரார்த்தனை, மிருத்சங்கிரணம், அங்குரார்பணம், பிரதான ஆச்சார்யர் ரக்ஷாபந்தனம், எஜமானர்கள் காப்பு கட்டுதல், விஷேசசந்தி, கும்பலங்காரம், கலாகர்ஷணம், முதல்கால யாகபூஜைகள் ஆரம்பம், நவகுண்ட பூஜைகள், சௌபாக்கிய திரவியங்கள் ஹோமங்கள் உபசாரம், தீபாராதனை, பிரசாதம் வழங்குதல்.
மாசி மாதம் 9-ஆம் நாள் 21-02-2026 சனிக்கிழமை
காலை 8.30 மணிக்கு மங்கள இசை, விஷேசசந்தி, கணபதி பிரார்த்தனை அங்குரபூஜை, இரண்டாம் கால யாகபூஜைகள் ஆரம்பம், மண்டப அர்ச்சனை வேதிகா உபசாரங்கள், அஷ்டபந்தனம் சாத்துதல், தீபாராதனை, பிரசாதம் வழங்குதல்.
மாலை 5.30 மணிக்கு மங்கள இசை, விஷேசசந்தி, மூன்றாம் கால யாகபூஜைகள் ஆரம்பம், மண்டப அர்ச்சனை, வேதிகா அர்ச்சனை, நவகுண்ட யாகபூஜைகள், நாடிசந்தானம், தத்துவார்ச்சனை, ஸ்பர்சாஹுதி சௌபாக்கிய திரவியங்கள், ஹோமம் சோடச உபசாரங்கள், தீபாராதனை, பிரசாதம் வழங்குதல்.
மாசி மாதம் 10-ஆம் நாள் 22-02-2026 ஞாயிற்றுக்கிழமை
காலை 7.30 மணிக்கு மங்கள இசை, விஷேசசந்தி, கணபதி பிரார்த்தனை அங்குரபூஜை, நான்காம் கால யாகபூஜைகள் ஆரம்பம். அவப்ரிதயாகம், நவகுண்ட யாக பூஜைகள், மஹா பூர்ணாஹுதி, யாத்ராதன சங்கல்பம், மஹா தீபாராதனை.
காலை 10.30 மணிக்கு கலசங்கள் புறப்பாடு
காலை 11.00 மணிக்கு ராஜகோபுரம் மற்றும் அனைத்து விமானம் கும்பாபிஷேகம்
காலை 11.15 மணிக்கு மூலவர் அருள்மிகு பச்சையம்மன் மன்னார்சாமி கும்பாபிஷேகம்
காலை 11.30 மணிக்கு மஹா அபிஷேகம், அலங்காரம்
பகல் 12.00 மணிக்கு சிறப்பு அன்னதானம்
மாலை 6.00 மணிக்கு சுவாமி அம்பாள் திருக்கல்யாணம்
இரவு 8.00 மணிக்கு சுவாமி அம்பாள் திருவீதிஉலா நடைபெறும்
இரவு 10.00 மணிக்கு நாடகம் நடைபெறும்
இங்ஙனம்
திருக்கோயில் நிர்வாகம், திருப்பணி விழா குழுவினர்கள், திருக்கோயில் பணியாளர்கள், மற்றும் ஊர்பொதுமக்கள், முனுகப்பட்டு
ஸ்ரீ சௌந்தர் பிரஸ், வேலூர்-4. செல் : 9894584829


Vilambaram
WE HELP YOU TO BOOST YOUR BUSINESS
VISIT:VILAMBARAM.COM CONTACT: 8122798599


WANTED
Job 1-SALES ENGINEER
Required Experience:
05-07 years in selling Acrylic Laminates (Decorative for Interiors) in Tamil Nadu
Job 1-SALES ENGINEER
Required Experience:
05-07 years in selling Metal Roofing for PEB Building in Tamil Nadu
ALP AEROFLEX INDIA PVT. LTD.
Contact details for Tamilnadu Location
Cell: 9884083322
Email: hari@alpoverseas.com


Just499
TOURS & TRAVELS WEBSITE
We Provide Complete Tours & Travels Website Solution
ONLY Rs. 499
Website: just499.com
WhatsApp: 7789951009
Phone: 7789951009
Email: orderjust499@gmail.com


Wanted
REPORTERS
சட்டமன்ற தொகுதி வாரியாக
நிருபர்கள் தேவை
PRESS
பேப்பர்பாய்
8122664699


தனியார் வாகன உதிரிபாகங்கள் உற்பத்தி செய்யும் நிறுவனத்தில் பணிபுரிய ஆட்கள் தேவை.
Quality Line Inspector
Fresher/Exp Male Only
Qualification - ITI/Diplomo/B.E
Final Quality Inspector
Fresher / Exp - Male/Female
Qualification: 10th/ 12th/ ITI
VMC Machine operator
Fresher/ EXP Male only
Qualif: 10th/12th/ITI/Diploma
Mr Prakesh : 8939 940 090
Mr.Neelavanan : 9884 001 253
SALARY BASED ON EXPERIENCE


TAMIL TELECALLER JOB FOR
WORK FROM HOME
ALL OVER TAMILNADU
APPLY NOW
7789951009
PRINT MEDIA, DIGITAL MEDIA SOCIAL MEDIA
DAILY & MONTHLY SALARY
SALARY STARING FROM
Rs. 10000/- onwards
Whatsapp: 7789951009


UNIVERSAL ENGINEERS CHENNAI PVT LTD
உடனடி வேலை வாய்ப்பு திங்கள் முதல் வெள்ளி வரை காலை 10.00 மணிமுதல் மாலை 3.00 மணிவரை நேரில் வரவும்
அலுமினிய வெல்டர் - 5 நபர்கள்
டிக் (TIG) வெல்டர் - 5 நபர்கள்
ஹெல்பர்கள் - 25 நபர்கள்
பெண்டிங் மிஷின் ஆப்பரேட்டர்
Press Brake,Laser ஆப்பரேட்டர்
Turret ஆப்பரேட்டர்
5 - 6 வருடம் அனுபவம் உள்ளவர்கள் தேவை.
No. 72, North Phase, Ambattur Industrial Estate,Chennai - 600098
hr.executive@universalengineers.in
Ph: 8925928971


அருள்மிகு ஸ்ரீ மாலையம்மன் சமேத அருள்மிகு சுப்பிரமணியர் துணை
அருள்மிகு திருச்செந்தூர் முருகர் துணை
ஸ்ரீ ஹரி ஜோதிட மையம்
ஜாதகம், திருமணப் பொருத்தம், ஜாமக்கோள், ஆரூடம் பார்க்கப்படும்.
தாம்பூல பிரசன்னம், சோழி பிரசன்னம், அஷ்ட மங்கல பிரசன்னம்
மேலும் திருமணம், புத்திர பாக்கியம், கல்வி, தொழில் ஆகியவற்றில் ஏற்பட்ட தடைகளுக்கு ஜோதிடரீதியான தீர்வு செய்யப்படும்.
ஜோதிட நிபுணர் இராஜபாளையம் இராமமூர்த்தி MA Astro
81899 08040 / 93425 03572
harisudhan1968@gmail.com


999 SITE
ARE YOU
LOOKING FOR JOB
JOB
Websites
CONTACT/WHATSAPP-7789951009


உலகளவில் தமிழர்கள் எதிர்பார்க்கும் ஒரே தரமான நம்பர் 1 இ பேப்பர்
தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com
உள்ளூர் செய்திகள் முதல் வெளிநாட்டு செய்திகள் வரை துல்லியமாக தரும் ஒரே நாளிதழ்
ஆனந்த பாஸ்கர்
www.anandabhaskar.com
தினம் தோறும் உள்ளூர், உலக செய்திகள் வரை தரும் தரமான நாளிதழ்
பேப்பர்பாய்
www.paperboy.biz


ADVERTISE WITH US
CONTACT US
9438610756


Call- 9438610756, 9337501889
News Portal Website Development
Only
Rs. 499/-
Just 499
www.just499.com


சம்பிரதாய தாம்பூல பாக்கு!
பூஜைக்கு உகந்த பாக்கு
AJANTHA
TRADITIONAL THAMBULA BETEL NUTS
அஜந்தா
பாக்கு
அனைவருக்கும்
தீபாவளி
நல்வாழ்த்துகள்!
அஜந்தா
பாக்குடன்
உங்கள்
தீபாவளியை
கொண்டாடுங்கள்!
RAVIKUMAR AND COMPANY


WE'RE
HIRING!
A Passionate
Content Creator
94386 10756


CREATE YOUR
PROFILE
WITH US
& SCALE YOUR CAREER
SEND YOUR CV AT -
MKPLACEMENT@GMAIL.COM
FIND AMAZING JOB OPPORTUNITIES WITH US!!


6380139263
9952007563
9940010279
GERMANSILVER.RR
RATNARAJSILVER.COM
RAJ&RAJ
GERMANSILVER /
POOJA ITEMS RETURNGIFTS/
WEDDING GIFTS /HOME NEEDS



S.R
Call Drivers
Travels
24 Hours
Man Power & All Vehicle Available
Prop. S.SRIRAM
Contact: 95513 81576 / 86086 22056
True Work is Our Capital
No.89/49,E.H.Road,Cornation Nagar,K.Pet,Ch-21.


ஸ்ரீ கிருஷ்ணர்
உபாசகர் பரிகார புகழ்
ஆன்மீக செம்மல் த.பிரகாஷ்
CONTACT US
9597887308, 6380453463
EXPERT IN VEDIC ASTROLOGY
PREDICTION & SOLUTIONS
MONEY
LOVE
HEALTH
FAMILY
BUSINESS
CAREER
MARRIAGE


ST COURIER
The People's Choice
ISO 9001:2008 Certifed
DOMESTRIC- INTERNATIONAL
Old No. 1/2, New No.3, Kesavan St.,
Tondiarpet, Chennai-600081.
Cell: 9176130601


Get Free Jobs Alert on Your
WhatsApp
Register Yourself on our
8122664699
WhatsApp Your Name, Age & Address
on Above Number
Josh Jobs Team Give u Daily Update of
Govt. as Well as Private Jobs


Euro Kids
Pre-School
Right Start, Flying Start!
Tondiarpet
9940661625
Introducing
HEUREKA
based on Harvard's Project Zero
Admissions Open
for AY 25-26
EuroTots | PlayGroup | Nursery | EuroJunior | EuroSenior
23+ Years of Experience
TUV Nord Safety Certified
1,600+ Pre-schools
No. 19/20, Kummalamman Koil Street, Tondiarpet, Chennai - 600 081


FINDING THE PERFECT HOUSE YOU CAN CALL HOME
PREMA ENTERPRISES
DO YOU WANT TO
BUY
OR
SELL
PROPERTY OR LAND?
+91 9884417843


ARG CONSTRUCTIONS
ARG
We Build Your
DREAM
HOME
Recently We Have Completed
Over 50+ Big Projects
SERVICES WE OFFER
Residential Construction
Commercial Construction
Customer Satisfaction
Contact Us
9710348377


Just 499
Visite Our Website
JUST499.COM
All type Of your
Website/App need
at one place
Small Business website
E - commerce Website
Corporate Website
Enterprise website
Mobile App Development
contact us at
9337501889


just499®
MLM SOFTWARE
All Types of MLM Software Solutions Available
Binary
Unilevel
Matrix
Board
Generation
ROI / Investment
ONLY
Rs. 499
Website:
just499.com
Phone/WhatsApp:
7789951009
Email:
orderjust499@gmail.com

















WE'RE HIRING
TELECALLERS
SALARY STARTING FROM
RS.20000/- ONWARDS
+91 7871617005
















WANTED
experienced candidates in
AUTO CAD
Chennai / Coimbatore
minimum 3 years experience
Cell: 9363084990





WANTED
MARKETING HEAD
REAL ESTATE
Fixed Salary Rs.25000/-
& Above + INCENTIVE
(Monthly up to - 1.5 Lakhs)
Age: 25 to 40 Experienced Only
Office @ Anna Nagar
9790021367

WANTED
COLLECTION EXECUTIVES
TELECALLERS
FOR MNC BANK.
Sal.23,000/-
161, Bells Road, Chennai - 05.
Ct.: 98410 38488 / 93848 17349

ஐஸ் கடை
வேலைக்கு ஆட்கள் தேவை (பெண்கள்)
10.00 - 7.00 மணி வரை
சௌகார்பேட்டை
9829571998

# பல்சுவை களஞ்சியம்



# மீம்ஸ்




## செல்(ல)ம்

குழந்தைகளுக்கு அதிகமாக செல்லம் கொடுப்பதும் தவறு. அவர்கள் கையில் அறியா வயதில் செல்லைக் (திறன் பேசி) கொடுப்பதும் தவறு.

நண்பகல் பணம் எடுப்பதற்காக என் வங்கிக்கு சென்ற போது கண்ட காட்சி தான் அது.

ஒரு சின்னப் பெண், அவள் அண்ணன் செல்லை தரவில்லை என ஓவெனக் கதற, அவள் அம்மா மற்றவருக்கு சத்தம் கேட்கக் கூடாதென வாயைப் பொத்தினார்.

சிறிது நேரம் கழித்து அந்தச் சிறுவன் செல்லை அவன் தங்கை கையில் கொடுத்ததும் அவள் அழுகை நின்றது.



தவறு பிள்ளைகள் மேல் இல்லை . பெற்றோரே பிள்ளைகளைத் தவிர்க்க வளரும் முன்னே செல்லைக் கொடுத்து கெடுத்து விடுகின்றனர்.

எழுத்தாளர் பட்டுக்கோட்டை பிரபாகர் சொன்னது போல பிள்ளைகளுக்கு செல்லம் கொடுத்தாலும் ஓர் அளவோடு இருக்க வேண்டும். பெற்றோரின் கஷ்ட நஷ்டம் அவர்களுக்கும் புரிய வேண்டும்.

அடம் பிடிக்கும் போதெல்லாம் கேட்பதை வாங்கிக் கொடுக்காமல் கடக்கவும் பழகுவோம்.



-ஸ்ரீகாந்த் திருச்சி

## தவறு காட்டிய வழி!!

யார் இந்தப் பலகையில் எழுதியது...!" புயலாய் கடைக்குள் நுழைந்தார் புலவர். அவர் தமிழ் ஆசிரியர். கல்லாவில் இருந்த முதலாளி கலங்கிய ப்போய் புதிதாக வந்வனை காட்டினார்.!! "ஏன் இப்படி தமிழைக் கொலை செய்திருக்கிறாய் படிக்காத மக்கா நீ!"




புலவர் பொரிந்தார்.சத்தம் கேட்டு வேடிக்கைத் தலைகள் நான்கு உள்ளே வந்தன.

"சார் டீ சாப்பிடுங்க. சுத்தமான பசும் பால் சார்."என்று அவர்களை அமரச் செய்து டீ போட்டான்.

புலவர் உள்ளம் கொதித்தது --பாய்லர் பாலைப் போல ! "பாசும்பாள்" னு எழுதி இருக்கிற... நீ போடுற டீ யும் அப்படித் தான்இருக்கும் பாழாய்!!"

"சார் நீங்க பேசுறதை எல்லாம் பேசாம கேட்டுக் கொண்டிருக்க இது ஒன்னும் வகுப்பறை இல்லை. டீ கடை!! நேற்றெல்லாம் சரியாத் தானே எழுதி இருந்தாங்க!உள்ளே வந்து பாராட்டினீங்களா. ஏன் வரல... இப்ப உங்களை வர வச்சிட்டேன் பாத்தீங்களா. குற்றத்தைக் கூர்ந்து பார்ப்பது தான் சார் மனிதனி குணம். பள்ளிப் படிப்பு மட்டும் வாழ்க்கைக்கு உதாவது.சின்ன சின்ன தப்புகளும் உதவும். உங்களோடு நாலுபேரையும் உள்ளே வரவ ச்சிட்டேன்...! நாளைக்கும் வாங்க.முது கலை பட்டத்திற்கான எனது ஆய்வு நூலைத் தருகிறேன் வாசிங்க."என்றான். புலவர் வாயடைத்து நின்றார்.



-குடந்தை பரிபூரணன்

## சம்மணம் என்றால் என்னவென்று தெரியுமா?

சங்கடங்களை போக்க சம்மணமிடுங்கள்....

நாம் பொதுவாக எப்பொழுதும் காலை தொங்கவைத்து அதிகமாக அமர்ந்திருக்கிறோம்... இரண்டு சக்கர வாகனத்தில் பயணிக்கும் பொழுது, பேருந்தில், இரயில் வண்டிகளில், சினிமா தியேட்டரில், பள்ளிகளில், அலுவலகங்களில், வீடுகளில், சோபாக்களில், கட்டில், நாற்காலி இப்படி நன்றாக யோசித்துப் பார்த்தால் நாம் அதிகநேரமாக காலைத் தொங்க வைத்துக்கொண்டே இருக்கிறோம். இப்படிக் காலைத் தொங்கவைத்து அமர்வதால் நமக்குப் பல உடல் உபாதைகள் உருவாகிறது..... இதற்குக் காரணம் என்னவென்றால் காலைத் தொங்கவைத்து அமரும்பொழுது, நமது உடலில் இரத்த ஓட்டம் இடுப்பிற்குக் கீழ்ப்பகுதியில் மட்டுமே அதிகமாக செல்கிறது... நாம் காலை மடக்கி சம்மணம் போட்டு அமரும்பொழுது இடுப்புக்கு மேலே இரத்த ஓட்டம் அதிகமாகவும் வருவதற்கு வாய்ப்பு உள்ளது. நமது உடலில் இடுப்புக்கு கீழே உள்ள கால்களுக்கு நடக்கும்பொழுது மட்டும் இரத்த ஓட்டம் சென்றால் போதும். மிக முக்கியமான உறுப்புகளாகிய சிறுநீரகம், கணையம், நுரையீரல், மூளை, கண், காது ஆகியவை இடுப்புக்கு மேல்ப்பகுதியில்தான் இருக்கிறது. எனவே ஒருவர் காலை தொங்கப்போடாமல் சம்மணங்கால் போட்டு அமர்ந்திருந்தால் அவருக்கு சக்தியும், ஆரோக்கியமும் அதிகமாக கிடைக்கிறது.

எனவே, சாப்பிடும் பொழுதாவது கீழே உட்கார்ந்து காலை மடக்கி அமர்ந்துதான் சாப்பிட வேண்டும். ஏனென்றால், இடுப்புக்கு கீழே இரத்த ஓட்டம் செல்லாமல் முழு சக்தியும் வயிற்றுப் பகுதிக்குச் செல்லும்பொழுது நமக்கு ஜீரணம் நன்றாக நடைபெறுகிறது. சாப்பிடும்பொழுது காலைத் தொங்க வைத்து நாற்காலியில் அமர்வதனால் இரத்த ஓட்டம் வயிற்றுப் பகுதிக்குச் செல்லாமல் காலுக்கே அதிகமாக செல்கிறது.



இந்திய வகை கழிவறை செல்லும்போது மட்டும்தான் காலை மடக்கி அமர்கிறோம் யுரோப்பியன் கழிவறையில் அமரும் பொழுது குடலுக்கு அதிக அளவு அழுத்தம் கொடுத்தால் மட்டுமே கழிவு வெளியேறும்,

அதனால் தான் இப்பொழுது சிறுகுழந்தைகள் கூட யுரோப்பியன் வகையினை பயன்படுத்துவதால் அவர்களால் தரையில் சுக ஆசனத்தில் அமர்வதற்கு முடியாமல் தவிக்கிறார்கள். ஒரு விஷயத்தைப் புரிந்து கொள்ளுங்கள். உங்களால் சம்மணங்கால் போட்டுக்கூட தரையில் உட்கார முடியவில்லை என்றால் இந்த உடம்பை எந்த அளவிற்கு கெடுத்து வைத்திருக்கிறீர்கள் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.... எனவே முடிந்த வரை காலை தொங்கவைத்து அமர்வதை தவிருங்கள்... எனவே யுரோப்பியன் வகை கழிவறைகளை தவிருங்கள்... கட்டிலிலோ, ஷோபாவிலோ அமரும்பொழுது சம்மணம் இட்டே அமருங்கள்...

சாப்பிடும் பொழுது தரையில் ஏதாவது ஒரு விரிப்பை விரித்து அதன்மேல் சம்மணங்கால் போட்டு அமர்ந்து சாப்பிட்டால் சாப்பாடு நன்றாக ஜீரணிக்கும்... சில வீடுகளில் அதற்கு வாய்ப்பில்லை என்று இருந்தால் டைனிங் டேபிளில் அமர்ந்து காலை மடக்கி வைத்து அமர்ந்து சாப்பிட்டுக் கொள்ளுங்கள்...

சாப்பிடும் முறை...!

----------------------------

(1) நின்று கொண்டு சாப்பிடும் பழக்கத்தை மாற்றி. குடும்பத்துடன் அமர்ந்து ஒன்றாய் சாப்பிடுங்க...
(2) எந்த வகை சாப்பாடாக இருந்தாலும் நன்றாக மென்று, கூழாக்கி சாப்பிடுங்கள்...
(3) பேசிக் கொண்டு, தொலைக்காட்சி, புத்தகம் பார்த்து கொண்டே சாப்பிட கூடாது...
(4) சாப்பிடும் பொழுது இடையில் தேவையில்லாமல் தண்ணீர் குடிக்காதிங்க. கடைசியில் தண்ணீர் குடிக்க மறக்காதீங்க. போதிய அளவில் தண்ணீர் பருகுங்கள்...
(5) அவசர அவசரமாக சாப்பிட வேண்டாம்...
(6) பிடிக்காத உணவுகளை கஷ்டபட்டு சாப்பிட வேண்டாம்...
(7) பிடித்த உணவுகளை அளவுக்கு அதிகமாகவும் சாப்பிட வேண்டாம்...
(8) ஆரோக்கிய உணவுகளை அதிகம் சாப்பிட பழகவும்...
(9) இரவு உணவில், முள்ளங்கி மற்றும் கீரை உணவுகளை சேர்க்க வேண்டாம்...
(10) சாப்பாட்டுக்கு அரை மணிநேரம் முன்பு பழங்கள் சாப்பிடுங்கள்... பின்பு பழங்கள் சாப்பிட வேண்டாம்...
(11) சாப்பிடும் முன்பு சிறிது நடந்துவிட்டு பின்பு சாப்பிடவும். இரவு சாப்பிட்ட பின், நடப்பது நலம்...
(12) சாப்பிட வேண்டிய நேரம்...
காலை - 7 to 9 மணிக்குள்
மதியம் - 1 to 3 மணிக்குள்
இரவு - 7 to 9 மணிக்குள்
(13) சாப்பிட்டு 2 மணி நேரம் கழித்து தான் தூங்க வேண்டும்...
(14) சாப்பிடும் முன்பும் பின்பும் கடவுளுக்கு நன்றி சொல்ல மறக்காதீர்கள்...

அமருங்கள் சம்மணமிட்டு



-நடேஷ் கன்னா
கல்லிடைக்குறிச்சி

கல்யாணம் பண்ணிக்கிட்டா நாத்தனார் சண்டைதான் வருது...



எவனுக்காவது மச்சினிச்சிக்கிட்ட சண்டை வருதா...

யோசிக்கனும் மக்களே...





## விடுகதை



| | |
|---|---|
| பொட்டுப்போல் இலை இருக்கும், பொரிபோல் பூப் பூக்கும், தின்னக்காய் காய்க்கும், தின்னாப் பழம் பழுக்கும் அது என்ன? | முருங்கைமரம் |
| என்னைப் பார்க்க முடியும், ஆனால் எனக்கு எடை கிடையாது. என்னை ஒரு பாத்திரத்தில் போட்டால் அதன் அளவை குறைத்திடுவேன். நான் யார்? | துவாரம் |
| தொட்டு விட்டால் மூடிக் கொள்ளும் பச்சை மாளிகை ஜன்னல்கள் அது என்ன? | தொட்டா சுருங்கிச் செடி |
| அந்திவரும் நேரம், அவளும் வரும் நேரும் அது என்ன? | நிலா |
| பூமியிலே பிறக்கும், புகையாய்ப் போகும். அது என்ன? | பெட்ரோல் |

## ஜோக்ஸ்



"ஒன்னுமே தெரியாத ஸ்டுடண்ட் (students ) கிட்ட கொஸ்டின் பேப்பர் (questions papers ) கொடுக்குறாங்க..."

"எல்லாம் தெரிஞ்ச வாத்தியார் கிட்ட ஆன்சர் பேப்பர்(answer papers ) கொடுக்குறாங்க..."

"என்ன கொடும சார் இது?...."

===========================================


"உங்க வீட்ல சிரிப்பு சத்தமாயிருக்கே, ஏன்?"

"எங்க வீட்டு டிவி ரிப்பேர், அதுதான்!"

===========================================

"அந்தக் கட்சிக் கூட்டத்தில எல்லோரும் சேர்ந்து அழறாங்களே , ஏன்?"

"அங்கே 'துயர் மட்டக் குழு கூட்டம்' நடக்குதாம்"



=========================================

"இன்னைக்கு நான் ஆபீஸ்ல பட்டினி கிடந்து வேலை செஞ்சேன்"

"அவ்வளவு பிசி ஒர்க்கா?"

"இல்ல; சாப்பாட்டு நேரத்தில என்னை யாரும் எழுப்பிவிடலை"

===========================================

"தொழில் படுத்திடுச்சின்னீங்களே , என்ன தொழில்?"

"பாய் வியாபாரம்!"

===========================================

டாக்டர்: "நீங்க உடம்பைக் குறைக்கணும்; இனிப்பைக் குறைக்கணும்; காரத்தைக் குறைக்கணும்"

நோயாளி: "டாக்டர், நீங்க ஃபீசை குறைக்கணும்"

=========================================

ஒருவர்: "தாமஸ் ஆல்வா எடிசன் பல புதிய கண்டுபிடிப்புக்களைக் கண்டுபிடிக்காமலிருந்தால் என்னவாயிருக்கும்?"

மற்றவர்: "வேற ஒருத்தர் கண்டுபிடிச்சிருப்பார்"

# தெய்வீக அருள் தரும் ஆன்மிகம்

## திருநள்ளாறு கோவிலில் சனிப்பெயர்ச்சி விழா மார்ச் 6-ந் தேதி நடக்கிறது!

திருநள்ளாறு கோவிலில் மார்ச் 6-ந்தேதி சனிப்பெயர்ச்சி விழா நடைபெறுகிறது.

புதுவை மாநிலம் காரைக்கால் திருநள்ளாறில் சனி பகவானுக்கு தனி சன்னதியுடன் கூடிய பிரணாம்பிகை சமேத தர்பாரண்யேஸ்வரர் கோவில் அமைந்துள்ளது.

இக்கோவில் சனிப் பெயர்ச்சி விழா மிக விமர்சையாக நடத்தப்படுவது வழக்கம். மார்ச் 6-ந் தேதி காலை 8.24 மணிக்கு கும்ப ராசியில் இருந்து மீன ராசிக்கு சனிபகவான் பிரவேசிக்கிறார்.

அதன்படி திருநள்ளாறு கோவிலில் வாக்கிய பஞ்சாங்கத்தின்படி மார்ச் 6-ந் தேதி சனிப்பெயர்ச்சி விழா நடக்கிறது. விழாவுக்கான பந்தக்கால் முகூர்த்தம்



நடைபெற்றது.

இதனையொட்டி தர்பாரண்யேஸ்வரர் கோவிலில் கொடி மரத்து விநாயகர் மற்றும் பந்தக்கால்களுக்கு சிறப்பு அபிஷேகம், பூஜைகள் நடத்தப்பட்டு மகா தீபாராதனை காண்பிக்கப்பட்டது.

பின்னர் மங்கலவாத்தியங்கள் முழங்க பந்தக்கால்கள் பிரகார உலாவாக கொண்டு வரப்பட்டு கோவில் உள் பிரகாரத்தில் பைரவர் சன்னதி மற்றும் ராஜ கோபுரம் அருகில் நடப்பட்டது.

இதில் தருமபுரம் ஆதீன கட்டளை விசாரணை ஸ்ரீமத் சட்டநாத தம்பிரான் சுவாமிகள், புதுச்சேரி நியமன எம்.எல்.ஏ. ராஜ சேகரன், கோவில் நிர்வாக அதிகாரி சுப்பிரமணியன் மற்றும் தர்பாரண்யேஸ்வரர் தேவஸ்தானத்துக்கு சொந்தமான 5 கிராமங்களை சேர்ந்த பொதுமக்கள், பக்தர்கள் கலந்து கொண்டனர்.

## மகா சிவராத்திரியையொட்டி 15-ந்தேதி பழனி முருகன் கோவிலில் சிறப்பு பூஜைகள்

மகா சிவராத்திரியையொட்டி இரவு முழுவதும் பக்தர்கள் விழித்திருந்து சாமி தரிசனம் செய்வது வழக்கம். அதன்படி இந்த ஆண்டுக்கான மகா சிவராத்திரி வருகிற 15-ந்தேதி வருகிறது. இதையொட்டி பழனி பகுதியில் உள்ள சிவன் கோவில்களில் சிறப்பு பூஜைகள் நடைபெற உள்ளது. இதில் பக்தர்கள் கலந்து கொண்டு இரவு முழுவதும் கண்விழித்து விடியவிடிய வழிபாடு நடத்துவார்கள். மேலும் மறுநாள் கோவில்களில் நடக்கும் சிறப்பு பூஜையிலும் பங்கேற்பார்கள்.



பழனி மலைக்கோவிலில் இரவு 8 மணிக்கு முதற்கால பூஜையும், 11 மணிக்கு 2-ம் கால பூஜையும் நடைபெறுகிறது. நள்ளிரவு 1 மணிக்கு 3-ம் கால பூஜையும், அதிகாலை 3 மணிக்கு 4-ம் கால பூஜையுடன் அர்த்தஜாம பூஜையும் நடைபெறுகிறது. வழக்கமாக ராக்கால பூஜைக்குப்பின் கோவில் நடை சாத்தப்படும். ஆனால் சிவராத்திரி இரவு முழுவதும் நடைதிறக்கப்பட்டு சிறப்பு பூஜைகள் நடத்தப்படும்.

இதேபோல் பெரியாவுடையார் கோவில், பெரியநாயகி அம்மன் கோவில், மாரியம்மன் கோவில், பட்டத்து விநாயகர் கோவில், திருஆவினன்குடி கோவில், வேளீஸ்வரர் கோவில், சன்னதி வீதி மீனாட்சியம்மன் கோவில் உள்ளிட்ட அனைத்து கோவில்களிலும் உள்ள சிவன் சன்னதிகளில் மகா சிவராத்திரியையொட்டி சிறப்பு பூஜைகள், வழிபாடுகள் நடைபெறுகின்றன.

## மாசி மாத பொது பலன்கள்



ஒவ்வொரு தமிழ் மாதத்திற்கும் ஒவ்வொரு விதமான சிறப்புகள் உண்டு. அந்த வகையில் மாசி மாதத்தில் சிவராத்திரியும் மாசி மகமும் சிறப்பித்து சொல்லக்கூடிய பண்டிகைகள் ஆகும்.

**மகா சிவராத்திரி**

மாசி 3 (15.2.2026) ஞாயிறு

ஒவ்வொரு திதிக்கும் சில குறிப்பிட்ட குறைபாடுகளை நீக்கும் சக்தி உண்டு. அந்த வகையில் அமாவாசை மற்றும் பௌர்ணமிக்கு முந்தைய நாள் வரக்கூடியது சதுர்த்தசி திதி. இதில் அமாவாசைக்கு முந்தைய நாள் வரக்கூடிய சதுர்த்தசி திதிக்கு பாவங்களையும் தோஷங்களையும் நீக்கும் வலிமை உண்டு. மனிதர்களின் கர்ம தோஷங்களை நீக்கும் மகா சிவராத்திரி சதுர்த்தசி திதியில் மட்டுமே சம்பவிக்கும்.

ஒரு ஜாதகத்தில் உள்ள கர்மபலன்களை உணர்த்தும் கிரகமான சனி பகவானுக்கு உதவியாக செயல்படுபவர்கள் ராகு/கேதுக்கள். சிவராத்திரி விரதம் இருந்து சிவ வழிபாடு செய்பவர்களுக்கு சனி, ராகு கேதுவால் ஏற்படும் பாதிப்புகள் அகலும்.மகா சிவராத்திரியன்று விரதம் இருப்பவர்களுக்கு நற்கதி கிடைப்பதுடன் சொர்க்கலோக பாக்கியமும் கிடைக்கும் என்பது நம்பிக்கை. வாழ்வில் செல்வம், வெற்றி ஆகியவற்றை பெற விரும்புவோர் அவசியம் சிவராத்திரி விரதம் இருக்க வேண்டும்.

**மாசி மகம்**

மாசி18(2.3.2026) திங்கள்

2.3.2026 அன்று காலை 8.16 முதல் 3.3.2026 அன்று காலை 8.07 வரை மகம் நட்சத்திரம் உள்ளது. இது பெண்களுக்கான விரத நாள் சூரியனின் அதிதேவதை பரமேஸ்வரன். சந்திரனின் அதிதேவதை பார்வதிதேவி.

ஆண் கிரக ராசியில் வரும் பெண் கிரகமான சந்திரன். பெண் கிரக ராசியில் வரும் ஆண் கிரகமான சூரியன்.இது தான் மாசி மக பவுர்ணமி நாளின் சிறப்பு அம்சம்.

எனவே இந்த நாட்களில் சிவனுக்குள் சக்தி ஐக்கியம், சக்திக்குள் சிவன் ஐக்கியம்.சிவ சக்தி ஐக்யஸ்வரூபத்தை வணங்க இருவரின் அருளும் ஒருங்கே கிடைக்கும்.இந்த நாளில் பார்வதி பரமேஸ்வரரை வழிபட திருமணத் தடை நீங்கும். பிரிந்த தம்பதிகள் மீண்டும் சேர்ந்து வாழ்வார்கள். தம்பதியின் ஒற்றுமை பெருகும். குடும்பத்தில் இன்பம் பெருகும்.

**மாசி மாத கிரக நிலவரம்**

(திருக்கணித பஞ்சாங்கப் படி ) சூரியன் 13.2.2026 அன்று அதிகாலை 4.09 க்கு கும்ப ராசிக்கு செல்கிறார்.

விசுவாவசு தமிழ் வருடத்தின் மாசி மாதம் பிறக்கிறது.

செவ்வாய் மாசி 11 ( 23.2.2026 ) திங்கட்கிழமை செவ்வாய் பகவான் கும்ப ராசிக்கு பெயர்ச்சி ஆகிறார்.

புதன் மாசி 14 ( 26.2.2026) வியாழக்கிழமை கும்ப ராசியில் வக்கிரம் அடைகிறார்.

சுக்ரன் மாசி 17 (2.3.2026) ஞாயிற்றுக் கிழமை மீன ராசியில் உச்சம் அடைகிறார்.

மிதுன ராசியில் சஞ்சரிக்கும் குரு பகவான் மாசி 26 (11.3.2026) செவ்வாய்க்கிழமை அன்று வக்ர நிவர்த்தி அடைகிறார்.

சனி பகவான் மீன ராசியில் சஞ்சரிக்கிறார்.

ராகு பகவான் கும்ப ராசியில் சஞ்சரிக்கிறார்.

கேது பகவான் சிம்ம ராசியில் சஞ்சரிக்கிறார்.

## மாசி மாத பூஜைக்காக சபரிமலை கோவில் திறப்பு

சபரிமலை ஐயப்பன் கோவில் மண்டல மற்றும் மகரவிளக்கு பூஜை காலங்கள் மட்டுமின்றி, மாதாந்திர பூஜைக்காக ஒவ்வொரு தமிழ் மாதத்திலும் 1-ந்தேதி முதல் 5-ந்தேதி வரை திறந்திருக்கும்.

அதன்படி மாசி மாத பூஜை நாளை (13-ந்தேதி) தொடங்கி வருகிற 17-ந்தேதி வரை நடக்கிறது. இதற்காக சபரிமலை ஐயப்பன் கோவில் நடை இன்று மாலை 5 மணிக்கு திறக்கப்படுகிறது. மேல்சாந்தி பிரசாத் நம்பூதிரி நடையை திறந்து தீபம் ஏற்றுகிறார்.

அதன் பிறகு பக்தர்கள் சாமி தரிசனத்துக்கு அனுமதிக்கப்படுவார்கள். இன்றைய தினம் எந்த பூஜைகளும் நடக்காது. இரவு 10 மணிக்கு அரிவராசனம் பாடப்பட்டு கோவில் நடை சாத்தப்படும். பின்பு நாளை அதிகாலை 5 மணிக்கு கோவில் நடை திறக்கப்படும்.



நிர்மால்ய தரிசனத்துக்கு பின் தந்திரி மகேஷ் மோகனரு, ஐயப்பன் சிலையில் அபிஷேகம் நடத்தி நெய் அபிஷேகத்தை தொடங்கி வைப்பார். அதைத்தொடர்ந்து கணபதி ஹோமம், உஷ பூஜை, களபாபிஷேகம், உச்ச பூஜை, மாலையில் தீபாராதனை, புஷ்பாபிஷேகம், அத்தாழ பூஜை நடைபெறும்.

மாதாந்திர பூஜை நடக்கக்கூடிய 5 நாட்களும் உதயாஸ்தமன பூஜையும், இரவு 7 மணிக்கு படி பூஜையும் நடைபெறும். நாளை முதல் வருகிற 17-ந்தேதி வரை நெய் அபிஷேகம் உள்ளிட்ட அனைத்து வழிபாடுகள் மற்றும் பூஜைகள் நடை பெறும்.

மாசி மாத பூஜையில் பக்தர்கள் சாமி தரிசனம் செய்ய ஆன்லைனில் முன்பதிவு செய்ய வேண்டும். அதற்கான முன்பதிவு கடந்த வாரம் தொடங்கியது. முன்பதிவு செய்த பக்தர்களே சன்னிதானத்திற்கு செல்ல அனுமதிக்கப்படுவார்கள்.

## வேடனின் பாவம் போக்கிய மகா சிவராத்திரி

முன்பொரு சமயம், வேடன் ஒருவன் காட்டில் வேட்டையாடி தன் குடும்பத்தைக் காப்பாற்றி வந்தான். ஒரு முறை காட்டில் வேட்டையாட சென்றபோது, வேடனுக்கு எதுவும் கிடைக்கவில்லை. எனவே விலங்குகளைத் தேடி நீண்ட தூரம் காட்டிற்குள் சென்றான். அவ்வேளையில் வேடனை தாக்க ஒரு புலி பாய்ந்து வந்தது. இதனால் பதறிப்போன வேடன், அருகில் இருந்த மரத்தின் மேல் ஏறி அமர்ந்தான். இரவு முழுவதும் புலி அந்த மரத்தை சுற்றி வந்தது. வேடன், எதுவும் சாப்பிடாமல் இரவு முழுவதும் அந்த மரத்தின் கிளைகளைப் பற்றியபடியே இருந்தான். மறுநாள் பொழுது விடிந்ததும் வேடன் வீடு திரும்பினான்.



பல ஆண்டுகள் வாழ்ந்த அந்த வேடன் வயது முதிர்ச்சியால் இறந்தான்.

அந்த வேடனின் ஆன்மா எமலோகம் சென்றது. பல மிருகங்களை வேட்டையாடிய வேடனின் பாவ கணக்கில் எதுவும் இல்லை என்று சித்திரகுப்தன் சொன்னது, எமதர்மனுக்கு அதிர்ச்சி அளித்தது.

வேடன் செய்த புண்ணியம் என்ன என்று பார்க்க, முன்பு புலிக்கு பயந்து வேடன் ஏறி அமர்ந்தது, வில்வமரம் ஆகும். அன்றைய தினம் மகா சிவராத்திரி. பயத்தில் கைகள் நடுங்க கிளைகளைப் பற்றி இருந்ததால், அந்த நடுக்கத்தில் வில்வ இலைகள் உதிர்ந்து கீழே விழுந்தன. வில்வ இலைகள் விழுந்த இடத்தில் ஒரு பழமையான சிவலிங்கம் மண்ணில் புதைந்திருந்தது.

மகா சிவராத்திரி அன்று சாப்பிடாமல், வில்வ இலைகளால் சிவலிங்கத்தை அர்ச்சனை செய்த புண்ணியம் வேடனுக்கு கிடைத்தது என்பதை எமதர்மனும், சித்திரகுப்தனும் அறிந்தனர்.

இந்த பகுதியில் உங்கள் படைப்புக்கள் வரவேற்கிறோம்
whatsapp No
8122664699

## வேததுர்க்கை அம்மன் ராகு கால பூஜை சிறப்பு வழிபாடு



**கடலூர், பிப்.13:** கடலூர் மாவட்டம் மேல் புவனகரி அருள்மிகு மீனாட்சி உடனுறை வேதபுரீஸ்வரர் திருக்கோயிலில் செவ்வாய்க் கிழமை ராகு கால பூஜையை முன்னிட்டு அருள்மிகு வேத துர்க்கை அம்மனுக்கு சிறப்பு அபிஷேகங்கள், எலுமிச்சம்பழம் மாலை களுடன், வண்ண மலர் மாலைகளால் அலங்காரத் துடன் வேத துர்க்கை அம்மன் அருள் பாலிக்கும் காட்சி.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## ஸ்ரீ ஆற்காட்டம்மன் சிறப்பு வழிபாடு



**விழுப்புரம்,பிப்.13:** விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி நல்ல தண்ணீர் குளம் அருகில் அமைந்திருக்கும் ஸ்ரீ ஆற்காட்டம்மன் ஆலயத்தில் இன்று தை மாத கடைசி நாளான குரு வாரமான நேற்று காசிலிங்கம் பூசாரி அவர்களால் சிறப்பு அபிஷேகங்கள் மூலவர்க்கும், உற்சவர்க்கும், அனைத்து தெய்வங்களுக்கும் வாசனை திரவியங்களால் அபிஷேகங்கள், வண்ணமலர் மாலைகளால் அலங்கரிக்கப்பட்டு, பிரசாதம், நெய்வேத்தியங்களுடன், பொங்கல் வைத்து மகா தீபாராதனையும் நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் ஸ்ரீ ஆற்காட்டம் மனை வேண்டி அருள் பெற்றனர் பிரசாதங்களும் வழங்கப்பட்டது. இன்று உபயதாரர் குமாரசாமி ரெட்டியார் அவர்கள் விக்கிரவாண்டி.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## நீலப்பட்டு அணிந்து பக்தர்களுக்கு காட்சி..!



**வந்தவாசி, பிப் 13:** திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி அடுத்த தென்னாங்கூர் ஸ்ரீபாண்டுரங்கன் ருக்மாயி திருக்கோயிலில் மூல மூர்த்திகள் நீலப் பட்டாடை அணிந்து நின்ற கோலத்தில் பக்தர்களுக்கு அருள் பாலித்தனர். இந்த வைபவத்தில் சுற்றியுள்ள பகுதிகளில் இருந்து ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர்.

**பா. சீனிவாசன் வந்தவாசி.**

## மெட்ரிக் பள்ளி விளையாட்டு விழா



நெல்லை மாவட்டம் வடக்கன்குளம் பாலகிருஷ்ணா மெட்ரிக் பள்ளி விளையாட்டு விழாவை ஜோதி ஏற்றி வள்ளியூர் டிஎஸ்பி வெங்கடேஷ் துவக்கி வைத்தார்.

## புறவழிச்சாலை அமைக்கும் பணி



திருப்பத்தூர் நகருக்கு புறவழிச்சாலை அமைக்கும் பணிக்கு அமைச்சர் எ.வ.வேலு, கலெக்டர் சிவசவுந்தரவல்லி அடிக்கல் நாட்டினர்.

## கர்ப்பிணிகளுக்கு சீர்வரிசை



கிருஷ்ணகிரியில் நடந்த சமுதாய வளைகாப்பு நிகழ்ச்சியில் கர்ப்பிணிகளுக்கு சீர்வரிசை பொருட் களை கலெக்டர் தினேஷ்குமார், மதியழகன் எம்எல்ஏ வழங்கினர்.

## சிஐடியூவினர் கைது



திருவொற்றியூர் விம்கோ ரயில் நிலையத்தில் நேற்று நடந்த மறியலில் சிஐடியூ மாநில பொதுச் செயலாளர் கண்ணன், ஜனநாயக மாதர் சங்கத்தின் மாநில செயலாளர் ராதிகா உள்ளிட்டோர் கைது செய்யப்பட்டனர்.

## மறியல்



ஒன்றிய அரசின் தொழிலாளர் விரோத கொள்கையைக் கண்டித்து சென்னை கிண்டி அஞ்சலகம் முன் சிஐடியு துணைத் தலைவர் சவுந்தரராசன் தலைமையில் நேற்று மறியல் நடந்தது.

## தமிழக வீரர்களுக்கு தலா ரூ.5 லட்சம் பரிசுத் தொகை



உலக கோப்பை வென்ற இந்திய அணியில் இடம்பெற்ற தமிழக வீரர்கள் அம்ப்ரிஷ், தீபேஷ் தேவேந்திரனுக்கு தமிழ்நாடு கிரிக்கெட் சங்கம் சார்பாக தலா ரூ.5 லட்சம்பரிசுத் தொகை வழங்கப்பட்டது.

## "செல்ஃப் மேட் மேன்" சிலை திறப்பு



கோவை நீதிமன்றம் அருகே "செல்ஃப் மேட் மேன்" சிலையை கலெக்டர் பவன்குமார் நேற்று திறந்து வைத்தார். இது - உறுதிப்பாடு, நேர்மை மற்றும் தனிப்பட்ட சாதனைக்கான குறியீடு ஆகும்.

## பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பாராட்டு சான்றிதழ்



தஞ்சையில் தமிழ்வளர்ச்சித்துறை சார்பில் நடந்த திருக்குறள் வார விழாவில்,பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு கலெக்டர் பிரியங்கா பங்கஜம் பாராட்டு சான்றிதழ் வழங்கினார்.

## அதிமுக 2026 தேர்தல் வாக்குறுதி



கரூரில் மக்களை நேரில் சந்தித்து அதிமுக 2026 தேர்தல் வாக்குறுதிகளை எடுத்துக் கூறி, அவர்களின் குறைகளை முன்னாள் அமைச்சர் எம்.ஆர் விஜயபாஸ்கர் கேட்டறிந்தார்.

## பாமக தலைவர் அன்புமணி, குடும்பத்துடன் சுவாமி தரிசனம்



மதுரை பழமுதிர்சோலை கோவிலில் பாமக தலைவர் அன்புமணி, குடும்பத்துடன் சுவாமி தரிசனம் செய்தார்.

## மாணவ, மாணவிகளுக்கு மடிக்கணினி



திருவள்ளூர் மாவட்ட நிர்வாகம் ஏற்பாட்டில், திருவேற்காடு, சிந்தி கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நேற்று மாணவ, மாணவிகளுக்கு மடிக்கணினிகளை அமைச்சர் நாசர் வழங்கினார்.

## முதல் நிலை பயிற்சி வகுப்பு



நீலகிரி கலெக்டர் அலுவலகத்தில் தேர்தல் பணி அலுவலர்கள் மற்றும் காவல் அலுவலர்களுக்கான முதல் நிலை பயிற்சி வகுப்பு கலெக்டர் லட்சுமி பவ்யா தலைமையில் நடந்தது.

## துணை முதல்வர் உதயநிதி வாழ்த்து



ICC Under-19 உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டி 2026-இல் கோப்பையை வென்ற நம் இந்திய அணியில், இடம்பெற்று இருந்த தமிழ்நாடு கிரிக்கெட் வீரர்கள் அம்ப்ரிஷ் மற்றும் தீபேஷ் ஆகியோரை துணை முதல்வர் உதயநிதி நேற்று நேரில் சந்தித்து வாழ்த்தினார்.

## நலத்திட்ட உதவி



கோவை வடக்கு சட்டமன்ற தொகுதியில் வானதிசீனிவாசன் எம்எல்ஏ ஏற்பாட்டில் நடந்த மோடி முகாமில் நலத்திட்ட உதவிகளை பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் வழங்கினார்.

## 10வது நாளாக போராட்டம்



காலமுறை ஊதிய உயர்வு உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து கோவையில் நேற்று 10வது நாளாக போராட்டம் நடத்திய சத்துணவு மற்றும் அங்கன்வாடி ஊழியர்களுக்கு பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் ஆதரவு தெரிவித்தார். உடன் வானதி சீனிவாசன் எம்எல்ஏ.

## மறுமலர்ச்சி மக்கள் இயக்கம் ஆர்ப்பாட்டம்




கேந்திரிய வித்யாலயாக்களில் தமிழ் கட்டாயமாக்க கோரி, கோவை வட்டாட்சியர் அலுவலகம் முன் மறுமலர்ச்சி மக்கள் இயக்கம் ஆர்ப்பாட்டம் நடத்தியது.

## மாற்றுத்திறனாளிகளுக்கு, மூன்று சக்கர வாகனங்கள்



திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் இன்று வாணியம்பாடி சட்டமன்ற உறுப்பினர் செந்தில்குமார், தனது சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து மாற்றுத்திறனாளிகளுக்கு, மூன்று சக்கர வாகனங்களை வழங்கினார் இதில் அதிமுக முன்னாள் அமைச்சர் நீலோபர் கபீல் மற்றும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கோ.வி. சம்பத், சதாசிவம் நகர கழக செயலாளர் உள்ளிட்ட அதிமுக நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்..

## "சீர்மிகு சாரணர்" பாராட்டு விழா




தூத்துக்குடி மாவட்டம் புதூர் ஒன்றியத்தில் செங்கோட்டை அரசு மேல்நிலைப்பள்ளி இயங்கி வருகிறது பள்ளியில் கல்விக்கு இணையாக கல்வி இணை செயல்பாடுகள் மற்றும் கல்வி சாரா செயல்பாடுகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. சாரணர் இயக்கத்தை சார்ந்த மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில் மாதம் தோறும் "சீர்மிகு சாரணர்" தேர்வு செய்யப்பட்டு பரிசு வழங்கப்பட்டு வருகிறது. நேர்த்தியான சீருடை மற்றும் நிகழ்வூட்டும் சேவை ஆகிய தலைப்புகளில் ஜனவரி மாதம் சாரணர் இயக்கத்தில் சிறப்பாக செயல்பட்ட ஆறாம் வகுப்பு மாணவன் சுதாகர் "சீர்மிகு சாரணர்" ஆக தேர்வு செய்யப்பட்டார். இன்றைய காலை வழிபாட்டு கூட்டத்தில் அம்மாணவனுக்கு தோள் பை பரிசாக வழங்கப்பட்டது பள்ளியின் தலைமை ஆசிரியர் ஜெய மீனா பரிசினை வழங்கி பாராட்டினார். பரிசு பெற்ற மாணவனை ஆசிரியர்கள் அனைவரும் பாராட்டினர். பள்ளியின் சாரண ஆசிரியர் செலஸ்டின் மகிமை ராஜ் விழா ஏற்பாடுகளை செய்திருந்தார்.



நேற்று 12-02-2026 தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் திரு.K.செல்வப்பெருந்தகை அவர்கள் தலைமையில், ஒன்றிய பா.ஜ.க. அரசை கண்டித்து தொழிற்சங்கங்கள் சார்பில் சென்னையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்நிகழ்வில் அகில இந்திய காங்கிரஸ் செயலாளர் திரு. வி.கே. அறிவழகன், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி அமைப்பு செயலாளர் திரு. ராம் மோகன், ஆராய்ச்சி துறை தலைவர் திரு. மாணிக்கவாசம், வடசென்னை கிழக்கு மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர் மதாரம்மாகனி பாரூக் உட்பட சென்னை மாவட்ட தலைவர்கள், மாநில நிர்வாகிகள், மாவட்ட, வட்டார, சர்க்கிள், நகர, பேரூர், வார்டு காங்கிரஸ் நிர்வாகிகள், முன்னணி அமைப்புகள், துறைகள் மற்றும் பிரிவுகளின் தலைவர்கள், ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பெருந்திரளான காங்கிரஸ் கட்சியினர் பங்கேற்றனர்.




திருப்பத்தூர் மாவட்டம் ஆலங்காயம் திமுக ஒன்றியம் சார்பில் 100 நாள் வேலை திட்டத்தில் மத்திய அரசு மாற்றம் கொண்டுவந்ததற்கு எதிர்ப்பு தெரிவித்து திமுக மற்றும் கூட்டணி கட்சியினர் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இந்த ஆர்ப்பாட்டத்தில் சிறப்பு அழைப்பாளராக ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் க.தேவராஜ் கலந்து கொண்டு கண்டன உரையாற்றினார். இந்த ஆர்ப்பாட்டத்தில் திமுக மாநில தொண்டர் அணி துணை செயலாளர் முனிவேல், ஆலங்காயம் மேற்கு ஒன்றிய செயலாளர் வி. எஸ். ஞானவேலன், மக்களுக்கு ஒன்றிய செயலாளர் தாமோதரன், மத்திய ஒன்றிய செயலாளர் வி.ஜி. அன்பு, ஒன்றிய குழு தலைவர் சங்கீதா பாரி உள்ளிட்ட கூட்டணி கட்சி சேர்ந்த நிர்வாகிகள் தொண்டர்கள்.

**ரவுசு மணி**

உதட்டிற்கும் உள்ளத்திற்கும் ஒரே ஒரு வித்தியாசம்தான்

உதடு சொல்லத் துடிக்கும்.......

உள்ளம் சொல்லாமல் துடிக்கும்...



V.முத்து ராமகிருஷ்ணன்

# சுற்றுலா: இராமேஸ்வரத்தில் அவசியம் பார்க்க வேண்டிய பத்து இடங்கள்!

இராமேஸ்வரம் தமிழ்நாட்டைச் சேர்ந்த ஒரு தீவாகும். இத்தீவு பாம்பன் பாலம் மூலமாக தரைவழிப் போக்குவரத்திற்காக இணைக்கப்பட்டுள்ளது. ராமன் ஈஸ்வரனை வணங்கிய இடம் என்பதால் இத்தலத்திற்கு "இராமேஸ்வரம்" என்ற பெயர் ஏற்பட்டது. இராமேஸ்வரத்தில் பார்க்கவேண்டியமுக்கியமானபத்து இடங்களைப் பார்ப்போம்.



1.இராமநாதசுவாமிதிருக்கோயில்

இந்தியாவில் பல்வேறு இடங்களில் அமைந்துள்ள பன்னிரு ஜோதிர்லிங்க தலங்களுள் ஒரு முக்கியமான தலமாகும்.

2. ஸ்ரீகோதண்டராமர் கோயில்

ஏறத்தாழ ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்டதாக கருதப்படும் இத் திருக்கோயில் தனுஷ்கோடிக்குச் செல்லும்வழியில் வங்காளவிரிகுடா மற்றும் மன்னார் வளைகுடாவால்சூழப்பட்ட ஒருசிறிய தீவில் அமைந்துள்ளது.

3. தனுஷ்கோடி

பாம்பன் தீவின் தென்கிழக்குப் பகுதியில் அமைந்துள்ளது. 1964 ஆம் ஆண்டு வீசிய புயலால் முற்றிலும் சேதமடைந்த ஒரு தீவாகும். இராமேஸ்வரத்தில் இருந்து சுமார் 20 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. இதைத் தாண்டி இன்னும் நான்கு கிலோமீட்டர் பயணித்தால் அரிச்சல்முனை என்ற பகுதியை அடையலாம். இங்கு வங்காளவிரிகுடாவும் இந்தியப் பெருங்கடலும் இணைகின்றன.

4. கலாம் இல்லம்

முன்னாள் குடியரசுத் தலைவர் மேதகு ஏ.பி.ஜே.அப்துல் கலாம் அவர்கள் வாழ்ந்த இல்லம் தற்போது அருங்காட்சியமாக மாற்றப்பட்டுள்ளது. காலை 08.00 மணியிலிருந்து இரவு 07.00 மணி வரை இல்லத்தைப்பார்வையிடலாம்.

5. இராமர் பாதம்



கெந்த மாதன பர்வதம் என்ற இடத்தில் இராமர் பாதம் அமைந்துள்ளது. இது ஒரு மணல் மேடாகும். நிலமட்டத்திலிருந்து சுமார் 60 மீட்டர் உயரமுடையது இந்த சிறிய குன்று. இந்த இடத்தின் மீது இலங்கைக்குச் செல்ல கடலில் பாலம் அமைப்பது குறித்து ஆலோசனை நடத்தியதாக கூறப்படுகிறது. அருள்மிகு இராமநாதசுவாமிகோயிலில் இருந்து சுமார் 3 கிலோமீட்டர் தொலைவில் ராமர் பாதம் அமைந்துள்ளது.

6.பஞ்சமுக ஆஞ்சநேயர் கோவில்

இராமேஸ்வரம் பேருந்து நிலையத்திலிருந்து சுமார் ஒரு கிலோமீட்டர் தொலைவில் பிரதான சாலையில் சீதா தீர்த்தத்திற்கு எதிரில் அமைந்துள்ளது. இங்கு அனுமன் செந்தூர நிறத்தில் காட்சி தந்து அருளுகிறார். சேது பந்தனம் உருவாக்கப் பயன்படுத்தப்பட்ட மிதக்கும் கற்களை இங்கு தரிசிக்கலாம். அளவிலும்எடையிலும் பெரிதாக உள்ள இத்தகைய கற்கள் தண்ணீரில்மிதக்கும் அதிசயத்தைக் காணலாம்.

7. வில்லூண்டித் தீர்த்தம்

வில்லூண்டிஎன்றால் அம்பினால் துளைக்கப்பட்ட இடம் என்பது பொருளாகும். இராமேஸ்வரம் பேருந்து நிலையத்திலிருந்து சுமார் ஆறு கிலோமீட்டர் தொலைவில் இத்தலம்அமைந்துள்ளது. கடலுக்குள் அமைந்துள்ள வில்லுண்டித் தீர்த்தத்தில் தூய நீர் உருவாவது அதிசயமாகும். கரையிலிருந்து கடலுக்குள் 120 அடி நீளத்திற்கு ஒரு பாலம் அமைக்கப்பட்டுள்ளது. பாலத்தின் இறுதியில் இந்த கிணறு போன்ற தீர்த்தம் அமைந்துள்ளது.




புனித தீர்த்த கிணறு

8.அப்துல்கலாம்நினைவுமண்டபம்:

இராமேஸ்வரம் தீவில் பேக்கரும்பு என்ற இடத்தில் அப்துல்கலாம் அவர்களுக்கு ஒரு நினைவு மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. மூன்றரை ஏக்கர் பரப்பளவில் இருபதுகோடிரூபாய்மதிப்பில்இந்த மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. கலாம் அவர்கள் பயன்படுத்திய உடைகள், புத்தகங்கள் மற்றும் அரிய புகைப்படங்கள் முதலானவை இந்த மண்டபத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

9. லட்சுமண தீர்த்தம்

இலட்சுமணர் தனக்கு ஏற்பட்ட பாவங்களைப் போக்கிக் கொள்ளுவதற்காக இந்த தீர்த்தத்தை உருவாக்கியையாகவும், இந்த இடத்தில் ஒரு லிங்கத்தை நிறுவி சிவபெருமானிடம் பாவ நிவர்த்தி வேண்டி பிராத்தனை செய்ததாகவும் ஐதீகம்.

10. குந்துகால்

சிகாகோவில் தனது சுற்றுப்பயணத்தை முடித்துக்கொண்ட 26.01.1897 அன்று இந்தியா திரும்பிய சுவாமி விவேகானந்தர் இந்த இடத்தில்தான் வந்து இறங்கினார். இதன் தொடர்பாக இப்பகுதியில் ஒரு நினைவுச்சின்னம் அமைக்கப்பட்டுள்ளது. அக்காமடம் என்ற இடத்தில் இறங்கி அங்கிருந்து ஆட்டோவில்4கிலோமீட்டர்பயணித்து இந்த இடத்தை அடையலாம்.

## வேலைவாய்ப்பு கார்னர்

# ஐஆர்சிடிசி-ல் வேலை: மிஸ் பண்ணாதீங்க..!




மத்திய ரயில்வே அமைச்சகத்தின் கீழ் டில்லியை தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வரும் ரயில்வே சுற்றுலாத்துறைக்கு சொந்தமான ரயில்வே உணவு வழங்கல் மற்றும் சுற்றுலா கழகம் (ஐஆர்சிடிசி) ஒரு 'நவரத்னா' பட்டியலில் இடம்பெற்றுள்ள நிறுவனமாகும். இந்நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் ரூ.250 கோடி, செலுத்தப்பட்ட மூலதனம் ரூ.160 கோடி. இந்நிறுவனத்தில் தற்போது 43 ஹாஸ்பிடாலிட்டி மானிட்டர் (Hospitality Monitors) பணியிடங்களுக்கான வேலைவாய்ப்பு அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

இதுகுறித்துரயில்வேஉணவுவழங்கல்மற்றும்சுற்றுலா கழகம் (ஐஆர்சிடிசி) வெளியிட்டுள்ள அறிக்கையில், ஐஆர்சிடிசியில் காலியாக உள்ள 43 ஹாஸ்பிடாலிட்டி மானிட்டர் பணியிடங்கள் நிரப்பப்பட உள்ளன. இந்த பணியிடங்களுக்கு 17.2.2026 முதல் 5.3.2026 வரை நடைபெறும் நேர்முகத் தேர்வில் தகுதியானவர்கள் கலந்துகொள்ளலாம் என தெரிவித்துள்ளது.

தேர்வு செய்யப்படும் முறை: நேர்முகத் தேர்வு மற்றும் மருத்துவத் தகுதி அடிப்படையில் தகுதியானவர்கள் தேர்வு செய்யப்படுவர்.

விண்ணப்பிக்கும் முறை: www.irctc.com என்ற இணையதளத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் விண்ணப்பத்தை பதிவிறக்கம் செய்து, பூர்த்தி செய்து அதனுடன் தேவையான சான்றிதழ்களின் அசல் மற்றும் நகல்கள், 3 பாஸ்போர்ட் அளவு புகைப்படத்தை இணைத்து நேர்முகத் தேர்வின்போது சமர்ப்பிக்க வேண்டும்.

நேர்முகத் தேர்வு நடைபெறும் தேதி: 17.2.2026 முதல் 5.3.2026 வரை நடைபெறும்.

மேலும் விவரங்களுக்கு: https://www.irctc.com/assets/images/NotificationWalk-inHMs21_01_2026.pdf

# அமைச்சர் துரைமுருகன் மருத்துவமனையில் அனுமதி




**சென்னை, பிப்.13:**

தி.மு.க. அமைச்சரும், அக்கட்சியின் பொதுச்செயலாளருமான துரைமுருகன் சென்னை கிரீம்ஸ் சாலையில் உள்ள அப்பல்லோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வயது மூப்பு காரணமாக அவருக்கு அவ்வப்போது ஏற்படும் உடல்நலக் குறைபாடுகளுக்காகத் தொடர் மருத்துவப் பரிசோதனைகள் மற்றும் சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதற்காக அடிக்கடி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு வருகிறார். இதற்கிடையே, நேற்று வீட்டில் தவறி கீழே விழுந்ததில் காயம் அடைந்ததாகவும் இதனைத்தொடர்ந்து சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டதாகவும் கூறப்பட்டது.

இந்த நிலையில், அமைச்சர் துரைமுருகனுக்கு அளிக்கப்படும் சிகிச்சை குறித்து மருத்துவமனை நிர்வாகம் அறிக்கை வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையில், கால் வலி காரணமாக அமைச்சர் துரைமுருகன் அனுமதிக்கப்பட்டுள்ளார். அவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர்கள், அடுத்த சில நாட்கள் ஓய்வில் இருக்க அறிவுறுத்தியுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

# விஷம் கலந்து கேக் சாப்பிட்டு தற்கொலைக்கு முயன்ற குடும்பம்: 2 பேர் உயிரிழப்பு

**சென்னை, பிப். 13:**

சென்னை பெரம்பூரில் விஷம் கலந்த கேக்கை சாப்பிட்ட 2 பேர் உயிரிழந்தசம்பவம் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. 2 பேர் கவலைக்கிடமான நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சென்னை பெரம்பூரைச் சேர்ந்த சகாயம் செபஸ்டின் என்பவரின் மனைவி பியூலா புற்றுநோயால் பாதிப்பட்டார். இதன் காரணமாக மன வேதனையில்இருந்த சகாயம் செபஸ்டின் கேக்கில் விஷம் கலந்து தனது குடும்பத்தில் உள்ள 4 பேருக்கும் கொடுத்தார். கேக்கை சாப்பிட்ட 2 பேர் உயிரிழந்தனர். தாய் மற்றும் மகள் உயிருக்கு ஆபத்தான நிலையில் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சகாயம் செபஸ்டின் தூக்குப் போட்டு தற்கொலை செய்து கொண்டதாக கூறப்படுகிறது. இது பற்றி முழுமையான விபரம் தெரியவில்லை.

உயிரிழந்த இருவரின் உடலை கைப்பற்றி பெரம்பூர் செம்பியம் காவல்துறையினர் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

# இந்தியக் குடும்பங்களிடம் ரூ.452 லட்சம் கோடி தங்கம்: தமிழ்நாட்டில் மட்டும் ரூ.202 லட்சம் கோடி

**புதுடெல்லி, பிப்.13:**

உலக அளவில் இந்தியாவில் தான் அதிக அளவில் மக்கள் தங்கத்தைக் கையிருப்பாக வைத்திருக்கின்றனர். அதிலும் குறிப்பாக இந்தியாவின் 45% நகைகள் (அதாவது ரூ.202 லட்சம் கோடி) தமிழ்நாட்டு பெண்களிடம் இருப்பதாக பல்வேறு புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.



இந்தியக் குடும்பங்களின் இல்லங்களில் மட்டும் தற்போது 34,600 டன் தங்கம் உள்ளது. இது, அமெரிக்காவின் தேசிய தங்கக் கையிருப்பை விட அதிகமாகும்.

2025ம் ஆண்டு தொடங்கியதில் இருந்து தற்போது வரை தங்கத்தின் விலை 90% ஆக அதிகரித்துள்ளது. சர்வதேச சந்தையில் பணத்தின் மதிப்பு குறைந்து வருவதால் தங்கத்தில் முதலீடு செய்வது லாபகரமானதாக பார்க்கப்படுகிறது.

இதன் காரணமாக, தங்கத்துக்கு நல்ல 'கிராக்கி' உருவானது. சர்வதேச சந்தையில் தங்கத்தின் விலை 'மின்னல்' வேகத்தில் உயர்ந்து வருகிறது. இதன் காரணமாக, அதன் மதிப்பு 5 டிரில்லியன் டாலர் (ஒரு டாலரின் மதிப்பு இன்றைய நிலவரப்படி ரூ.90.60 காசு) என்ற அளவை எட்டியுள்ளது. இது, இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பான (ஜிடிபி) 4.125 டிரில்லியன் டாலரை விட அதிகம்.

இதன் காரணமாக, தங்கத்தை கையிருப்பு வைத்திருக்கும் இந்திய குடும்பங்களின் சொத்து மதிப்பு ரூ.452 லட்சம் கோடியாக உயர்ந்திருப்பதாக தனியார் வங்கி நிறுவனத்தின் ஆய்வு தெரிவிக்கிறது.

கடந்த 25 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு இந்திய குடும்பங்கள் வளம் தற்போது அதிகரித்திருக்கிறது. உதாரணமாக, 10 ஆண்டுக்கு முன்பு 1 சவரன் தங்கத்தின் விலை வெறும் ரூ. 26,343 ஆக இருந்த நிலையில், இன்று ரூ.1,25,368 ஆக அதிகரித்துள்ளது. தங்கம் என்பது மிகப்பெரிய அசையும் சொத்தாக உள்ளது. அந்த சொத்தின் மதிப்பு பலமடங்கு அதிகரித்துள்ளது.

தங்கத்தின் விலை உயர்வால், நகைகளை கையிருப்பில் வைத்திருக்கும் ஒவ்வொரு குடும்பங்களும்பெரிதும் பயனடைந்துள்ளன. புதிதாக தங்கத்தை வாங்கமலும், விற்காமலும் கூட இவ்வளவு பெரிய ஆதாயத்தை அடைந்துள்ளன.

உலக அளவில் இந்தியாவில் தான் அதிக அளவில் மக்கள் தங்கத்தைக் கையிருப்பாக வைத்திருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. இத்தகவல் சர்வதேச நாணய நிதியம் (ஐஎம்எஃப்) வெளியிட்டுள்ள உலக பொருளாதார பார்வை அறிக்கையில்இடம்பெற்றுள்ளது.

# கோவை, திருப்பூரில் தினமும் ரூ.50 லட்சம் இழப்பு

**கோவை, பிப்.13:**

கடந்த 3 வாரங்களாக நூல் விலை கிலோவுக்கு ரூ.30 வீதம் அதாவது 20 சதவீதம் உயர்ந்துள்ளது. இந்த விலை உயர்வை நேரடியாக துணியின் மீது வைக்க இயலவில்லை. இதனால், ரூ.100 கோடி மதிப்பிலான துணிகள் திருப்பூர், கோவை மாவட்டங்களில் தேக்கமடைந்துள்ளன. இதனால் விசைத்தறி கூடங்களுக்கு பாவு நூல் கொடுத்து துணியாக நெய்து பெறும் நூல் உற்பத்தியாளர்கள் நேற்று முதல் 50 சதவீத உற்பத்தி நிறுத்த போராட்டத்தை தொடங்கினார்கள்.

கோவை மாவட்டத்தில் சோமனூர், அன்னூர் ஆகிய பகுதிகளிலும், திருப்பூர் மாவட்டத்தில் இச்சிப்பட்டி, பல்லடம், மங்கலம் உள்ளிட்ட பகுதிகளிலும் இந்த போராட்டத்தின் காரணமாக பாவு மற்றும் நூல் பை 50 சதவீதம் மட்டுமே வழங்கப்பட்டன.

இது தொடர்பாக போராட்டக்காரர்கள் கூறியதாவது:- தொழிலாளர்கள் பாதிக்கப்படக்கூடாது என்பதால்தான் பகுதி நேரம் இயக்கப்படுகிறது.

நாள் ஒன்றுக்கு 1கோடி மீட்டர் துணி உற்பத்தி செய்யப்படும் நிலையில், இது பாதியாக குறைக்கப்படும்.

நல்ல பஞ்சு கிலோ ரூ.160-க்கு விற்கப்படும் நிலையில், கழிவுப்பஞ்சு ரூ.130 வரை விற்கப்படுவது ஏற்புடையது அல்ல.

கழிவுப் பஞ்சு விலையால் நூல் விலை உயர்ந்துள்ளது. இதனால் எங்கள் தொழில் முழுமையாக பாதிப்பை சந்திக்கிறது. ஆகவே நூல் விலையை குறைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இதனை வலியுறுத்தியே எங்கள் போராட்டம் தொடர்கிறது.

இதன் காரணமாக கோவை மாவட்டத்தில் தினமும் ரூ.25 லட்சமும், திருப்பூர் மாவட்டத்தில் தினமும் ரூ.25 லட்சமும் என மொத்தம் ரூ.50 லட்சம் உற்பத்தி இழப்பை சந்திக்க தொடங்கி உள்ளது.

இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

# தங்கம் விலை அதிரடி குறைவு...

**சென்னை, பிப்.13:**

சர்வதேச பொருளாதார நிலவரத்துக்கு ஏற்ப நாள்தோறும் தங்கம் விலையில் மாற்றம் ஏற்பட்டு வருகிறது. குறிப்பாக, தங்கம், வெள்ளி மீது சர்வதேச முதலீட்டாளர்கள் அதிகளவில் முதலீடு செய்து வருகின்றனர். இதனால், இந்தியாவில் தங்கம் விலை உயர்ந்தவாறு இருக்கிறது.

கடந்த டிசம்பர் மாதம் 15-ந்தேதி தங்கம் விலை ரூ.1 லட்சத்தை கடந்தது. அதன் பின்னர், சற்று குறைந்து தங்கம் விலையில் ஏற்ற, இறக்கங்கள் காணப்பட்டது. இந்த ஆண்டு தொடக்கம் முதலே தங்கம் விலை உச்சம் தொட்டது. இடையிடையே தங்கம், வெள்ளி விலையில் ஏற்ற, இறக்கம் இருந்து வருகிறது.

தங்கம் விலை நேற்று காலையில் கிராமுக்கு ரூ.20-ம், சவரனுக்கு ரூ.160-ம் அதிகரித்து, ஒரு கிராம் ரூ.14,600-க்கும், ஒரு சவரன் ரூ.1,16,800-க்கும் விற்பனை செய்யப்பட்டது. 2-வது முறையாக மாலையும் தங்கம் விலை உயர்ந்தது. சவரனுக்கு ரூ.1,520 உயர்ந்து, ஒரு சவரன் ரூ.1,18,320-க்கு விற்பனை செய்யப்பட்டு வந்தது.

இன்றைய தங்கம், வெள்ளி விலை

இந்த நிலையில் தங்கம் விலை இன்று அதிரடியாக குறைந்துள்ளது. அதன்படி சென்னையில் 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை இன்று சவரனுக்கு ரூ.1,520 குறைந்து ஒரு சவரன் ரூ.1,16,800-க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. கிராமுக்கு ரூ.190 குறைந்து ஒரு கிராம் ரூ.14,600-க்கு விற்பனையாகி வருகிறது.

வெள்ளியின் விலை மாற்றமின்றி ஒரு கிராம் ரூ.300க்கும், ஒரு கிலோ ரூ.3 லட்சத்துக்கும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

# 'ஒன்றிணைந்து செயல்படுவோம்; தேர்தலில் மாபெரும் வெற்றி பெறுவோம்'': பிரேமலதா விஜயகாந்த் கடிதம்

**சென்னை, பிப்.13:**

"வரும் சட்டமன்றத் தேர்தலில் மாபெரும் வெற்றி பெறவேண்டி, உண்மை, உழைப்பு, அர்ப்பணிப்பு, விசுவாசம், கண்ணியம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு ஒன்றிணைந்து செயல்படுவோம். இந்தத் தேர்தலில் வெற்றி பெற்று, நமது இயக்கம் ஒரு அசைக்க முடியாத சக்தி என்பதை நம் உழைப்பின் மூலம் நிரூபிக்க வேண்டும் என இந்த கொடி நாளில் உறுதிமொழி ஏற்றுக் கொள்வோம்". என்று பிரேமலதா விஜயகாந்த் வலியுறுத்தியுள்ளார்.

நேற்று (12ந் தேதி) தேசிய முற்போக்குக் கழகத்தின் 26ம் ஆண்டு கொடி நாளை முன்னிட்டு அதன் பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த், தொண்டர்களுக்கு கடிதம் எழுதியுள்ளார். அதில் அவர் மேலும் கூறியிருப்பதாவது:

"இந்தக் கொடி நாளை, அனைத்து கழக நிர்வாகிகளும் தொண்டர்களும் சிறப்பாகக் கொண்டாட வேண்டும் என அன்போடு கேட்டுக்கொள்கிறேன். 2000ஆம் ஆண்டு நமது தலைவர் புரட்சி கலைஞர் கேப்டனால் அறிமுகப்படுத்தப்பட்ட மூவர்ணக் கொடி, சமதர்மம், சமூக நீதி, சனாதனம், சமசிந்தனை மற்றும் சமஉரிமை ஆகிய கழகக் கொள்கைகளை உலகிற்கு எடுத்துச் சொல்லும் சின்னமாக விளங்குகிறது.

அனைத்து மாவட்டம், பகுதி, ஒன்றியம், நகரம், பேரூர், ஊராட்சி மற்றும் கிராமப்புற கிளைகளில் பழைய கொடிகளை அகற்றி புதிய கழகக் கொடிகளை ஏற்றி, கொடி இல்லாத இடங்களில் புதிய கொடிகளை அமைக்க வேண்டும். "இயன்றதை செய்வோம்! இல்லாதவர்க்கே!!" என்ற தலைவரின் கோட்பாட்டின்படி, மாணவர்கள், இளைஞர்கள், பெண்கள் மற்றும் முதியவர்களுக்கு நம்மால் இயன்ற உதவிகளை வழங்க வேண்டும்.

மேலும், கொடி நாளை முன்னிட்டு தமிழகம் முழுவதும் புதிய உறுப்பினர் சேர்க்கையை தீவிரப்படுத்தி, பெண்கள், இளைஞர்கள், மாணவர்கள் மற்றும் புதிய வாக்காளர்களை அதிகளவில் கழக உறுப்பினர்களாக இணைக்க வேண்டும். இந்த கொடி நாளில், நமது கழகக் கொடியை தமிழகம் முழுவதும் பட்டொளி வீசி பறக்கவைத்து, நமது முரசு எட்டு திக்கும் வெற்றி முரசாக ஒலிக்கச் செய்வோம்.

"தமிழன் என்று சொல்லடா!, தலைநிமிர்ந்து நில்லாடா!!, நன்றி! வணக்கம்....என்றார்.

# திருவண்ணாமலையில் 242 மாணவர்களுக்கு ரூ.28 லட்சம் கல்வி உதவித் தொகை: விஐடி வேந்தர் விசுவநாதன் வழங்கினார்

திருவண்ணாமலை, பிப்.13:

"கல்வியால் வீடும், நாடும் உயரும்" என்று விஐடி வேந்தர் கோ.விசுவநாதன் உறுதிப்படத் தெரிவித்தார்.

அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை சார்பில் முதல் முறையாக திருவண்ணாமலை மாவட்டத்தைச் சார்ந்த மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்கும் விழா நேற்று நடந்தது. கோ.விசுவநாதன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் 242 மாணவர்களுக்கு ரூ.28 லட்சம் கல்வி உதவித்தொகையாக வழங்கப்பட்டது.

சிறப்பு விருந்தினராக, தமிழக சட்டப்பேரவைத் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி கல்வி உதவித்தொகை வழங்கினார். அப்போது அவர் கூறியதாவது:

"இந்தியாவில் உயர்கல்வியில் சாதனை படைத்த மாநிலமாக உள்ளது. அகில இந்திய சராசரியை விட தமிழ்நாடு 50 சதவீதத்துடன் முதல் இடத்தில் உள்ளது.



வட ஆற்காடு மாவட்டங்களில் உயர்கல்வி படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டும். திராவிட இயக்கத்தின் வளர்ச்சியால் தமிழகம் கல்வியால் முன்னேறி உள்ளது. கல்வி, பொருளாதாரத்தில் பின்தங்கிய வட ஆற்காடு வடஆற்காடு மாவட்டங்கள் கல்வி, பொருளாதாரத்தில் பின்தங்கி உள்ளது. இந்தியாவுக்கு பீகார் போல, தமிழ்நாட்டுக்கு பீகார் போல வடஆற்காடு மாவட்டங்கள் உள்ளன. கல்வியால் எந்த மாற்றத்தையும் கொண்டு வர முடியும். கல்வி வீட்டை, நாட்டையும் உயர்த்தும். இந்தியாவில் உள்ள 750 மாவட்டங்களில் வடஆற்காடு மாவட்டம் முதல் இடத்துக்கு வர வேண்டும். அது நம்மால் முடியும்.

உயர்கல்விக்கு வரும்போது அரசின் கல்லூரிகள், பல்கலைக்கழகங்களில் மாணவர் சேர்க்கை எண்ணிக்கை குறைவாகத் தான் சேர்க்கப்படுகிறது. திருவள்ளூர் பல்கலைக்கழகம் ஆரம்பித்து 22 ஆண்டுகள் ஆகிவிட்டது. தற்போது ஆயிரம் பேர் தான் மாணவர் சேர்க்கை நடந்துள்ளது. அன்னை தெரசா பல்கலைக்கழகத்தில் ஆயிரத்துக்கும் குறைவாக மாணவிகள் படித்து வருகின்றனர். இதை மாற்றி அமைக்கத்தான் அனைவர்க்கும் உயர்கல்வி கட்டளை தொடங்கி மாணவர்கள் உயர்கல்வி பெற உதவித்தொகை வழங்கி வருகிறோம். இதன் மூலம் மிகப்பெரிய அளவில் வரலாற்றை படைக்கப் போகிறோம்.

எனது பிறந்த நாளில் விஐடி ஆசிரியர்கள், பணியாளர்கள் வழங்கிய ரூ.96 லட்சம் தொகை அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளைக்கு வழங்கப்பட்டது. இதுவரை 13 கோடி வரை கல்வி உதவித்தொகை கொடுத்துள்ளோம். இது இன்னும் உயரும். 242 பேருக்கு கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

# க்ரைம் கார்னர்

## திருநெல்வேலியில் கணவரை கொலை செய்த மனைவி உள்பட 3 பேருக்கு ஆயுள் தண்டனை

திருநெல்வேலி, பிப்.13:

திருநெல்வேலியில் கணவரை கொலை செய்த மனைவி உள்பட 3 பேருக்கு ஆயுள் தண்டனை விதித்து கோர்ட் உத்தரவிட்டுள்ளது.

திருநெல்வேலி மாவட்டம், வீரவநல்லூர் அருகே கடந்த 2017-ம் ஆண்டு, குடும்ப பிரச்சினை காரணமாக வல்லத்து நம்பிகுளத்தை சேர்ந்த முருகன் (வயது 38) என்பவரை அவரது மனைவி உள்பட 3 பேர் சேர்ந்து கொலை செய்தனர். இது தொடர்பாக வழக்குப்பதிவு செய்யப்பட்டு, புலன் விசாரணையின் முடிவில் நீதிமன்றத்தில் இறுதி அறிக்கை தாக்கல் செய்து, வழக்கின் விசாரணையானது திருநெல்வேலி முதலாவது கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. இந்த நிலையில் முத்துராஜ் (30), கொலைசெய்யப்பட்ட முருகனின் மனைவி ஞானஅகிலா(34) மற்றும் பஞ்சராஜன்(33) ஆகிய 3 பேருக்கும் எதிரான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டதால், நீதிபதி செல்வம் நேற்று குற்றவாளிகள் 3 பேருக்கும் கொலை குற்றத்திற்காக ஆயுள் தண்டனையும், ரூ.10 ஆயிரம் அபராதமும் விதித்து தீர்ப்பளித்தார். மேலும் இந்த வழக்கின் 2வது குற்றவாளியான கொலை செய்யப்பட்ட முருகனின் மனைவி ஞானஅகிலாவுக்கு கடத்தல் குற்றத்திற்காக கூடுதலாக 10 ஆண்டுகள் சிறை தண்டனையும், ரூ.15 ஆயிரம் அபராதமும் விதித்து தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இந்த வழக்கில் திறம்பட சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி குற்றவாளிகளுக்கு தண்டனை பெற்றுத் தந்த சேரன்மகாதேவி உட்கோட்ட டி.எஸ்.பி. அஸ்வத் அன்டோ ஆரோக்கியராஜ், போலீஸ் இன்ஸ்பெக்டர் கவிதா மற்றும் வீரவநல்லூர் காவல்துறையினர், இந்த வழக்கினை திறம்பட புலனாய்வு செய்த அப்போதைய போலீஸ் இன்ஸ்பெக்டர் மங்கையர்கரசி, வழக்கில் விசாரணைக்கு உதவி செய்த காவலர் விக்னேஷ் ஆதிமூலம், நீதிமன்றத்தில் சிறப்பாக வாதிட்ட அரசு வழக்கறிஞர் கருணாநிதி ஆகியோரை திருநெல்வேலி மாவட்ட எஸ்.பி. பிரசன்னகுமார் பாராட்டினார்.

திருநெல்வேலி மாவட்டத்தில் கொலை குற்றத்திற்காக, இந்த ஆண்டில் தண்டனை வழங்கப்பட்ட முதல் வழக்கு இதுவாகும் என்பது குறிப்பிடத்தக்கது. திருநெல்வேலி மாவட்டத்தில் சென்ற ஆண்டில் (2025) 27 கொலை வழக்கில் 105 குற்றவாளிகளுக்கு தண்டனை பெற்று தரப்பட்டது. அதில் ஒரு நபருக்கு மரண தண்டனையும், 98 நபர்களுக்கு ஆயுள் தண்டனையும் வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. இதில் சரித்திர பதிவேடு உடையவர்கள் மட்டும் 28 நபர்கள் ஆவர்.

## கோயில் நிலத்தை விற்று ரூ.2,500 கோடி மோசடி: தனியார் கட்டுமான நிறுவனம் மீது போலீஸில் புகார்

சென்னை, பிப்.13:

குடியிருப்புவாசிகள், சென்னை காவல் ஆணையர் அலுவலகத்தில் அளித்த புகாரில் கூறப்பட்டுள்ளதாவது: அம்பத்தூரில் உள்ள அடுக்குமாடி குடியிருப்புத் திட்டத்தில் 2,036 குடும்பங்கள் தங்களது வாழ்நாள் சேமிப்பு மற்றும் வங்கிக் கடன்கள் மூலம் பல கோடி ரூபாய் முதலீடு செய்து வீடுகளை வாங்கியுள்ளன. இந்த நிலையில், அந்த நிலம் தனிநபர் சொத்து அல்ல. கடந்த 1974-ம் ஆண்டிலேயே நீதிமன்றத் தீர்ப்பின்படி, அது இந்து சமய அறநிலையத் துறைக்குச் சொந்தமான ஸ்ரீகரபாத்ர சிவபிரகாச சுவாமிகள் சன்னதி நிலையம் என்ற கோயில் சொத்து என்பது உறுதியாகியுள்ளது. கட்டுமான நிறுவனம் 2006-ல் தற்காலிகமாகப் பெற்ற பட்டாவை, வருவாய்த் துறை அதிகாரிகள் நிலத்தின் உண்மைத் தன்மையை ஆராய்ந்து கடந்த 2015, 2016, 2018-ல் அடுத்தடுத்து ரத்து செய்துள்ளனர். ஆனாலும், உண்மையை மறைத்து, ரத்தான பட்டாவை வைத்துக் கொண்டு பொதுமக்களை அந்த நிறுவனம் ஏமாற்றியுள்ளது. ரூ.2,500 கோடி வரை பணத்தை கொடுத்து வீடு வாங்கியவர்கள், இன்று கடும் அவதிக்கு ஆளாகி உள்ளனர். வீடுகளைத் தவிர்த்து, மக்களிடம் பராமரிப்புக்காக வசூலித்த 'கார்பஸ் ஃபண்ட்' ரூ.30 கோடி, கிளப் ஹவுஸ் வைப்புத் தொகை ரூ.30 கோடி என மொத்தம் ரூ.60 கோடியையும் நிறுவனம் முறைகேடாக பயன்படுத்தி உள்ளது. எனவே, கட்டுமான நிறுவனத்தின் சொத்துகளை உடனே கைப்பற்றி, எங்கள் பணத்தை மீட்டுத் தரவேண்டும். இவ்வாறு புகாரில் கூறப்பட்டுள்ளது.

# விளையாட்டு செய்திகள்

## டி20 உலகக் கோப்பை 2026-ல் மிகப்பெரிய வெற்றியைப் பெற்ற இலங்கை!

புதுடெல்லி, பிப்.13:

டி20 உலகக் கோப்பை 2026-ல் இலங்கை அணி மிகப்பெரிய வெற்றியைப் பெற்றுள்ளது.

ஓமனுக்கு எதிரான ஆட்டத்தில் இலங்கை அணி 105 ரன்கள் வித்தியாசத்தில் வென்று சாதனை படைத்துள்ளது.

ஓமனுக்கு எதிராக, இலங்கை அணி 20 ஓவர்களில் 225/5 ரன்கள் குவித்துள்ளது. இந்தப் போட்டியில் ஷனாகா 19 பந்துகளில் வேகமாக அரைசதம் அடித்து சாதனை படைத்தார்.

இந்தப் போட்டியில் அதிகபட்சமாக, குசல் மெண்டிஸ் 61, பவன் ரத்நாயகே 60 ரன்களும் எடுத்தார்கள்.

அடுத்து விளையாடிய இலங்கை அணி 20 ஓவர்களில் 120/9 ரன்கள் மட்டுமே எடுத்தது.

இந்த அணியில், அதிகபட்சமாக முகமது நதீம் 53 ரன்கள் எடுத்து அணியின் மோசமான தோல்வியை தடுத்து நிறுத்தினார்.

## சசிகுமார், ஆர்யன் தோல்வி; காலிறுதியில் 3 இந்திய இணைகள்

ஏடிபி சேலஞ்சர் டென்னிஸ் போட்டியான சென்னை ஓபனில், இந்தியாவின் சசிகுமார் முகுந்த், முன்னணி வீரரான பிரிட்டனின் ஜே கிளார்க் ஆகியோர் 2-ஆவது சுற்றில் செவ்வாய்க்கிழமை தோல்வி கண்டனர்.

காலிறுதிக்கு முந்தைய சுற்றில், சசிகுமார் முகுந்த் 6-3, 2-6, 3-6 என்ற செட்களில், கஜகஸ்தானின் டெனிஸ் யெவ்செயெவிடம் தோல்வியுற்றார். தகுதிச்சுற்று வீரரான ஆர்யன் லக்ஷ்மணன் 5-7, 2-6 என்ற வகையில், மொனாகோவின் மக்ஸ் கஸ்னிகோவ்ஸ்கியிடம் வீழ்ந்தார். போட்டித்தரவரிசையில் முதலிடத்தில் இருந்த பிரிட்டனின் ஜே கிளார்க் 4-6, 4-6 என்ற நேர் செட்களில், கிரீஸின் அயானிஸ் ஜிலாஸிடம் அதிர்ச்சித் தோல்வி கண்டார். 2-ஆம் இடத்திலிருக்கும் ஆர்ஜென்டீனாவின் ஃபெடெரிகோ அகஸ்டின் கோம்ஸ் 6-3, 6-4 என்ற நேர் செட்களில், இத்தாலியின் லொரென்ஸோ கார்போனியை தோற்கடித்தார்.

இரட்டையர்: இப்போட்டியின் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்றில், போட்டித்தரவரிசையில் 2-ஆம் இடத்திலிருக்கும் இந்தியாவின் சாகேத் மைனேனி/சித்தாந்த் பாந்தியா கூட்டணி 2-6, 6-1, 10-2 என்ற செட்களில், உக்ரைனின் எரிக் வன்ஷெல்போய்ம்/கஜகஸ்தானின் டெனிஸ் யெவ்செயெவ் இணையை வீழ்த்தியது. வைல்டு கார்டு இந்திய ஜோடியான லோஹித்அக்ஷா பத்ரிநாத்/அபினவ் சஞ்சீவ் சண்முகம் 6-3, 2-6, 10-8 என்ற வகையில் மனஸ் தாம்னே/அதர்வா சர்மா கூட்டணியை வென்றது. இஷாக் இக்பால்/மனீஷ் சுரேஷ்குமார் ஜோடி 3-6, 6-1, 10-3 என்ற கணக்கில், பிரிட்டனின் கார்ல் ஹோல்டர்/இந்தியாவின் ராகவ் ஜெய்சிங்கானி இணையை வீழ்த்தியது. போட்டித்தரவரிசையில் முதலிடத்தில் இருக்கும் இந்தியாவின் நிக்கி பூனசா/தாய்லாந்தின் பிருசியா இசரோ இணை 6-4, 6-2 என்ற நேர் செட்களில், இந்திய ஜோடியான சாய் கார்திக்/திக்விஜய்பிரதாப் சிங்கை வெளியேற்றியது. பிரிட்டனின் ஃபெலிக்ஸ் கில்/அலாஸ்டர் கிரே ஜோடி 6-2, 7-6 (7/5) என, பிலிப்பின்ஸின் ஃபிரான்சிஸ் கேசி/இந்தியாவின் ஆதில் கல்யான்பூர் கூட்டணியை வென்றது.

# பிரதமரின் ஆதரவுக்குப் பிறகும் வடமாநிலங்களில் தமிழுக்குச் சிக்கல்!

புதுடெல்லி, பிப்.13:

தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் தமிழை வளர்ப்பதற்காக பல கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படுகிறது. தமிழ் நாட்டுக்கு வெளியேயும் தமிழ் பாடங்கள் நடத்த குறிப்பிட்ட தொகை வைப்பு நிதியாக அளிக்கப்பட்டுள்ளது.



இதன் கீழ் அசாம், உ.பி., ஆந்திரா, கேரளா, ஒடிசா போன்ற மாநிலங்களில் உள்ள பல்கலைக்கழகங்களில் தமிழ் போதிக்கப்படுகிறது. கடந்த 1977-78 நிதியாண்டில் தலா ரூ.3 லட்சம் நிதியுதவியுடன் வாரணாசியின் பழமையான 3 பல்கலைக்கழகங்களில் தமிழ் பாடங்கள் போதிக்க முடிவு செய்யப்பட்டது. இவற்றில் பனாரஸ் இந்து பல்கலைக்கழகம் (பிஎச்யு) மட்டுமே சில ஆண்டுகள் இடைவெளிக்கு பிறகு மீண்டும் தமிழை போதிக்கிறது. சம்பூர்ணானந்த் சமஸ்கிருதப் பல்கலைக்கழகம், காசி வித்யாபீடம் ஆகியவற்றுக்கு நிதி அளித்தும் பலன் இல்லை. ஆந்திரா வின் குப்பம் நகரின் திராவிடன் பல்கலைக்கழகம், திருப்பதி ஸ்ரீவெங்கடேஸ்வரா பல்கலைக்கழகத்திலும் தமிழ் பேராசிரியர்களுக்கான 4 பணியிடங்கள் காலியாகவே உள்ளன.

இது குறித்து தமிழ் வளர்ச்சித்துறை முன்னாள் இயக்குநரும், தமிழ் வளர்ச்சிக் கழகத் தலைவருமான கணையாழி மா.இராசேந்திரன் கூறுகையில், "சென்னைப் பல்கலைக்கழகத்தில் இந்தி, சம்ஸ்கிருதம் உள்ளிட்ட வடமொழிகளுக்காக தமிழ்நாடு அரசே செலவிடுவது போல், பிற மாநிலங்களில் தமிழ் போதிக்க அந்தந்த மாநில அரசுகளே முன்வர வேண்டும்.

மேலும், காசி தமிழ்ச் சங்கமம் 4.0-வில் வாரணாசி பள்ளிகளில் பிரதமர் நரேந்திர மோடி யோசனையின் பேரில் குறுகிய நாட்களுக்காக தமிழ் மொழி கற்பிக்கப்பட்டது. கூடுதலாக ஏற்கெனவே உ.பி. உள்ளிட்ட மாநில உயர்கல்வி நிலையங்களில் போதிக்கப்படும் தமிழுக்கான தடையை பிரதமர் மோடி தலையிட்டு நீக்கலாம்" என்றார்.

# தூத்துக்குடியில் தாமிர உற்பத்தி தொழிற்சாலை அமைக்க அனுமதி கோரி வேதாந்தா வழக்கு: தமிழக அரசு பதிலளிக்க ஐகோர்ட் உத்தரவு

சென்னை, பிப்.13:

தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலையில், பசுமை தாமிர உற்பத்தி தொழிற்சாலையை அமைக்க அனுமதி மறுத்த உத்தரவை எதிர்த்து வேதாந்தா நிறுவனம் தாக்கல் செய்த மனுவுக்கு பதிலளிக்கும்படி, தமிழக அரசுக்கும், தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்துக்கும் சென்னை ஐகோர்ட் உத்தரவிட்டுள்ளது.



தூத்துக்குடியில் ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிர்ப்பு தெரிவித்த போராட்டத்தில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் 13 பேர் கொல்லப்பட்டனர். இதையடுத்து, நீர், நிலம், காற்று மாசு ஏற்படுத்துவதாக கூறி, தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலையை மூட, 2018 ம் ஆண்டு தமிழக அரசு உத்தரவிட்டது. இந்த உத்தரவை சென்னை ஐகோர்ட்டும், சுப்ரீம் கோர்ட்டும் உறுதி செய்துள்ளன. இந்நிலையில், ஸ்டெர்லைட் ஆலையில், பசுமைத் தாமிர உற்பத்தி தொழிற்சாலை அமைக்க அனுமதி கோரி, தமிழக அரசுக்கு வேதாந்தா நிறுவனம், கடந்த ஜனவரி 9 ம் தேதி விண்ணப்பித்திருந்தது. பசுமை தாமிரம் குறித்த பல்வேறு ஆய்வு அறிக்கைகளை இணைத்து அளிக்கப்பட்ட இந்த விண்ணப்பத்தை நிராகரித்து, கடந்த ஜனவரி 27 ம் தேதி அரசு உத்தரவிட்டது.

இந்த உத்தரவை ரத்து செய்து, நீதிமன்ற கண்காணிப்பில் தமிழக மாசு கட்டுப்பாட்டு வாரியம், மத்திய சுற்றுச்சூழல் துறை, மத்திய மாசு கட்டுப்பாட்டு வாரியம், மத்திய சுரங்கத் துறை அதிகாரிகள், நிபுணர்கள் அடங்கிய பன்னோக்கு நிபுணர் குழுவை அமைத்து, பசுமைத் தாமிர உற்பத்தி ஆலை அமைப்பது குறித்து விரிவாக ஆய்வு செய்து அறிக்கை அளிக்க உத்தரவிடக் கோரி, வேதாந்தா நிறுவனம் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளது.

தமிழக அரசுத் தரப்பில் ஆஜரான கூடுதல் தலைமை வழக்கறிஞர் ஜெ.ரவீந்திரன், ஏற்கனவே மூடப்பட்ட ஸ்டெர்லைட் ஆலையை புதுப்பிக்கும் வகையில் இத்திட்டத்தை முன்வைத்துள்ளனர். இதுசம்பந்தமாக அரசின் கருத்தை அறிந்து தான் பதிலளிக்க முடியும் என கூடுதல் தலைமை வழக்கறிஞர் தெரிவித்தார்.

இதையடுத்து, வேதாந்தா மனுவுக்கு பதில்மனு தாக்கல் செய்யும்படி, தமிழக அரசுக்கும், தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்துக்கும் உத்தரவிட்ட நீதிபதிகள், பசுமை தாமிர ஆலை அமைப்பது தொடர்பாக மத்திய சுற்றுச்சூழல் துறை, கனிமவளத்துறை மற்றும் மத்திய மாசு கட்டுப்பாட்டு வாரிய நிபுணர்கள் குழுவை அமைப்பது குறித்தும் விளக்கமளிக்க வேண்டும் எனவும் உத்தரவிட்டுள்ளனர்.

இந்த வழக்கின் விசாரணையை பிப்ரவரி 26ம் தேதிக்கு நீதிபதிகள் தள்ளிவைத்துள்ளனர்.

# வணிகச் செய்திகள்

## பரோடா வங்கியில் கார் கடனுக்கான வட்டி 7.60%ஆக குறைந்தது

சென்னை, பிப்.13:

புதிய கார் வாங்கும்போது, ஆண்டுக்கு 7.60%ல் தொடங்கும் புதிய விகிதம் கிடைக்கிறது. மேலும் இது கடன் வாங்குபவரின் கடன் தகுதி அடிப்படையில் வழங்கப்படுகிறது. கூடுதலாக, வங்கி தனிப்பட்ட கடன் வாங்குபவர்களுக்கு மாறும் விகித கார் கடன்களில் முன்கூட்டியே திருப்பி செலுத்துதல்/பகுதி மட்டும் -செலுத்துதல் கட்டணங்களையும் வழங்குகிறது.

மேலும், பரோடா கார் கடன்களுக்கான வட்டி - நிலையான மற்றும் மாறும் வட்டியில் கடன்கள் இரண்டும் - தினசரி குறைப்பு இருப்பு முறையில் கணக்கிடப்படுகிறது. இது கடன் வாங்குபவர்களுக்கு இன்னும் மலிவு விலையில் கிடைக்கிறது. வாடிக்கையாளர்கள் 84 மாதங்கள் வரை நீட்டிக்கப்பட்ட திருப்பிச் செலுத்தும் காலத்திலிருந்தும் பயனடையலாம், இது மேம்பட்ட நிதி நெகிழ்வுத்தன்மையை வழங்குகிறது. சஞ்சய் வி. முதலியார் மேலும் பேசுகையில், "கார் கடன் வட்டி விகிதங்களைக் குறைப்பது இந்திறுவனத்தை சந்தையில் மிகவும் போட்டித்தன்மை வாய்ந்த நிறுவனங்களில் ஒன்றாக ஆக்குகிறது. மேலும் வாடிக்கையாளர்களுக்கு மலிவு மற்றும் அணுகக்கூடிய வட்டி விகிதத்தில் கடனை வழங்குவதில் எங்கள் தொடர்ச்சியான கவனம் பிரதிபலிக்கிறது" என்றார்.

கார் வாங்குபவர்களின் வளர்ந்து வரும் ஆர்வத்தை ஆதரிக்க வாடிக்கையாளர்கள் மையமாகக் கொண்ட, டிஜிட்டல் முறையில் செயல்படுத்தப்பட்ட நிதி தீர்வுகளை வழங்க வங்கி உறுதிபூண்டுள்ளது" என்றும் அவர் தெரிவித்தார்.

# காங்கிரஸ் எம்.பி.க்கள் தாக்கல் செய்த நம்பிக்கையில்லா தீர்மானத்தில் பிழைகள்: சரிசெய்து வழங்க ஓம் பிர்லா அறிவுரை

சென்னை, பிப்.13:

காங்கிரஸ் கொண்டு வந்துள்ள நம்பிக்கையில்லா தீர்மானம் தற்போதைய முதல்கட்ட அமர்வில் விவாதத்துக்கு வர வாய்ப்பில்லை எனத் தெரிகின்றது. மார்ச் மாதம் தொடங்கவுள்ள பட்ஜெட் தொடரின் இரண்டாம் கட்ட அமர்விலேதான் நம்பிக்கையில்லா தீர்மானம் விவாதத்துக்கு பட்டியலிடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதனிடையே செய்தியாளர்களிடம் மத்திய அமைச்சர் கிரண் ரிஜிஜு பேசுகையில், சபாநாயகர் அறைக்குள் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த 20 முதல் 25 எம்.பி.க்கள் நுழைந்து, அவரிடம் முறையற்றவாறு நடந்து கொண்டனர். நானும் அங்குதான் இருந்தேன். பிரியங்கா காந்தி, கே.சி. வேணுகோபால் உள்ளிட்ட மூத்த காங்கிரஸ் தலைவர்களும் இருந்தனர்.

சபாநாயகர் மிகவும் மென்மையான மனிதர். இல்லையெனில், கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கும். தான் பேசுவதற்கு எவருடைய அனுமதியும் தேவையில்லை என்று ராகுல் காந்தி கூறினார். யாருடைய அனுமதியும் இல்லாமல், தன்னுடைய விருப்பம்போல் பேசுவேன் என்றும் ராகுல் கூறினார். ஆனால் தலைவர் அனுமதியின்றி, அவையில் உறுப்பினர்கள் எவரும் பேச முடியாது. பிரதமர் கூட அனுமதியுடன் மட்டுமே பேச முடியும். அனைவரும் அனுமதியுடன்தான் பேசுகிறார்கள். ராகுல் காந்திக்கு என்னால் பாடமெடுக்க முடியாது. அவர் எந்த உலகில் வாழ்கிறார் என்பது புரியவில்லை.

அவர் எந்தக் கொள்கைகளால் இயங்குகிறார்? நாடாளுமன்றம் இப்படி செயல்பட முடியாது என்று அவருக்கு காங்கிரஸின் மூத்த உறுப்பினர்கள் விளக்க வேண்டும் என்று தெரிவித்தார்.

மக்களவையில் பட்ஜெட் கூட்டத் தொடரின்போது, கேள்வி நேரத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இன்றும் அமளியில் ஈடுபட்டனர்.

மேலும், எங்களுக்கு நீதி வேண்டும் என்ற முழக்கத்துடன் அவையைவிட்டு வெளிநடப்பு செய்தனர்.

பெண் எம்.பி.க்கள் குறித்து கருத்து தெரிவித்ததால் ஓம் பிர்லாவுக்கு எதிர்க்கட்சி தரப்பில் கண்டனங்கள் எழுந்தன.

இந்த நிலையில் ஓம்பிர்லாவுக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மான நோட்டீஸை காங்கிரஸ் கட்சியினர் மக்களவை செயலகத்தில் நேற்று வழங்கினர்.

இந்த நோட்டீஸில் பிப்ரவரி 2026 என்பதற்கு பதிலாக நான்கு இடங்களில் பிப்ரவரி 2025 என்று குறிப்பிடப்பட்டிருப்பதாகவும், விதிகளின்படி, இந்த நோட்டீஸை மக்களவை செயலகம் நிராகரிக்கக் கூடும் என்றும் தகவல்கள் வெளியாகின.

இருப்பினும், நோட்டீஸை நிராகரிக்க வேண்டாம் என்றும் பிழையைத் திருத்தம் செய்து வாங்கி விதிகளின்படி அடுத்தக்கட்ட நடவடிக்கையைத் தொடருமாறும் மக்களவை செயலகத்துக்கு ஓம் பிர்லா அறிவுறுத்தியுள்ளார்.

# டிஜிட்டல் மயமாகும் சிபிஎஸ்இ பிளஸ் 2 விடைத்தாள் திருத்தும் பணி!

புதுடெல்லி, பிப்.13:

கல்வித்துறையில் மிகப்பெரிய டிஜிட்டல் புரட்சியாக சிபிஎஸ்இ பள்ளிகளில் பிளஸ் 2 விடைத்தாள் திருத்தும் பணியில் டிஜிட்டல் முறையை அறிமுகப்படுத்தியுள்ளது மத்திய இடைநிலைக் கல்வி வாரியம்(சிபிஎஸ்இ).

இந்த புதிய நடைமுறையால், திருத்தப் பிழைகள் குறைவதோடு ஆசிரியர்களுக்கு அலைச்சல் இருக்காது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. நாடு முழுவதும் சிபிஎஸ்இ பள்ளிகளில் படிக்கும் பிளஸ் 2 மாணவர்களுக்கு பிப்.17 ஆம் தேதி முதல் பொதுத்தேர்வு நடைபெற உள்ளது.

இந்த நிலையில், சிபிஎஸ்இ பிளஸ் 2 விடைத்தாள் திருத்தும் பணியில் டிஜிட்டல் முறையை



("ஆன்-ஸ்கிரீன் மார்க்கிங்") அறிமுகப்படுத்தியுள்ளது. இதன் கீழ் விடைத்தாள்கள் கணினியில் டிஜிட்டல் முறையில் மதிப்பீடு செய்யப்படும் என மத்திய இடைநிலைக் கல்வி வாரியம் தெரிவித்துள்ளது.

இது குறித்து மத்திய இடைநிலைக் கல்வி வாரியம் தேர்வுக் கட்டுப்பாட்டாளர் சன்யம் பரத்வாஜ் திங்கள்கிழமை வெளியிட்டுள்ள சுற்றறிக்கையில், 2026 ஆம் ஆண்டு பிளஸ் 2 தேர்வுக்கான விடைத்தாள்களை கணினி திரையில் பார்த்து திருத்தி மதிப்பெண் வழங்கும் ("ஆன்-ஸ்கிரீன் மார்க்கிங்") எனும் புதிய டிஜிட்டல் முறையை வசதி அறிமுகப்படுத்தவுள்ளது. அதாவது, மாணவர்களின் விடைத்தாள்கள் ஆன்லைனில் பதிவேற்றம் செய்யப்படும். அதனை ஆசிரியர்கள் கணினி திரை வாயிலாக மதிப்பீடு செய்து மதிப்பெண்களை வழங்குவார்கள். இந்த நடைமுறை 2026 பிப்ரவரி மாதத்தில் நடைபெறவுள்ள பிளஸ் 2 பொதுத்தேர்வுக்கு அமல்படுத்தப்படுகிறது. இந்த புதிய நடைமுறையால், திருத்தப் பிழைகள் குறைவதோடு ஆசிரியர்களுக்கு அலைச்சல் இருக்காது. மொத்தப் பிழைகளை நீக்குதல், விரைவான மதிப்பீட்டை செயல்படுத்துதல் மற்றும் ஆசிரியர்கள் தங்கள் பள்ளிகளிலேயே தங்கி தங்கள் வழக்கமான பணிகளைத் தொடர அனுமதித்தல் போன்றவை இதன் நோக்கம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், டிஜிட்டல் மதிப்பீட்டு முறை, தேர்வு முடிவுகள் வெளியானதற்குப் பிந்தைய மதிப்பெண் சரிபார்ப்புக்கான தேவையை நீக்கும் என்றும், அனைத்து பள்ளிகளின் ஆசிரியர்களையும் மதிப்பீட்டுச் செயல்முறையில் பங்கேற்பதற்கு அனுமதிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. விடைத்தாள் டிஜிட்டல் மதிப்பீடு செய்யும் பணியில் சிபிஎஸ்இ வாரியத்துடன் இணைக்கப்பட்ட அனைத்து பள்ளி ஆசிரியர்களும் ஈடுபடுவார்கள். இதனால் மாணவர்கள் தங்கள் செயல்திறனை மேம்படுத்த மூன்று பாடங்களில் மீண்டும் தேர்வு எழுதலாம், அதே நேரத்தில் முதல் தேர்வுகள் கட்டாயமாக இருக்கும் என கூறப்பட்டுள்ளது.

# ககன்யான் திட்டத்தை விரைவுபடுத்த வேண்டும்: குரூப் கேப்டன் சுபான்ஷு ஷுக்லா

புதுடெல்லி, பிப்.13:

பெங்களூரில் புதன்கிழமை நடைபெற்ற இந்திய அமெரிக்க விண்வெளி வர்த்தக அமைப்பின் கருத்தரங்கில் கலந்துகொள்ள வந்தபோது, "ககன்யான்' தொடர்பாக செய்தியாளர்களின் கேள்விக்குப் பதிலளித்து, "ககன்யான்' திட்டத்தின் குரூப் கேப்டன் சுபான்ஷு ஷுக்லா கூறியதாவது:

"ககன்யான்' திட்டத்தைப்போல, விண்ணுக்கு மனிதனை அனுப்பியுள்ள உலக நாடுகள் மூன்றுதான். இத்திட்டம் மிகவும் சிக்கலானது மற்றும் சவால்கள் நிறைந்தது. எனினும், துணிச்சலாக இந்தத் திட்டத்தை செயல்படுத்த இந்தியா முனைந்துள்ளது. எத்தனைக் காலம் பிடித்தாலும், முதல்நாளில் இருந்த அதே உற்சாகத்துடன் "ககன்யான்' திட்டத்தை செயல்படுத்துவதற்கான முயற்சியில் தொடர்ந்து ஈடுபட வேண்டும். அந்த உற்சாகம், விண்ணுக்கு மனிதனை அனுப்பும் அந்த நாளிலும் இருக்கும். "ககன்யான்' போன்ற அதிநுட்பமான திட்டங்களில் சிக்கல்களும், சவால்களும் இயல்பானது என்பதை நான் அறிவேன். இந்த திட்டத்தை செயல்படுத்தும்போது பல தடைகளை எதிர்கொள்ள நேரிடும் என்பதையும் அறிவேன். அதையெல்லாம் கடந்து, "ககன்யான்' திட்டத்தை விரைவுபடுத்த வேண்டும். விண்வெளி ஆராய்ச்சியில் பன்னாட்டு கூட்டிணைவுகள் எவ்வளவு பயனுள்ளதாக இருக்கும் என்பதற்கு நான் பங்கேற்ற "ஆக்ஸிம்' திட்டம் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

இது, மற்ற எல்லா துறைகளுக்கும் சிறந்த வழிகாட்டியாக விளங்கும். இந்திய - அமெரிக்கா கூட்டு முயற்சிகள், எதிர்கால கூட்டிணைவுகளுக்கான வாசல்களை திறந்துவிடுகின்றன. காலத்திற்கேற்ப மேற்கொள்ளப்பட்டுவரும் விண்வெளி ஆராய்ச்சி மற்றும் அறிவியல் ஆராய்ச்சிகளில் பெருகிவரும் முதலீடுகளுக்கு இடையே, இந்தியாவின் ஆராய்ச்சித் திட்டங்களுக்கு மத்திய அரசின் ஆதரவு இருப்பது வரவேற்கத்தக்கது. இதுபோன்ற ஆதரவு எதிர்காலத்திலும் தொடரும் என்றார்.

# கல்விக்காக வெளிநாடு செல்லும் மாணவர்கள் எண்ணிக்கை வெகுவாக சரிவு - மத்திய அரசு

புதுடெல்லி, பிப்.13:

கல்விக்காக வெளிநாடு செல்லும் இந்திய மாணவர்களின் எண்ணிக்கை வெகுவாக குறைந்து விட்டதாக மத்திய கல்வித்துறை இணையமைச்சர் சுகந்தா மஜூம்தார் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து மாநிலங்களவையில் எழுப்பப்பட்ட கேள்விக்கு அவர் எழுத்துபூர்வமாக அளித்துள்ள பதிலில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

2023-ஆம் ஆண்டு முதல் 2025-ஆம் ஆண்டு வரையிலான 3 ஆண்டுகளில் வெளிநாடுகளுக்கு கல்விக் கற்க செல்லும் இந்திய மாணவர்களின் எண்ணிக்கை வெகுவாக சரிந்துவிட்டது. அதாவது, 2023-ஆம் ஆண்டில் இந்தியாவில் இருந்து 9.08 லட்சம் பேர் கல்வி கற்க வெளிநாடுகளுக்குச் சென்றிருந்தனர். 2024-ஆம் ஆண்டில் 7.7 லட்சம் பேர் சென்றிருந்தனர். இந்த எண்ணிக்கை 2025-ஆம் ஆண்டில் 6.26 லட்சமாக குறைந்துள்ளது.

தேசிய கல்விக் கொள்கை 2020-இன் கீழ் நாட்டில் உயர் கல்வித் தரத்தை மேம்படுத்த மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இதில் உட்கட்டமைப்பை மேம்படுத்துவது, ஆய்வு, புத்தாக்கம் கண்டுபிடித்தல், டிஜிட்டல் கல்வி முயற்சிகளை ஊக்குவித்தல் ஆகியவையும் அடங்கும்.

இந்தியாவிலேயே உலகத் தரத்திலான கல்வியை அளிக்கும் நோக்கில், நமது நாட்டில் கல்வி வளாகங்களை திறக்க வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி தரப்பட்டுள்ளது. இதுவரை 14 வெளிநாட்டு கல்வி நிறுவனங்களுக்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. குஜராத்தின் கிப்ட் சிட்டியில் 5 வெளிநாட்டு பல்கலைக்கழகங்கள் செயல்பட ஒப்புதல் தரப்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

# இந்தியாவின் முதல் 'மெல்லிசை சாலை' மும்பையில் திறப்பு; வாகன ஓட்டிகள் பாடல் கேட்டு உற்சாகம்

மும்பை, பிப்.13:

மராட்டிய மாநிலம் மும்பை நரிமண் பாயிண்ட்டில் இருந்து ஒர்லிக்கு வடக்கு நோக்கி செல்லும் கடற்கரை சாலை யில் ஒரு புதிய முயற்சியாக இந்தியாவிலேயே முதல் முறையாக 'மெல்லிசை சாலை' அமைக்கப்பட்டுள்ளது. இந்த இசை சாலை உலகிலேயே 5-வது சாலையாக விளங்குகிறது.



இசை சாலையை நேற்று முதல்-மந்திரி தேவேந்திர பட்னாவிஸ், துணை முதல்-மந்திரி ஏக்நாத் ஷிண்டே ஆகியோர் திறந்து வைத்தனர். இந்த நிகழ்ச்சியில் ஹங்கேரி தூதர் பரன் ஜாரி, சிவ சேனா முன்னாள் எம்.பி. ராகுல் சௌலே,மாநகராட்சி கூடுதல் கமிஷனர் அவினாஷ் தக்னே உள்பட பலர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்ச்சியில் முதல்-மந்திரி பட்னாவிஸ் பேசும்போது, "இந்த கடற்கரை சாலையில் உருவாக்கப்பட்ட இசை சாலை வாகன ஓட்டிகளுக்கு மகிழ்ச்சியான அனுபவத்தை வழங்கும். ஹங்கேரிய தொழில்நுட்பத்தை அடிப்படையாகக்கொண்ட இந்த புதுமையான சாலை, எதிர்காலத்தில் மேலும் செயல்படுத்தப்படும்" என்று அவர் கூறினார்.

இது குறித்து மும்பை மாநகராட்சி வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறப்பட்டு உள்ளதாவது:- ஒர்லியில் இருந்து நிலத்தடி சுரங்கப்பாதையை விட்டு வெளியேறிய பிறகு நரிமண் பாயிண்ட் வரை சாலையில் 500 மீட்டர் நீளத்திற்கு இசை ஒலிக்கும் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன.

வாகனங்கள் மணிக்கு 70 முதல் 80 கி.மீ. வேகத்தில் பயணிக்கும்போது 'ஜெய் ஹோ' பாடலை வாகனத்தின் உள்ளே கேட்கலாம். இந்த முயற்சி மும்பைவாசிகளின் மனதில் தேச பக்தியை எழுப்புகிறது. சாலை மேற்பரப்பில் குறிப்பிட்ட தூரத்தில் ரம்பிள் பட்டைகள் வைக்கப்பட்டுள்ளது. வாகனங்கள் இந்த பட்டைகளை கடந்து செல்லும்போது வாகன டயர்களுக்கும். சாலை மேற்பரப்பிற்கும் இடையிலான உராய்வு காரணமாக 'ஜெய் ஹோ' என்ற இசை ஒலி உருவாகிறது. வாகன ஓட்டிகள் மெல்லிசை சாலையில் குறிப்பிட்ட வேகத்தில் சென்றபோது ஜெய்ஹோ பாடல் கேட்டு உற்சாகம் அடைந்தனர்.

# தொழிலாளர்கள், விவசாயிகளுடன் நிற்கிறேன்! வேலைநிறுத்தத்துக்கு ராகுல் ஆதரவு!

புதுடெல்லி, பிப்.13:

மத்திய அரசை கண்டித்து நாடு முழுவதும் பல்வேறு தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு நடத்தும் வேலைநிறுத்தப் போராட்டத்துக்கு எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி ஆதரவு தெரிவித்துள்ளார்.

4 தொழிலாளர் சட்டங்களை ரத்து செய்ய வேண்டும்; வரைவு விதை மசோதா, மின்சார சட்டத் திருத்த மசோதா, அணுமின் உற்பத்தியில் தனியாரை அனுமதிக்கும் மசோதாவை திரும்பப் பெற வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி தொழிற்சங்கங்களும், விவசாயிகள் விரோத கொள்கைகளை கைவிடக் கோரி விவசாயிகளும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இந்த நிலையில், தொழிலாளர்கள், விவசாயிகளின் வேலைநிறுத்த போராட்டத்துக்கு ஆதரவு அளிப்பதாக ராகுல் காந்தி எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

# செறிவூட்டப்பட்ட அரிசி திட்டத்தில் பிரச்னை இல்லை: மத்திய அரசு தகவல்

புதுடெல்லி, பிப்.13:

செறிவூட்டப்பட்ட அரிசி திட்டத்தில் எந்தப் பிரச்னையும் இல்லை என்று நாடாளுமன்றத்தில் மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இரும்புச் சத்து, ஃபோலிக் அமிலம் மற்றும் வைட்டமின் பி12 ஒன்றுசேர்க்கப்பட்ட அரிசி மாவில் செய்யப்படும் செறிவூட்டப்பட்ட அரிசி தானியங்கள் மூலம், 1-க்கு 100 என்ற விகிதத்தில் வழக்கமான அரிசியுடன் செறிவூட்டப்பட்ட அரிசி கலக்கப்படுகிறது.

இந்நிலையில், ரத்த சோகை போன்ற நுண்ணூட்டச்சத்து குறைபாடுகளை களைவதற்கு பொது விநியோகத் திட்டம் மூலம் செறிவூட்டப்பட்ட அரிசி விநியோகத்தை மத்திய அரசு செயல்படுத்தி வருகிறது.

தேசிய உணவு பாதுகாப்புச் சட்டம், பிரதமரின் போஷான் திட்டம் போன்ற திட்டங்களின் கீழ், நாடு முழுவதும் படிப்படியாக அந்த அரிசி விநியோகத் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

இந்தத் திட்டம் தொடர்பாக மக்களவையில் எழுப்பப்பட்ட கேள்விக்கு மத்திய உணவு பாதுகாப்புத் துறை இணையமைச்சர் நிமுபென் ஜயந்திபாய் பம்பானியா புதன்கிழமை எழுத்துபூர்வமாக அளித்த பதில்: செறிவூட்டப்பட்ட அரிசி திட்டத்தில் எந்தப் பிரச்னையும் இல்லை.


செறிவூட்டப்பட்ட அரிசி, செறிவூட்டப்பட்ட அரிசி தானியம், வைட்டமின்-கனிம கலவைக்கான தரநிலைகளை இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தரநிலைகள் ஆணையம் அறிவித்துள்ளது என்றார்.

# ராணுவ அதிகாரிகள் புத்தகங்களை எழுதுவது குறித்த விதிகளை கடுமையாக்க மத்திய அரசு திட்டம்?

புதுடெல்லி, பிப்.13:

சீன ராணுவ ஆக்கிரமிப்பு குறித்து முன்னாள் ராணுவ தளபதி எம்.எம்.நர வனே தனது சுயசரிதை புத்தகத்தில் எழுதி இருப்பதாக மக்களவை எதிர்க் கட்சிதலைவர் ராகுல்காந்தி மக்களவையில் சர்ச்சையை எழுப்பினார். ஆனால் அந்த புத்தகம் இன்னும் வெளியிடப்படவில்லை என்று மத்திய அரசு மறுத்தது.

இதற்கிடையே, புத்தகத்தின் கையெழுத்து பிரதிகளை சட்டவிரோதமாக புழக்கத்தில் விட்டதாக டெல்லி போலீசார் ஒரு வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. இதனையடுத்து முன்னாள் ராணுவ தளபதி நரவனே எழுதிய 'போர் ஸ்டார்ஸ் ஆப் டெஸ் டினி' புத்தகத்தின் பிரத்யேக பதிப்புரிமையை நாங்கள் பெற்றுள்ளோம். அந்த புத்தகம் இன்னும் பிரசுரிக்கப்படவில்லை; அச்சு வடிவிலோ, டிஜிட்டல் வடிவிலோ எந்த பிரதியும் பொதுமக்களுக்கு வெளியிடப்படவில்லை என்று பெங்குவின் ரேண்டம் ஹவுஸ்





இண்டியா புத்தக பதிப்பகம் திட்டவட்டமாக தெரிவித்தது.

எனவே, அச்சு வடிவிலோ, டிஜிட்டல் வடிவிலோ புத்தகத்தை முழுமையாகவோ, பகுதி அளவிலோ வெளியிட்டால், அது பதிப்பு ரிமையை மீறுவதாக அமையும். அத்தகைய நபர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும். அந்த பிரதிகள் பற்றி முதல் செய்யப்படும் என்று பெங்குவின் ரேண்டம் தெரிவித்தது. இந்த நிலையில், ஓய்வுபெற்ற மற்றும் பணியில் இருக்கும் ராணுவ அதிகாரிகள் புத்தகங்கள் எழுதுவது குறித்த விதிகளை கடுமையாக்க மத்திய அரசு புதிய விதிமுறைகளை உருவாக்கும் பணியில் ஈடுபட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

முன்னாள் ராணுவத் தளபதி நரவணேவின் சுயசரிதை புத்தகம் தொடர்பான சர்ச்சையைத் தொடர்ந்து, தற்போதுள்ள சேவை விதிகள் மற்றும் அதிகாரப்பூர்வ ரகசியங்கள் சட்டம் ஆகியவை உள்ளடக்கிய புதிய விதிகளை அரசு உருவாக்கி வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.

# பட்ஜெட் தாக்கல் தேதி விரைவில் முடிவு செய்யப்படும் - கர்நாடக முதல்வர் சித்தராமையா

பெங்களூரு, பிப்.13:

பெங்களூரில் புதன்கிழமை பட்ஜெட் தொடர்பாக பல்வேறு துறைகளின் அமைச்சர்கள், அதிகாரிகளுடன் கலந்தாலோசிப்பதற்கு முன்னதாக செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: முதல்வர் மாற்றம் தவிர வேறு எந்த கேள்வியையும் கேட்கமாட்டீர்களா? இந்த விவகாரத்தை தவிர வேறு எதையும் கேட்கமாட்டேன் என்கிறீர்கள். இந்த கேள்வியை கேட்க ஆரம்பித்து மூன்று மாதங்கள் கடந்துவிட்டன. இந்த கேள்வியை மீண்டும் என்னிடம் கேட்காதீர்கள். முதல்வர் மாற்றம் தொடர்பான விவகாரத்தை கட்சி மேலிடம் அறிந்துள்ளது. இதுதொடர்பாக கட்சி மேலிடம் முடிவுசெய்யும். அதற்கு நான் கட்டுப்படுவேன். இதையே எத்தனை முறை கூறுவது? நானோ (சித்தராமையா) டி.கே. சிவகுமாரோ கட்சி மேலிடம் எடுக்கும் முடிவுக்கு கட்டுப்பட வேண்டியவர்கள். இந்த விவகாரம் தொடர்பாக முடிவு செய்ய வேண்டியது கட்சி மேலிடம்தான். இந்த விவகாரம் தவிர, கேட்பதற்கு வேறு எதுவும் ஊடகங்களிடம் இல்லையா? முதல்வர் மாற்றம் தொடர்பாக டி.கே. சிவகுமாரின் சகோதரர் டி.கே. சுரேஷ் கருத்துதெரிவித்திருந்தால், அதுபற்றி அவரிடம் கேட்பதற்கு பதிலாக என்னிடம் ஏன் கேட்கிறீர்கள்? கட்சி மேலிடத்தின் முடிவுதான் இறுதியானது. ஒருசில எம்எல்ஏக்கள் சொந்த செலவில் ஆஸ்திரேலியா, நியூசிலாந்து செல்ல திட்டமிட்டிருந்தால், அதை வேண்டாம் என்று சொல்ல முடியுமா, எம்எல்ஏக்கள், எம்எல்சிக்கள் சொந்த பணத்தில் வெளிநாடு செல்வார்கள். ஆனால், அதுபற்றி எனக்கு எதுவும் தெரியாது. சட்டப்பேரவையில் பட்ஜெட் தாக்கல் செய்யப்படும் தேதி விரைவில் முடிவு செய்யப்படும். பிப். 15-ஆம் தேதி சிவராத்திரி கொண்டாட்டம் முடிந்தபிறகு தேதியை அறிவிப்பேன் என்றார்.

# 2021-25-ல் பிரதமர் மோடியின் வெளிநாட்டுப் பயணங்களுக்கு ரூ.462 கோடி செலவு!

புதுடெல்லி, பிப்.13:

கடந்த 2021 முதல் 2025 வரையிலான காலகட்டத்தில் பிரதமர் நரேந்திர மோடி சுமார் 43+ வெளிநாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டார். அதற்காக ரூ.462.58 கோடி செலவாகி உள்ளதாக அரசு தரவுகளில் தகவல்.

இதில் அமெரிக்கா, ஐக்கிய அரபு அமீரகம், ஜப்பான் உள்ளிட்ட நாடுகளில் 4 முறை பிரதமர் மோடி பயணம் மேற்கொண்டுள்ளார். பிரான்ஸ் நாட்டுக்கு மூன்று முறை சென்றுள்ளார். பிரிட்டன், தென் ஆப்பிரிக்கா, ரஷ்யா மற்றும் பிரேசில் நாடுகளுக்கு இரண்டு முறை சென்றுள்ளார். கடந்த 7 மற்றும் 8 ஆகிய தேதிகளில்



மலேசியாவுக்கு பிரதமர் மோடி சென்று வந்தது அவரது அண்மைய வெளிநாட்டு பயணமாக உள்ளது.

கடந்த 2025-ம் ஆண்டு பிப்ரவரியில் பிரதமர் மோடி பிரான்ஸ் சென்றிருந்தார். அந்த பயணத்துக்காக ரூ.25.5 கோடி செலவாகி உள்ளது. அந்த பயணத்தின் போது ஏஐ மாநாடு, பிரான்ஸ் அதிபர் ஏற்பாடு செய்த இரவு விருந்து, பல்வேறு நிறுவனங்களின் தலைமை நிர்வாக அதிகாரிகள் பங்கேற்ற நிகழ்வு, பிரான்ஸின் மார்சேயில் தூதரகம் திறப்பு விழா நிகழ்வு உள்ளிட்டவற்றில் பங்கேற்றார். 2021-25 காலகட்டத்தில் பிரதமர் மோடி மேற்கொண்ட வெளிநாட்டு பயணங்களில் அதிக தொகை செலவிட்டது இந்த பயணத்துக்காக தான் என தகவல்.

இதற்கு அடுத்தபடியாக அதிக செலவான பயணப் பட்டியலில் கடந்த 2023-ம் ஆண்டு ஜூன் மாதம் பிரதமர் மோடி அமெரிக்கா சென்றது இடம்பெறுகிறது. அந்தப் பயணத்துக்காக ரூ.22.8 கோடி செலவிடப்பட்டுள்ளது. இந்த பயணத்தில் அப்போதைய அமெரிக்க அதிபர் உடன் பத்திரிகையாளர்களை பிரதமர் மோடி சந்தித்தார். மேலும், அமெரிக்க நாடாளுமன்ற கூட்டுக் கூட்டத்தில் பிரதமர் மோடி உரையாற்றினார். அங்கு ஏற்பாடு செய்யப்பட்ட யோகா தின விழாவிலும் பங்கேற்றார். இதே போல கடந்த 2021 செப்டம்பரில் பிரதமர் மோடியின் அமெரிக்க பயணத்துக்காக ரூ.19.6 கோடி செலவாகி உள்ளது.

2021-25 காலகட்டத்தில் பிரதமர் மோடியின் வெளிநாட்டு பயணத்துக்கு ஒட்டுமொத்தமாக செலவான ரூ.462.58 கோடியில் 16 சதவீதம் அமெரிக்க நாட்டு பயணத்துக்காக (4 முறை பயணம்) செலவாகி உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. பிரான்ஸ் மற்றும் ஜப்பான் பயணத்துக்கு தலா 9 சதவீதம் செலவாகி உள்ளது.

# சபரிமலை தங்கக் கவச முறைகேடு வழக்கு - தேவஸ்வம் வாரிய முன்னாள் தலைவர் ஜாமீனில் விடுவிப்பு

திருவனந்தபுரம், பிப்.13:

சபரிமலை ஐயப்பன் கோயில் தங்கக் கவச முறைகேடு வழக்கில் அக்கோயிலை நிர்வகிக்கும் திருவிதாங்கூர் தேவஸ்வம் வாரிய முன்னாள் தலைவர் என்.வாசு புதன்கிழமை ஜாமீனில் விடுவிக்கப்பட்டார்.

கேரள இடதுசாரி அரசின் உயர்நிலைத் தலைவர்களுடன் நெருங்கிய தொடர்புடையவராக கருதப்படும் இவர், இந்த வழக்கில் ஜாமீனில் விடுவிக்கப்பட்ட 5-ஆவது நபராவார்.

சபரிமலை ஐயப்பன் கோயில் துவார பாலகர் சிலைகள் மற்றும் கருவறைக் கதவுகளின் தங்க கவசங்கள் கடந்த 2019-இல் புதுப்பிக்கப்பட்ட பிறகு அவற்றின் எடை குறைந்ததாகப் புகார் எழுந்தது. இது குறித்து கேரள உயர்நீதிமன்ற உத்தரவின்பேரில் இரு வழக்குகளைப் பதிவு செய்து, காவல் துறையின் சிறப்புப் புலனாய்வுக் குழு (எஸ்ஐடி) விசாரணை மேற்கொண்டு வருகிறது.

# ரஷியாவில் வாட்ஸ்-ஆப் நீக்கம்! 10 கோடி பேர் அவதி! அடுத்து என்ன?

மாஸ்கோ, பிப்.13:

உள்நாட்டில் தயாரிக்கப்பட்டிருக்கும் செயலிகளை மக்கள் பயன்படுத்தவைக்கும் நோக்கில், வாட்ஸ்ஆப் மற்றும் டெலிகிராம் செயலிகளை ரஷிய அரசு நீக்கியிருக்கிறது.

ரஷியாவில், இணையதளத்தில் செயலிகளை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர அந்நாட்டு அரசு எடுத்திருக்கும் மிக முக்கிய நடவடிக்கையால் கிட்டத்தட்ட 100 கோடி பேர் அவதிக்குள்ளாகியிருக்கிறார்கள் என்று கூறப்படுகிறது.



வாட்ஸ்ஆப் நிறுவனம் தன்னுடைய எக்ஸ் தளத்தில், இன்று ரஷிய அரசு, அந்நாட்டில் உள்ள அனைத்து செல்போன்களிலிலும் வாட்ஸ்ஆப்பை நீக்கியிருக்கிறது. அந்நாட்டு மக்கள் உள்நாட்டுத் தயாரிப்பு செயலிகளைப் பயன்படுத்த அழுத்தம் கொடுக்கும் வகையில் இந்த நடவடிக்கைமேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும், இதனால் 10 கோடி பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த நடவடிக்கையால் ரஷிய மக்களின் பாதுகாப்பில் குறைபாடுக்கு வழிவகுக்கும் என்று தெரிவித்துள்ளது.

பயனர்கள் எங்களுடன் தொடர்பில் இருக்க அனைத்து நடவடிக்கைளையும் மேற்கொள்வோம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து டெலிகிராம் நிறுவனம் தெரிவிக்கையில் இது ஒரு நாட்டு அரசின் நடவடிக்கை, நிறுவனத்தின் கொள்கைகளுக்குள் இது வரவில்லை. எங்கள் நிறுவனத்தின் கொள்கை மக்களின் சுதந்திரம், தனியுரிமை. இதில் அழுத்தத்துக்கு இடமில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2022ஆம் ஆண்டு உக்ரைன் மீதான தாக்குதலின்போது, வெளிநாட்டு தொழில்நுட்ப சேவை நிறுவனங்களுக்கும், ரஷிய அரசுக்கும் இடையே ஏற்பட்ட மோதல் போக்கு காரணமாக, ரஷிய அரசு, உள்நாட்டில் தயாரிக்கப்படும் செயலிகளுக்கு முக்கியத்துவம் அளித்து, மேக்ஸ் என்ற செயலி உருவாக்கப்பட்டது. ஆனால், இது மக்களை கண்காணிக்க உருவாக்கப்பட்டதாக கடும் விமர்சனம் எழுந்துள்ளது.

## சீனாவில் களைகட்டும் புத்தாண்டு கொண்டாட்டம்... திடீரென கடைவீதிக்கு வந்த அதிபர் ஜின்பிங்



பீஜிங், பிப்.13:

சீன புத்தாண்டு வரும் 17-ந்தேதி கொண்டாடப்பட உள்ளது. இதனை கொண்டாட அந்நாட்டு மக்கள் உற்சாகத்துடன் தயாராகி வருகின்றனர். இந்த புத்தாண்டு நெருப்பு குதிரையின் ஆண்டாக அறியப்படுகிறது. இது ஆற்றல், சுதந்திரம், வேகம் மற்றும் லட்சியத்தை குறிப்பதாக சீன மக்கள் நம்புகின்றனர்.

இந்த நிலையில் சீன அதிபர் ஜின்பிங், பீஜிங்கின் டவுன்டவுண் பகுதியில் உள்ள வணிக வளாகத்திற்கு திடீரென வருகை தந்தார். அவரைக் கண்டதும் பொதுமக்கள் மற்றும் வியாபாரிகள் உற்சாகமடைந்தனர். அங்குள்ள கடைவீதிகளில் நடந்து சென்ற அவர், வியாபாரிகளுடன் கலந்துரையாடினார். அதனை தொடர்ந்து 600 ஆண்டுகள் பழமையான சீனாவின் வரலாற்றுச் சின்னமான லோங்புசி பகுதியை ஜின்பிங் சுற்றிப்பார்த்தார்.

## வங்கதேசத்தில் விறுவிறுப்பாக நடைபெறும் வாக்குப்பதிவு!

டாக்கா, பிப்.13:

உலகின் எட்டாவது அதிக மக்கள் தொகை கொண்ட அண்டை நாடான வங்கதேசத்தில் 13-ஆவது நாடாளுமன்றத் தேர்தலின் வாக்குப்பதிவு வியாழக்கிழமை (பிப். 12) காலை 7.30 மணிக்கு தொடங்கி விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.

முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனாவின் 15 ஆண்டுக்கால ஆட்சி முடிவுக்கு வந்து, முகமது யூனஸ் தலைமையிலான இடைக்கால அரசு பொறுப்பேற்ற 18 மாதங்களுக்குப் பிறகு நடைபெற்று வரும் இந்த தேர்தல் மூலம் வங்கதேசம் அதன் அரசியல் வரலாற்றில் ஒரு முக்கியமான அத்தியாயத்தில் நுழைய உள்ளது. 51 கட்சிகள் அதிகாரத்திற்காக களத்தில் உள்ளன. இந்தத் தேர்தல் ஒரு திருப்புமுனையாகக் கருதப்படுகிறது.

இந்த தேர்தலில் முன்னாள் பிரதமர் கலிதா ஜியாவின் மகன் தாரிக் ரஹ்மான் தலைமையிலான வங்கதேச தேசியவாதக் கட்சி (பிஎன்பி) மற்றும் அதன் முன்னாள் கூட்டாளியான ஜமாத்-ஏ-இஸ்லாமி ஆகிய கட்சிகளுக்கு இடையே நேரடிப் போட்டி நிலவுகிறது. மேலும் சில கட்சிகள் களத்தில் உள்ள நிலையில், அவாமி லீக் கட்சிக்கு இத்தேர்தலில் போட்டியிட தடை விதிக்கப்பட்டுள்ளது.

350 தொகுதிகள் கொண்ட வங்கதேச நாடாளுமன்றத்துக்கு 300 தொகுதிகளுக்குத் தேர்தல் அறிவிக்கப்பட்டது. ஒரு தொகுதியில் வேட்பாளரின் மறைவால் தேர்தல் ரத்தானதையடுத்து, மீதமுள்ள 299 தொகுதிகளுக்கு தேர்தல் நடைபெறுகிறது. இதில் 50 அரசியல் கட்சிகளைச் சேர்ந்த 1,755 வேட்பாளர்கள் மற்றும் 273 சுயேச்சைகள் களத்தில் உள்ளனர்.

இத்தேர்தலில் 3.58 சதவீத முதல்முறை வாக்காளர்கள் உள்பட மொத்தம் 12.77 கோடி பேர் வாக்களிக்கத் தகுதிப் பெற்றுள்ளனர். வெளிநாடுகளில் வசிக்கும் 8 லட்சம் வங்கதேசத்தினர், தபால் வாக்கு மூலம் முதல்முறையாக வாக்களிக்கப் பதிவு செய்துள்ளனர்.

நாடு முழுவதும் உள்ள 42,659 வாக்குச் சாவடிகளில், 24,000 இடங்கள் பதற்றமானவை எனக் கண்டறியப்பட்டுள்ளன.

வன்முறை ஏதுமின்றி அமைதியாகத் தேர்தலை நடத்தி முடிக்க, முன்னெப்போதும் இல்லாத வகையில் சுமார் 9.58 லட்சம் படையினர் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். பாதுகாப்புக்காக 90 சதவீத சாவடிகளில் சிசிடிவி கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன.

விறுவிறுப்பான வாக்குப்பதிவு

ஊழல், பணவீக்கம், வேலைவாய்ப்பு மற்றும் பொருளாதார மேம்பாடு ஆகியவை தேர்தலை தீர்மானிக்கும் முக்கிய பிரச்னைகளாக உள்ள நிலையில், வாக்குப்பதிவு வியாழக்கிழமை காலை 7.30 மணிக்கு தொடங்கி விறுவிறுப்பாக நடைபெற்று நடைபெற்று வருகிறது. தலைநகர் டாக்காவில் பல வாக்குச்சாவடிகளில் வாக்காளர்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து அமைதியாக தங்களது கடைமையை செலுத்தி வருகின்றனர்.

## கனடா பள்ளி துப்பாக்கிச் சூட்டில் ஈடுபட்ட திருநங்கை!! திடுக்கிடும் காரணங்கள்!

வான்கூவர், பிப்.13:

கனடாவின் வடகிழக்கு பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தில் பள்ளி மற்றும் குடியிருப்பில் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதில், தாக்குதல் நடத்திய திருநங்கை உள்பட 10 பேர் பலியாகினர். 25-க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.



தாக்குதலில் ஈடுபட்டது ஜெஸ்ஸி வான் ரூட்செலார் என்பதும், இவர் பள்ளியை பாதியில் நிறுத்திய திருநங்கை என்பதும், தான் முன்பு படித்த பள்ளியில் துப்பாக்கிச் சூடு நடத்துவதற்கு முன்பே, வீட்டில் தன்னுடைய தாய் மற்றும் சகோதரனையும் அவர் சுட்டுக்கொன்றிருக்கிறார் என்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

வான்கூவரில் இருந்து சுமார் 1,000 கி.மீ. தொலைவில் உள்ள மலைப்பாங்கான டம்ப்ளர் ரிட்ஜ் நகரில் உள்ள மேல்நிலைப் பள்ளியில் இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. சுமார் 175 மாணவர்கள் பயிலும் இப்பள்ளிக்குள் புகுந்த துப்பாக்கி ஏந்திய பெண், கண்மூடித்தனமாக துப்பாக்கிச் சூடு நடத்தியதில் 7 பேர் பலியாகினர். ஜெஸ்ஸியும் தன்னைத் தானே சுட்டுத் தற்கொலை செய்து கொண்டார்.

இந்தப் பள்ளிக்கு அருகேயுள்ள ஒரு குடியிருப்பில் அவரது தாயும், சகோதரனும் சடலமாகக் கண்டெடுக்கப்பட்டனர்.

இவரது குடும்பப் பின்னணியை காவல்துறையினர் ஆராய்ந்து வருகிறார்கள். அவரது பாட்டி சமூக வலைத்தளத்தில் 2021ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் வெளியிட்ட புகைப்படங்களில், தன்னுடைய பேரன் ஜெஸ்ஸிக்கு 14வது பிறந்தநாள் வாழ்த்துகள் என்று பதிவிட்டு பலபுகைப்படங்களையும் இணைத்துள்ளார். அதில் ஒரு புகைப்படத்தில் அவர் கையில் துப்பாக்கியை ஏந்தி குறிபார்க்கும் காட்சியும் இடம்பெற்றுள்ளது.

இதன் அடிப்படையில், ஆணாகப் பிறந்து பெண்ணாக மாறியவர்தான் ஜெஸ்ஸி என்பது தெரிய வந்துள்ளது. இவருக்கு மனநல பிரச்னை இருந்ததும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

## கம்போடியா டிஜிட்டல் மோசடி அலுவலகத்தில் சிபிஐ பேனர், காந்தி, அம்பேத்கர் படங்கள்!

கம்போடியா, பிப்.13:

கம்போடியாவில் டிஜிட்டல் மோசடி கும்பல் பயன்படுத்தி விட்டுச் சென்ற அலுவலகத்துக்குள் சிபிஐ போலி பேனர், மகாத்மா காந்தி, பி.ஆர். அம்பேத்கர் புகைப்படங்கள், இந்திய தேசிய கொடி இருந்தது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.



கம்போடியாவின் டிஜிட்டல் மோசடி கும்பல் பயன்படுத்தி வந்த அலுவலகத்தின் காட்சிகள் வெளியாகியிருக்கிறது. அதிலிருந்துதான் இந்த தகவல் தெரிய வந்துள்ளது. இந்தியாவில் நடக்கும் ஏராளமான டிஜிட்டல் மோசடிகளுக்குக் காரணமாக கம்போடியாவிலிருந்து இயங்கும் மோசடிக் கும்பல்கள்தான் காரணம் என்று வலியுறுத்தப்பட்ட நிலையில், கடந்த இரண்டு வாரங்களாக, கம்போடியாவில் இதுபோன்ற மோசடி அலுவலகங்களை அந்நாட்டு அரசு மூடி வருகிறது.

இது குறித்து பேசிய கம்போடியா அமைச்சர் சே சினாரித், 190 இடங்களில் இயங்கி வந்த மோசடி அலுவலகங்களுக்கு சீல் வைக்கப்பட்டுள்ளது என்றார்.

அதுபோன்று சீல் வைக்கப்பட்ட அலுவலகங்களின் விடியோக்களை ராய்ட்டர்ஸ் வெளியிட்டுள்ளது. அதில், சிபிஐ அலுவலக பேனர், மகாத்மா காந்தி மற்றும் அம்பேத்கரின் புகைப்படங்களும் இடம்பெற்றிருப்பது வெளியாகியிருக்கிறது.

சீனாவில் பிறந்ததாகக் கூறப்படும் மோசடி மன்னன் பற்றி, அமெரிக்கா குற்றஞ்சாட்டியிருந்த நிலையில், கடந்த ஆண்டு இறுதியில் இந்த நடவடிக்கை தொடங்கியதாகவும், சீனா அவரை நாடு கடத்தியதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

சர்வதேச அளவில் நடத்தப்படும் டிஜிட்டல் மோசடிகள் தொடரும் நிலையில், இதுவரை குற்றவியல் வலையமைப்புகளுக்கு எதிராக ஒன்று திரண்டு பல நாடுகளின் கூட்டு சர்வதேச நடவடிக்கைகளில் இது முக்கியத்துவம் பெறுகிறது.

இந்த நடவடிக்கை தொடங்கியது முதல், பல மோசடி அலுவலகங்களை விட்டு மோசடியாளர்கள் தப்பிச் சென்றிருக்கிறார்கள். மோசமான நிலையில் வைக்கப்பட்டு வேலை வாங்கப்பட்டவர்கள் கம்போடியாவிலிருந்து நாடு திரும்பும் நிலை ஏற்பட்டுள்ளது.

## இந்தியா வரி குறைக்கும் பொருள்கள் பட்டியல்: பருப்பு வகைகளை நீக்கியது அமெரிக்கா

வாஷிங்டன், பிப்.13:

இந்தியா-அமெரிக்கா இடைக்கால வர்த்தக ஒப்பந்தம் மூலம், அமெரிக்க ஏற்றுமதிக்கு இந்தியாவில் வரி குறைக்கப்படும் அல்லது நீக்கப்படும் பொருள்களின் பட்டியலில் இருந்து பருப்பு வகைகளை அந்நாட்டு அரசு நீக்கியுள்ளது.

முன்னதாக, இந்த வர்த்தக ஒப்பந்தத்தின் செயல்திட்டம் குறித்த கூட்டறிக்கையில் உள்ள விவரங்கள் அடங்கிய விளக்க அறிக்கையை அமெரிக்க அதிபர் மாளிகை செவ்வாய்க்கிழமை வெளியிட்டது. அதில் அமெரிக்காவில் இருந்து இறக்குமதியாகும் சில பருப்பு வகைகளுக்கு இந்தியா வரி விதிக்காது அல்லது குறைவாக வரி விதிக்கும் என்று கூறப்பட்டிருந்தது. இதில், பருப்பு வகைகள், டி.டி.ஜி.எஸ். என்படும் கால்நடைத் தீவனமாகப் பயன்படுத்தப்படும் தானியங்களில் இருந்து எத்தனால் எடுக்கப்பட்ட பிறகு வரும் சக்கை, சிவப்பு சோளம், பதப்படுத்தப்பட்ட பழங்கள், சோயாபீன் எண்ணெய், ஒயின், வால்நட் உள்ளிட்ட மரங்களில் இருந்து பெறப்படும் பருப்புகள் உள்ளிட்டவை இடம்பெற்றிருந்தன. அடுத்த 5 ஆண்டுகளில் அமெரிக்காவில் இருந்து 500 பில்லியன் டாலர் (சுமார் ரூ.45 லட்சம் கோடி) அளவுக்கு எரிசக்தி, தொலைத் தொடர்பு தொழில்நுட்பம், வேளாண்மை, நிலக்கரி சார்ந்த பொருள்களை வாங்குவதற்கு இந்தியா உறுதியளித்துள்ளது என்று கூறப்பட்டிருந்தது. புதிய அறிக்கையில், உறுதியளித்துள்ளது என்ற வார்த்தைக்குப் பதிலாக உத்தேசித்துள்ளது என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. அமெரிக்க வேளாண் பொருள்கள் இறக்குமதி குறித்து ஏற்கெனவே இந்தியாவில் அச்சம் நிலவி வரும், அமெரிக்கா வெளியிட்ட பட்டியலில் பருப்பு வகைகளும் இருந்தது பரபரப்பை ஏற்படுத்தியது. இந்நிலையில், அப்பட்டியலில் இருந்து பருப்பு வகைகளை நீக்கி புதிய அறிவிப்பு ஒன்றை வெள்ளை மாளிகை வெளியிட்டுள்ளது.

## புற்றுநோய் வருவதை 10 ஆண்டுகளுக்கு முன்பே கண்டறியும் ரத்தப் பரிசோதனை!

வாஷிங்டன், பிப்.13:

ஆண்டுதோறும் இது அதிகரித்து வரும் நிலையில், கருப்பை வாய் புற்றுநோய் போல இதனை முன்கூட்டியே கண்டறியும் வழிமுறைகள் இல்லை. இதனால், தலை மற்றும் கழுத்தில் கட்டிகள் அபரிமிதமாக வளர்ச்சியடைந்த பிறகே கண்டறிய முடிகிறது. ஆனால், நாவல் லிக்விட் பயாப்சி டூல் மற்றும் எச்பிவி - டீப்சீக் போன்றவற்றின் மூலம், கழுத்து மற்றும் தலை புற்றுநோய் வருவதற்கு 10 ஆண்டுகளுக்கு முன்பே கண்டறிய முடியும் என்று மருத்துவ இதழில் வெளியாக கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புற்றுநோய் கட்டிகளால் இரத்த ஓட்டத்தில் வெளியேற்றப்படும் HPV DNAவின் நுண்ணிய துகள்களைக் கண்டறிய HPV-DEEPSEEK எனப்படும் முறை, முழு-மரபணு வரிசைமுறையைப் பயன்படுத்துகிறது. இந்தக் குழுவின் ஆய்வுகள், ஏற்கனவே உள்ள நோயறிதல் முறைகளை விட மிகவும் சிறப்பாக செயல்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தக் குழு 56 ரத்த மாதிரிகளை பரிசோதனை செய்து, அதில் 28 பேருக்கு கழுத்து மற்றும் தலை புற்றுநோய் வருவதற்கான சாத்தியக் கூறுகளைக் கண்டறிந்து அதனை முன்கூட்டியே தடுத்து சிகிச்சை அளிக்கப்பட்டது. இதில் 22 பேருக்கு புற்றுநோய் கட்டிகளின் துகள்கள் தென்பட்டதாகவும் கூறப்படுகிறது. எனவே, மக்கள் இதுபோன்ற சோதனைகளை மேற்கொள்வதன் மூலம் முன்கூட்டியே கழுத்து மற்றும் தலை புற்றுநோய்களிலிருந்து தற்காத்துக் கொள்ள முடியும் என்று கூறப்படுகிறது.

## உலகின் மிக நீளமான மலைப்பாம்பு கண்டுபிடிப்பு..!

இந்தோனிசியா, பிப்.13:

இந்தோனேசியாவின் சுலவேசி தீவின் மரோஸ் பகுதியில் உலகின் மிக நீளமான ராட்சத பெண் மலைப்பாம்பு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. 7.22 மீட்டர் நீளமும், சுமார் 96.5 கிலோ எடையும் கொண்ட இந்த மலைப்பாம்பு கின்னஸ் உலக சாதனை புத்தகத்தில் இடம்பெற்றுள்ளது. இந்த பாம்புக்கு இபு பரோன் என்று பெயரிடப்பட்டுள்ளது.

இபு பரோன் ரெட்டிகுலேட்டட் மலைப்பாம்பு வகையைச் சேர்ந்தது. உலகின் மிக நீளமான பாம்பு இனமாக ரெட்டிகுலேட்டட் மலைப்பாம்புகள் ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இவை பொதுவாக 3 முதல் 6 மீட்டர் (10 முதல் 19 அடி) வரை நீளம் கொண்டவை. 20 அடிக்கு மேல் நீளமான பாம்புகள் மிகவும் அரிதானவை.

இபு பரோனின் நீளம் அதற்கு மயக்க மருந்து கொடுத்து எடுக்கப்படவில்லை என்று கின்னஸ் உலக சாதனை அமைப்பு தெரிவித்துள்ளது. ஒருவேளை அதற்கு மயக்க மருந்து கொடுத்து அதன் உடல் முழுமையாக ஓய்வெடுக்கும்போது அளவீடு செய்தால் அது மேலும் 10 சதவீதம் நீளமாக 7.9 மீட்டர் வரை (26 அடி) இருக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அமெரிக்க காவல் வாகனம் மோதி பலியான இந்திய பெண் குடும்பத்துக்கு ரூ.265 கோடி இழப்பீடு

வாஷிங்டன், பிப்.13:

கடந்த 2023ஆம் ஆண்டு அமெரிக்காவில் காவல்துறை வாகனம் மோதியதில் பலியான ஆந்திரப் பிரதேசத்தின் கர்னூல் மாவட்டத்தைச் சேர்ந்த ஜாஹ்னவி கண்டுலா (23) என்ற இளம்பெண் குடும்பத்துக்கு ரூ.265 கோடியை வழங்க சியாட்டில் நகர நிர்வாகம் ஒப்புதல் அளித்துள்ளது.



அமெரிக்காவின் சியாட்டில் நகரிலுள்ள 'நார்த் ஈஸ்டெர்ன்' பல்கலைக்கழகத்தில் மேற்படிப்பு படித்து வந்த கண்டுலா, சாலையைக் கடக்கும்போது, வேகமாக வந்த காவல்துறை வாகனம் மோதி பலியானார்.

இது குறித்து வெளியான தீர்ப்பில், ஜாஹ்னவி கண்டுலா மரணம் இதயத்தை நொறுக்குவதாக உள்ளது. இந்த இழப்பீடு மூலம் கண்டுலா குடும்பத்துக்கு ஓரளவுக்கு நிவாரணம் கிடைக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே, விபத்தை ஏற்படுத்திய காவலர் மீது நடவடிக்கை எடுக்கவில்லை என்று குடும்பத்தினர் போராடி வந்த நிலையில், இழப்பீடு குறித்து இதுவரை எந்தக் கருத்தும் தெரிவிக்கவில்லை.

கடந்த 2023ஆம் ஆண்டு ஆண்டு ஜனவரி மாதம் 23-ஆம் தேதி, சியாட்டில் நகரில் சாலையை கடக்க முற்பட்டபோது அவ்வழியாக வேகமாக வந்த காவல்துறை ரோந்து வாகனம் மோதியதில் மாணவி ஜாஹ்னவி கண்டுலா 100 அடி தொலைவுக்கு தூக்கி வீசப்பட்டதில், சம்பவ இடத்திலேயே பலியானார்.

சம்பவத்தன்று வாகனத்தை இயக்கிய காவல்துறை அதிகாரி கெவின் டேவ், அதிவேகமாக, 100 கி.மீ வேகத்துக்கும் அதிகமாக, வாகனத்தை ஓட்டியதே இந்த கோர விபத்துக்கான முக்கிய காரணமாக சொல்லப்படுகிறது.

அதிவேகமாக வாகனத்தை இயக்கும் போது, சாலையில் செல்லும் பயணிகளை எச்சரிக்கும் வகையில் வாகனத்தின் சைரன் ஒலிக்கப்படவில்லை என்பதும், முகப்பு விளக்குகள் எரியப்படாததால், இவற்றை கவனிக்காத மாணவி ஜாஹ்னவி கண்டுலா, சாலையை கடக்க முயன்றபோது கண்ணிமைக்கும் நேரத்திற்குள் விபத்து நேர்ந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.